Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
දිනමුරසු වාරමලර්
ஒக். 23-29, 1994
ரூபா 9/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA ... WEEKLY முரசு 73



உருவாகிவரும் புதிய நெருக்கடிகள்

## காமினியின் உத்திகள்

## சமாளிப்பாரா சந்திரிக்கா?

தேர்தல் நிலவர ரிப்போர்ட்



என்ன நடந்தது இவருக்கு?!



ரசிகனின் இலக்கிய நயம்

## கூண்டுக்குள் காதல்

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
பூர்வாங்கப் பேச்சுக்கள்
புலிகளுக்கும்-அரசுக்குமிடையே
யாழில் ஆரம்பமாகியுள்ளன.

புலிகளின் தளத்துக்கு
அரசாங்கம் தன் பிரதிநிதிகளை
சென்று பேசி, நிலைமைகளை கண்டுவர
அனுப்பி வைத்தமையை
அரசாங்கத்தின் நல்லெண்ணத்தை
எடுத்துக்காட்டும் நடவடிக்கை எனலாம்.

அதே சமயம்-
புலிகளின் பலத்திற்கான அங்கீகாரமாகவும்,
புலிகளை புறக்கணித்துவிட்டு நடக்கும்
தீர்வு முயற்சிகள் வெற்றியாகாது
என்பதனை வெளிப்படுத்தும்
அரசியல் நிகழ்வாகவும் கொள்ளலாம்.

தேவையானால் இங்கே வாருங்கள்
பேசலாம் என்று சொல்லக்கூடிய
பலம் புலிகளுக்கிருக்கிறது.

தூதுக்குழு விஜயங்கள்,
தரகு முயற்சிகள்
எதுவுமே இல்லாமல்
இரு தரப்புமே நேரடியாக
பேசிக்கொள்ளும் நிலை நல்லதுதான்.

புலிகளைப் பொறுத்தவரை
இடைத் தரகு முயற்சிகளுக்கும்
அப்படி முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கும்
முக்கியத்துவம் கொடுக்க விரும்புவதில்லை.
இதனை புரிந்துகொள்ளாத சிலர்
தமது பிரபலத்திற்காக
புலிகள் சொல்லாத சேதிகளையும்
செய்திகளாக வெளியிட்டுக் கொண்டும்
தமது விரல் நுனியில்
சமாதானத்தீர்வு இருப்பதாகவும்
அழகான கற்பனைகளில்
ஆழ்ந்து போயிருந்தார்கள்.

போராட்டத்திற்கு புறம்பான எவரும்-
போராட்டத்தின் பெயரால்
குளிர்காய்ந்து கொள்ள
பிரபாகரன் சந்தர்ப்பம் கொடுப்பதில்லை.

பிரபாவின் நடவடிக்கைகள், யாவும்
சரியானவைதான் என்று சொல்ல முடியாது.
ஆனால்- பிரபாவின் நடவடிக்கைகளில்
தவறானவர்களை ஊக்குவித்து விடும்
போக்குகள் காணப்பட்டதில்லை.

வியர்வை சிந்தி விதைத்தவர்களே
விளைந்ததை அறுக்கவும் வேண்டும்.
வேறு யாரும் அதற்கு
உரிமை கோரி வரக்கூடாது
என்பது-கொள்கையாக இருப்பதால்தான்
தரகர்கள் வேண்டாம்;
தூதுக்குழுக்கள் வந்து கருத்தறியலாம்.
பேச்சில் கலக்க முடியாது.

என்றெல்லாம் புலிகள் தரப்பில்
உறுதியாக உரைக்கப்பட்டு வந்தது.

புலிகள் அவ்வாறு கூறாவிட்டால்-
அப்படி ஒரு நிலை எடுத்திராவிட்டால்
தரகர்களே தலைவர்களாகியும் இருப்பர்.

இப்போது புலிகள் நேரடியாகவே
அரசுப் பிரதிநிதிகளோடு பேசுகிறார்கள்.

அதுவும் தம்மைத் தேடிவரும்
ஒரு நிலையில் இருந்துகொண்டு
பேச்சு நடத்துகிறார்கள்.

ஒடுக்கப்பட்ட இனத்தின் பிரதிநிதிகள்
இப்படியொரு பலத்தில் இருந்து
பேசுவது இனத்தின் நலனுக்கு
ஏற்றதுதான். வரவேற்கப்பட வேண்டியதுதான்.

ஆனால்-இந்தப் பேச்சுக்கு வெளியே
தமிழ் கட்சிகள் பல உள்ளன.
முஸ்லிம் காங்கிரசும் இருக்கிறது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில்
தமிழ் பேசும் மக்களது
ஐக்கியப்பட்ட குரலை
ஓங்கி ஒலிக்க வைக்கக்கூடிய
திறந்த மனதோடு புலிகள்
நடந்து கொள்வார்களேயானால்
புதிய சூழல் தோன்ற ஏதுவாகும்.

□□

பேச்சுவார்த்தைகள் தொடர்பான
இரு தரப்பின் நிலைப்பாட்டையும்
வெளிப்படுத்தல்-விமர்சித்தல்
உள்ளதை உள்ளபடி சொல்லுதல்
என்பவை- பத்திரிகையின் கடமை.

சமாதானம் இனியது- பெறுமதியானது.
முரசுக்கும் எம் மக்கள்
சமாதான வெளிச்சத்தில்
நிம்மதியான வாழ்வு காணவேண்டும்
என்பதில் விருப்பமும்-வேட்கையும் உண்டு.

ஆனால்-எம் விருப்பம்-வேட்கை
என்பவற்றுக்கு ஏற்ப
செய்திகளை மறைத்து தரமுடியாது.
எம் ஆசைகள் போல
நிகழ்ச்சிகள் அமைவதில்லை.

கூட்டத்தோடு நின்று கோசம் போடுவது
பத்திரிகையின் வேலையல்ல.
கோச முழக்கத்துக்குள் வெளியே கேட்காமல்
போகும்
விசயங்களை வெளிப்படுத்துவதுதான்
வாசகர் கொள்ளும் விசுவாசத்திற்கு
முரசு தரும் நம்பிக்கையாக இருக்கும்.

அந்த வகையிலேதான்-
வெளியாத- தெரியாத செய்திகளையும்
முரசு உங்களுக்குத் தரும்.
சார்பில்லாத சரியான விமர்சனத்தை
முரசு வெளிப்படுத்தும்.

□□

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## ஒளியில் நட

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனும் இருளில் இராதபடிக்கு நான் உலகத்தில் ஒளியாக வந்தேன்"-யோவான் 12:46

நடு இரவில் இருப்பதுபோல் இந்த உலகம் இருட்டில் இருக்கிறது. நம்பிக்கையினால் நாம் வெளிச்சம் உள்ளவர்களாய் இருக்கவும் மற்ற மக்களைச் சுற்றியிருக்கும் இருளில் நாம் இல்லாதிருக்கவும் இயேசு இவ்வுலகிற்கு வந்தார்.

"எவனும்" என்பது பரந்தகன்ற சொல். இது உங்களையும் என்னையும் குறிக்கிறது. நாம் இயேசுவை நம்பினால் மரண நிழலில் இருக்க மாட்டோம். ஒரு நாளும் முடிவடையாத வெப்பம் பொருந்திய வெளிச்சத்தில் இருப்போம். இப்போதே நாம் அந்த வெளிச்சத்துக்கு வராமல் இருப்பது ஏன்?

சில வேளைகளில் ஒரு மேகம் நம்மேல் நிழலிடலாம். ஆனால் நாம் இயேசுவை நம்பினால் நாம் இருளில் நிலைத்திருப்பதில்லை. நமக்குப் பகலில் இருப்பதுபோன்ற வெளிச்சம் அளிக்க அவர் வந்தார். அவர் வந்தது வீணாய்ப் போய்விடலாமா? நமக்கு நம்பிக்கை இருந்தால் சூரிய வெளிச்சத்தைப் பெறும் சிறப்புரிமை உள்ளவர்கள் ஆவோம். அவ்வெளிச்சத்தைப் பெற்று அனுபவிப்போமாக. இயற்கையான ஒழுக்கச் சீர்கேடும், அறியாமையும், ஐயுறவும், மனக் கசப்பும், பாவமும், திகிலுமான இரவிலிருந்து நம்மை விடுவிக்கவே இயேசு வந்தார். சூரியன் உதித்தால் வெளிச்சமும் வெப்பமும் அளிக்காமற் போவதில்லை. அதைப்போல அவரும் வீணாக வரவில்லை என்பதை விசுவாசிகள் எல்லோரும் அறிவார்கள்.

அன்பான சகோதரனே! சகோதரியே, உன் சோர்வை உதறித்தள்ளு. இருளில் நிலைத்திராமல் வெளிச்சத்தில் நிலைத்திரு. உன் நம்பிக்கை, மகிழ்ச்சி, பரலோகம் எல்லாம் இயேசுவில்தான். அவரை நோக்கிப்பார். அவரையே நோக்கிப்பார். சூரிய உதயத்தின்போது பறவைகளும் கிருபாசனத்தின்முன் தேவதூதர்களும் மகிழ்ச்சி அடைவது போன்ற மகிழ்ச்சியை நீயும் பெறுவாய்.

குணத்தி பிரபா-கனடா.

## ஆன்மீகம்



## கப்ரில் தொழுத பெரியார்

ஹஜ்ரத் ஃதாபிதே பன்னானீ ரஹ்மத்துல்லாஹி (அலை) ஹதீஸ்க்கலை நிபுணர் ஆவார்கள். அல்லாஹ்வின் சமுகத்தில் அளவுக்கு மீறி அழுதுகொண்டிருப்பார்கள். இதனால் கண் பார்வை போய்விடும் என்று ஒருவர் எச்சரித்ததற்கு, "அல்லாஹ்வின் சன்னிதானத்தில் அழாத கண்களால் பயனென்ன?" என்று பதில் கூறினார்கள். மேலும், "கப்ரில் யாருக்கேனும் தொழுவதற்கு அனுமதி அளிப்பதாக இருந்தால் எனக்கும் அவ்வாறே அனுமதி அளிப்பாயாக" என்று அடிக்கடி துஆ செய்வார்கள்.

அபூஸினான் ரஹ்மத்துல்லாஹி (அலை) கூறுகிறார்கள். "ஃதாபிதே பன்னானீ ரஹ்மத்துல்லாஹி (அலை) இறந்த பின்னர் அன்னாரை அடக்கம் செய்யப்பட்டபோது கப்ரிலிருந்து ஒரு செங்கல் விழுந்து அதன்மூலம் ஒரு துவாரம் ஏற்பட்டது. அதன் வழியாக நான் பார்த்தபோது, ஃதாபிதே பன்னானீ ரஹ்மத்துல்லாஹி (அலை) கப்ரில் தொழுது கொண்டிருந்தார்கள். உடன் பக்கத்தில் இருந்தவரிடம், 'இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பாருங்கள்" என்று கூற அவர் ஏதும் பேசாதிருக்கும்படி என்னிடம் கூறினார்.

"நல்லடக்கம் முடிந்த பின்னர் நான் அப்பெரியாரின் வீட்டுக்குச் சென்று அவர்களுடைய மகளாரிடத்தில் ஃதாபிதே பன்னானீ ரஹ்மத்துல்லாஹி (அலை) என்ன அமல் செய்து வந்தார்கள்? என்று கேட்டேன்." ஏன் அதைக் கேட்கிறீர்கள்?" என்று அவர்கள் கேட்டார்கள். நடந்த விபரத்தைக் கூறினேன். அப்போது அந்த அம்மையார், "என் தந்தை ஐம்பது ஆண்டுகளாக இரவில் விழித்து வணங்கினார்கள். சுபஹு" நேரத்தில், யாருக்காவது கப்ரில் தொழும் பாக்கியத்தைத் தருவதாக இருந்தால் தமக்கும் அவ்வாறே அருள்புரிய வேண்டும் என்பதாக அல்லாஹ்விடம் துஆ செய்தார்கள்" என்பதாகக் கூறினார்கள்."

வெல்லம்பிட்டிய-கவிப்பிரியா நிஷா.

## கவிதைப்போட்டி இல-70

வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும் வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்

### பரிசுக்குரிய கவிதை

**முழுகாமல்**
என்
தேசத்
திரு மாதா
சமாதானக்
கரு சுமந்து
முழுகாமலிருக்கும்
முத்தான
செய்தி கேட்டு
முதுமைக்கும்
வந்ததோ
மழலைக்
களிப்பு!

ரேணுகா நிபாய்தீன்
ஏறாவூர்-02.

### வியக்கப்பட்டவை

இளையோரும் முதியோரும்
இன்புற்று ஊஞ்சலாடும்
இனியநாள் எம் மண்ணில்
இனிவரும் எப்போது?
சீ.தங்கவடிவேல்-மட்டக்களப்பு.

**ஊஞ்சல்**
ஊஞ்சலாடும் வயதில்லைதான்
இருப்பினும் ஊத விறகு வேணுமே!
ஊரார் சிரித்தால் சிரிக்கட்டும்
என் ஊனப் பிள்ளைகள் மகிழ்வாரே
சுரேஷ் இராஜநாயகம்
மட்டக்களப்பு.

**பாரதிப் பாட்(டி)டு**
ஆடி விளையாடு பாட்டி! நீ
ஆறியமரலாகாது பாட்டி
பாடி விளையாடு பாட்டி!!-இதற்கு
பருவங்கள் தடையல்ல பாட்டி
மஸீதா ஏ.காதர்
ஏறாவூர்-06.



பாணின்
விலைக் குறைப்பால்
பாட்டிக்குக் கூட-வயது
பதினாறாகி விட்டதோ?
எஸ்.அலெக்சாந்தர்
கொட்டகலை.

**துள்ளாட்டமென்ன?**
தள்ளாத வயதில்
துள்ளாட்டமென்ன?
பொல்லாத போர்
புறங்காட்டுமென்றோ?
ஏ.அஹ்மது ஜுனைது
ஏறாவூர்-06.

## கவிதைப் போட்டி இல-73



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும் சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பி வையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா நூறு. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 29.10.1994.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 73
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

**குஷி**
பாண் விலை குறைஞ்சி போச்சி!
டென்! டென்! டென்! டென்
பருப்பு விலை குறைஞ்சி போச்சி!
டென்! டென்! டென்! டென்
பஞ்சம் எல்லாம் பறந்து போச்சி!
டென்! டென்! டென்! டென்
பழைய ஞாபகம் திரும்பிடிச்சி!
டென்! டென்! டென்! டென்
ராமசாமி ரமேஷ்குமாரி
டெஸ்போட்-நானுஓயா.

**ஐம்பதைத் தாண்டிய ஆசை**
ஐந்தில் தோன்றாத ஆசை
ஐம்பதைத் தாண்டி வந்ததால்
ஆலமரத்தில் ஊஞ்சல்கட்டி
ஆசை தீர்க்க திட்டமோ?
கே.கண்ணன்-ரிலாகலை.

**அமைதி**
அகதியென வாகி
அல்லலுற்ற போதும்
அமைதியுறவா இந்த
அந்தரத்து ஆட்டம்
ஏ.சீ.அப்துல் றகுமான்-ஏறாவூர்-06.

**மயானங்கள்**
பாதங்கள் பதித்திடவே,
பலியான மனித இனம்
புதைக்கப்படா ஓரிடத்தைப்
பகலிரவாய்த் தேடுகின்றேன்
பலனிங்கே தெரிகிறதா?
ஜெஸிமா பாப்பன்குட்டி-கொழும்பு-15.

**இளமை ஏக்கம்**
தள்ளாத வயதினிலே,
தணிந்திடுமோ இளமை ஏக்கம்
தளிர்ந்திடுமோ மீண்டும்
தாவிப்பாயும் இளமை?
ஆர்.ஹிபா-கம்பொல.

**ஊஞ்சல்**
அந்த நாள் போல
இந்த நாள் இல்லை
ஆனாலும் என்ன
ஆடிப் பார்த்திடலாமே?
றோஸ்-பண்டாரவளை.

**முதுமை ஊஞ்சலாடுகிறது!**
உற்சாக ஊஞ்சலாடும்
முதுமை-வயதின் தளர்வு,
பிணிகளை வென்றிட்ட
புதுமை!
ஷர்மி-கண்டி.

**ஆசை...**
எண்பதிலும் ஆசை வரும்.
ஆசை வந்தால் ஆட்டம் வரும்
இதில் வயது பேதம் கிடையாதம்மா
நானாட நீயாட சுகம்தானம்மா!
எஸ்.எ.ப்.ஹிதாயா-ஹல்துமுல்லை.

**ஊஞ்சல்**
மனிதாபிமானம் இல்லாத
மனிதர் முன்னே
மனித நேயம் இப்படித்தான்
ஸிபானா சுபைர்-கலஹா.

## வாசகர்சாலை

**பட்டியலில் நாமும்**

அள்ள அள்ள குறையாத அட்சய பாத்திரம் நீ முரசே, நீ அள்ளித்தரும் ஆக்கபூர்வமான விடயங்கள் எம் சிந்தைக்கு விருந்தளிக்கின்றன. அகிலத்தில் உனை போற்றும் ஆயிரமாயிரம் வாசகர்கள் பட்டியலில் நாமும் இடம்பிடித்து கொள்கிறோம்.

செல்விகள்-எஸ்.சுமித்ரா, எஸ்.சுகந்தினி
நாராங்கலை.

□□

**கவிதை வரும்**

என் இதயம் கவர்ந்த முரசுக்கு,

அறிவை புகட்டக்கூடிய அம்சங்களை கவர்ந்துவரும் பொன் முரசே...

நம் தாயகத்தில் இலை மறை காயாகவுள்ள எழுத்தாளர்களையும், கவிஞர்களையும், சாதனையாளர்களையும் தூண்டிவிட்டு வெளிக்கொணரும் தினமுரசுக்கு வாழ்த்துக்கள் பல...

"காதலித்தால் கவிதை வரும் என்பார்கள். ஆனால், முரசை படித்தால் அல்லவா கவிதை வருகிறது."

கா.சு.பார்த்திபன்-செல்சியூர்.

□□

அன்பின் என் பொன் முரசே, நீ வாரம்தோறும் அள்ளி வருவது அத்தனையும் அர்த்தமுள்ளனவல்லவா? ரசிகனின் தொடர் கதை, சிறுகதை, எக்ஸ்ரே ரிப்போர்ட், அரசியல் அலசல், சினிவிசிட் இவைகளுக்கு என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள். தொடர்ந்தும் உன் பணி தொடரட்டும்.

இ.குகதாஸ்-கொழும்பு-15.

□□

திக்கெட்டும் தேன் சுவை தரும் தினமுரசே... நீ தரும் அத்தனை அம்சங்களும் ஆக்கங்களும் சூப்பர். உனை வாழ்த்த வார்த்தைகள் இல்லை. உன் சேவை மென்மேலும் வளர என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்.


சித்ரா மாணிக்கம்-களுதாவளை-மாத்தளை.

□□

**சிரித்தோம்-சிந்தித்தோம்**

பல அருமையான விடயங்களைத் தந்து பலரின் பாராட்டுதல்களைப் பெற்ற தினமுரசே, நீ தந்துள்ள தொடர் நவீனமும் கொலை விழும் நேரம், பாப்பா முரசு யாவும் அருமையானவை. குலுங்கக் குலுங்க சிரிக்க, சிந்திக்க வைக்கும் கத்தரித்த கடி ஜோக்ஸ் பலே. நீ தொடர்ந்தும் உன் பல்சுவை அம்சங்களை தந்து நம் உள்ளங்களை நெகிழவை.

ப. சஞ்ஜீவனி-மாத்தளை.



அன்பின் தினமுரசே, சுவை மிக்க செய்தியை அள்ளி வழங்கும் தங்க முரசே. நீ கொண்டுவரும் அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை. ரசிகனின் கொலை விழும் நேரம், இலக்கிய நயம், சினிவிசிட், மற்றும் மகாபாரதம் அத்தனை அம்சங்களும் அருமை. உனக்கு என் நல்வாழ்த்துக்கள்.

எஸ்.கலைக்குமார்-மொரக்கொல்ல.

□□

என் அன்பான முரசே,

நீ சுமந்து வரும் எக்ஸ்ரே ரிப்போர்ட், தகவல் பெட்டி, அரசியல் அலசல், மகாபாரதம், உட்பட பல அம்சங்களும் எமது சிந்தைக்கு அறிவூட்டும் வகையில் அமையும் முரசே,

நீ தினமும் வருவாயானால் சந்தோசம்.

புசல்லாவ ஆனந்தராஜ்.

என் அன்பிற்குரிய முரசே,

நீ தாங்கிவரும் அம்சங்கள் பிரமாதம். கவிதை, சிறுகதைகள், சினிவிசிட், இவை யாவும் இனிமையே. தொடர்ந்து உனது சேவைக்கு எங்கள் வாழ்த்துக்கள்.

எம்.அரசகுமார்.அபயசேகரன்-நமுனுகுல.

□□

அன்பின் நாயகி முரசே,

நீ அள்ளித்தரும் அத்தனை ஆக்கங்களையும் கண்டு வியக்கும் 'நாயகன்' யானே? அடுத்த நாள் உன்னைக் கண்டு விட்டால் என் மனதில் எழும் ஆனந்தத்தை நான் எப்படிச் சொல்வது? நாயகி முரசே, உன் ஆக்கங்கள் மேலும் மேலும் வளர இந்நாயகனின் இனிய வாழ்த்துக்கள்.

வி.ரமேஷ்கார்த்திக்-நீர்கொழும்பு.

□□

**ராஜதந்திரிக்கு சபாஷ்**

அனுபவ உண்மைகளை அலசி, ஆக்க பூர்வமான கருத்துக்களை அள்ளி வழங்குவதில் ராஜதந்திரிக்கு நிகர் அவரேதான். அதிர வைக்கும் அய்யாத்துரையாருடன் ரசிகனின் கொலை விழும் நேரம் திக்...திக்...

ரவிக்குமார் ஆறுமுகம்-டன்சினேன்.

எனதருமைக் காதல் முரசே!

எக்ஸ்ரே ரிப்போர்ட், அலசுவது ராஜதந்திரி போன்ற அரசியல் விமர்சனங்களும், பல்கலை விநோதக் குறிப்புக்களும், கொலை விழும் நேரம், சிறுகதை உட்பட இலக்கிய நயம் போன்ற கதை அம்சங்களும், வர்ண ஜாலங்களுடன் பார்ப்பவரைக் கவர்ந்திழுக்கும் உன் முக அமைப்பும் என்றென்றும் கால நேரம் தவறாது வெற்றி நடையுடன் முன்னேறி வர எனது பலகோடி வாழ்த்துக்கள்.

எம்.எச்.றவ்ஸ்தீன்
வாழைச்சேனை.04.

முரசு கொட்டும் இனிய முரசே, உனை எத்தனை முறை பார்த்தாலும் சலிப்பதில்லை. தினம் உன் திரு முகத்தைக்காண ஏங்கி நிற்பேன். நீ சுமந்து வரும் இளமைக்கு சுகந்தரும் ரசிகனின் இலக்கிய நயம் சூப்பர். படிக்க படிக்க இதயத்தை ஈர்க்கிறது. நீ நீடூழிகாலம் வாழ்க, உன் சேவை தொடர என் ஆயிரம் வந்தனங்கள்.

மயில்வாகனம்-மங்கேஸ்வரன்
முரட்கொட்டான்சேனை.

□□

முத்தான முத்தே தினமுரசே,

உன் கரங்கள் ஆன இலக்கிய நயம், பாப்பா முரசு, கவிதைப் போட்டி என்பன என் மனதை கொள்ளை அடித்துவிட்டது. இது போல் இன்னும் நீடித்து உன் கரங்களை பலவாக மாற்று!

பா.பிரதீபன்-அக்கரைப்பற்று-08.

□□

அன்பின் முரசே,

நீ வாரா வாரம் சுமந்துவரும் பல்சுவை அம்சங்களை அள்ளி வாசகர்களாகிய எம் உள்ளத்தை மகிழ வைக்கும் இன்ப முரசே, நீ இன்னும் பல சாதனைகளை புரிய வேண்டும் என மனதார வாழ்த்துகின்றோம்.

அம்ஜத், நாகராணி, யஸ்மின், சசி-ஹட்டன்.

□□

அன்பின் தினமுரசே,

நீ கொண்டுவரும் அத்தனை அம்சங்களும் அருமையிலும் அருமை. இருந்தாலும் எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு மிகவும் வழிகாட்டியாகவுள்ள அற்புதன் அண்ணாவின் நில்!கவனி!! முன்னேறு!!! என்ற அம்சத்தை இடையிடையே இடம் பெறாமல் செய்து எம்மை வதை செய்யாதே. தொடர்ந்து நில்!கவனி!! முன்னேறு!!! அம்சத்தை இடம்பெறச் செய்து எம்மை மகிழ்வடையச் செய்யவும்.

க.லிங்கேஸ்வரன்-பெரியநீலாவணை-01.

# யாழ் குடாநாட்டில் நடக்குமா ஜனாதிபதித் தேர்தல்?

# இரு தரப்பின் மத்தியிலும் பல தடைகள்!

### சம்மதம் வேண்டும்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை யாழ்ப்பாணத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் நடத்துவது பற்றிய பேச்சுக்கள் அடிபடுகின்றன.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதானால் புலிகள் அமைப்பின் சம்மதம் பெறப்படவேண்டும்.

தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற புலிகள் சம்மதிப்பார்களேயானால் அவர்கள் இலங்கையின் அரசியலமைப்பையும், இலங்கை ஒரே நாடு என்ற கொள்கையையும் ஏற்பதாகவே அர்த்தப்படும்.

தேர்தல்களில் பங்குபற்றுவோர் துரோகிகள் என்று அறிவித்தும், அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளிலும் ஈடுபட்ட புலிகள் அமைப்பினர் ஜனாதிபதித் தேர்தலை தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் நடத்த அனுமதிப்பர் என்று எதிர்பார்க்க முடியாது.

### சந்திரிக்காவுக்கு ஆதரவு

மறுபுறம், தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் பிரதமர் சந்திரிக்கா மீது நம்பிக்கை கொண்டுள்ளார்கள். அங்கு தேர்தல் நடத்தப்படுமானால் கணிசமான வாக்குகளை திருமதி சந்திரிக்காவே பெற்றுக்கொள்வார்.

தமிழ் மக்கள் அவர்மீது கொண்டுள்ள நம்பிக்கை தேர்தலில் வெளிப்படுவது புலிகளைவிட அரசுக்கே சாதகமாக அமையும். அதனை புலிகள் விரும்பமாட்டார்கள்.

மறுபுறத்தில் அரசாங்கத்திற்கும் சில சங்கடங்கள், சிக்கல்கள் ஏற்பட இடமுண்டு.

புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் தேர்தல் நடத்துவதானால் வாக்குச் சாவடிகளுக்கு பொலிசாரோ, படையினரோ பாதுகாப்பு வழங்க முடியாது.

### பொலிஸ்-இராணுவம்

யாழ் குடாநாட்டு எல்லைக்குள் உள்ள படை முகாம்களின் சோதனைக்கு உட்படக் கூடாது என்று அவற்றின் ஊடான போக்குவரத்துக்கே புலிகள் பொதுமக்களை அனுமதிப்பதில்லை. இந்த நிலையில் உள்ளே போய் பொலிசாரோ படையினரோ தேர்தல் கடமைகளில் ஈடுபட புலிகள் எப்படி அனுமதிப்பார்கள்?

பொலிஸ்-இராணுவம் இல்லாத வாக்குச் சாவடியில் தேர்தல் நடத்தப்பட்டால் ஐக்கிய தேசியக் கட்சி கடுமையாக ஆட்சேபிக்கும். அது மட்டுமல்லாமல் புலிகளது உதவியோடு, புலிகளிடம் யாழ்ப்பாணத்தை ஒப்படைத்து விட்டு திருமதி சந்திரிக்கா ஜனாதிபதியாகப் போவதாக தென்னிலங்கையில் பிரசாரம் நடைபெறும். அது சந்திரிக்கா அலையை பாதிக்கவே செய்யும்.

இந்நிலையில் எந்தக் கோணத்தில் நோக்கினாலும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவது இயலாத காரியம் என்றே தெரிகிறது.

### இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு.....

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு மக்கள் சென்று வாக்களிக்கும் சந்தர்ப்பமும் ஏற்பட இடமில்லை.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு அப்பகுதிகளில் இருந்து அகதிகளாகியுள்ள மக்கள் செல்வதற்கே புலிகள் அனுமதிப்பதில்லை.

இராணுவம் அங்கிருந்தெல்லாம் விலக வேண்டும் என்பதே புலிகளது கோரிக்கை. அதுதவிர சமீபத்திய பேச்சுவார்த்தையிலும் இராணுவம் மீது புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர். எனவே அப்பகுதிகளில் உள்ள வாக்குச் சாவடிகளுக்கு சென்று வாக்களிக்க புலிகள் அனுமதிப்பர் என்று எதிர்பார்க்க முடியாது.

## கடற்படைத் தாக்குதல்- 6 கடற்புலிகள் பலி!

9.10.94 அன்று வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் 'ஓஷன் டிரேடர்' கப்பல்மீது புலிகள் தாக்குதல் நடத்தி மூழ்கடித்தனர்.

அதனையடுத்து கடற்படையினர் அன்றைய தினம் நடத்திய தாக்குதல் ஒன்றில் கடற்புலிகள் ஆறுபேர் பலியானார்கள்.

உடனடியாக அச் செய்தியை புலிகள் அறிவிக்காதபோதும் கடந்த 14ம் திகதி ஆறு கடற்புலிகளின் நினைவுக் கற்கள் யாழ்ப்பாணத்தில் நடுகை செய்யப்பட்டன.

எதிர்பாராத கடல் மோதலில் அவர்கள் ஆறுபேரும் பலியானதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

## மட்டக்களப்பில் கெடுபிடி

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு மட்டக்களப்பில் பாதுகாப்புப் படையினரின் சோதனை நடவடிக்கைகள் தீவிரமாகியுள்ளன. மட்டக்களப்பு காவலரண் ஒன்றின் அருகே கைக்குண்டு வீசப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து கெடுபிடிகள் அதிகமாகியுள்ளன.

வடக்கே பேச்சுக்கள் நடப்பதாக செய்திகள் வருகின்றன. ஆனால் கிழக்கில் ஏற்கனவே உள்ள சுமுக நிலையும் கெட்டு வருகிறது என்று மட்டக்களப்பு மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

## "பேச்சுவார்த்தைக்கு குறுக்கே நிற்கிறது இந்தியா!

## 'தமிழீழ காவல்துறை பொறுப்பாளர்' கண்டனக் கணை!!

அரசுக்கும்-புலிகளுக்கும் இடையேயான பேச்சுக்களுக்கு, இந்தியா தடையாக இருப்பதாக 'தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர்' திரு. நடேசன் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற புலிகளின் பெண் போராளி 2வது லெப்டினன்ட் மாலதியின் 7வது நினைவு தினக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் அவ்வாறு கூறினார்.

10.10.1987ல் புலிகளுக்கும்-இந்திய இராணுவத்திற்கும் இடையே யாழ்ப்பாணம் கோப்பாயில் நடைபெற்ற முதல்நாள் சண்டையில் காயமடைந்த மாலதி சயனைட் உட்கொண்டு மரணமானார். இவர் மன்னாரைச் சேர்ந்தவர்.

மாலதியின் 7வது நினைவுநாள் கூட்டங்கள் கடந்த 10.10.94 அன்று யாழ் குடாநாட்டின் பல பகுதிகளில் நடைபெற்றன. கடைகள், அரச, பொது, மற்றும் புலிகளின் அலுவலகங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன. இந்தியாவுக்கு எதிரான ஒரு நிகழ்வுபோலவே அஞ்சலிக்கூட்ட உரைகள் அமைந்திருந்தன.

திரு.நடேசன் தனது உரையில், இலங்கை-இந்தியா என்னும் இரு சக்திகளை எதிர்த்து தமிழீழ தாய்குலம் போரில் ஈடுபட்டு வருகிறது.

இந்திய இராணுவம் தமிழீழத்திலிருந்து வெளியேறிய பின்னரும் இந்தியா எமது பிரச்சனையில் தலையிட்டு வருகிறது. மறைமுகமாகவோ இரகசியமாகவோ தலையிட்டுத்தான் வருகிறது.

எமது போராட்டத்திற்கு எதிராக இந்தியா செயற்படுகிறது. மக்கள் நலனுக்காக, மக்களின் விடிவுக்காக நாம் சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தைக்கு செல்லத் தயாரானபோதும் இந்தியா இதற்கு குறுக்கே நிற்கிறது" என்று பா.நடேசன் குற்றம் சாட்டினார்.

## பிரதமரின் துணிச்சலான பேட்டி

### புலிகளும் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிப்பு!

பிரதமர் சந்திரிக்கா பி.பி.சிக்கு அண்மையில் வழங்கியுள்ள பேட்டிக்கு அரசியல் விமர்சகர்கள் மத்தியில் வரவேற்பு நிலவுகிறது.

இனப்பிரச்சனை பற்றி இதுவரை சிங்களத் தலைவர்கள் எவரும் இவ்வாறு வெளிப்படையாகப் பேசவில்லை என்று அந்த விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

சிங்கள் மக்கள் விட்டுக்கொடுப்புடன் நடந்துகொள்ளவேண்டும். படையினர் மத்தியில் சிலர் பேச்சுவார்த்தைக்கு எதிராகச் செயற்படுகின்றனர் என்ற கருத்துக்கள் துணிச்சலான அணுமுறையைக் குறிப்பதாகக் கூறுகின்றனர்.

பூநகரிப் பாதைத் திறப்பு குறித்தும், போர் நிறுத்தம் பற்றியும் அரசு ஆலோசித்து வருவதாக பிரதமர் கூறியிருப்பதை யாழ்ப்பாணத்தில் புலிகளது பிரசார சாதனங்கள் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்துள்ளன.

### மீனவர் பலி

இதேவேளை கடந்த 16ம் திகதி (முதல் சுற்றுப் பேச்சு முடிந்த இருநாட்களில்) வடமாராட்சியில் உள்ள கற்கோளம் கடற்பரப்பில் கடற்படையினர் சுட்டு இருமீனவர்கள் பலியானதாக புலிகளின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிளம்பிவரும் புதிய சர்ச்சை!

### திருகோணமலை அனல் மின்நிலைய குத்தகை

பல கோடி ரூபா செலவில் திருகோணமலையில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த பாரிய அனல் மின் நிலைய நிர்மாணப் பணிக்கான குத்தகை, விலை மனுக் கோரலுக்கு புறம்பாக, கனடாவைச் சார்ந்த மிகாலி இன்டர்நெஷனல் நிறுவத்தினடம் ஒப்படைக்கப்பட்டது குறித்து ஏற்கனவே சர்ச்சைகள் தலைதூக்கக் காணப்பட்டிருந்தன.

ஏற்கனவே குத்தகையைக் கையேற்றிருந்த மிகாலி இன்டர்நெஷனல் நிறுவனம் தனது இலங்கைப் பிரதிநிதி என்ற ரீதியில் இங்கு இயங்கிவரும் கோணல் லிமிடட் என்ற நிறுவனத்திடம் நிர்மாணப் பணியை பின்பு ஒப்படைத்திருந்தது.

இக் கோணல் லிமிடெட் என்ற நிறுவனம் நிர்மாணத் துறையில் நீண்ட அனுபவத்தை கொண்டதல்ல வென்றும் அதன் மூலதனம் மொத்தம் 50 இலட்சம் மாத்திரமே கொண்டுள்ளதென்றும் இந்தச் சிறிய மூலதனத்தைக் கொண்ட நிறுவனத்திடம் பல கோடி செலவில் அமையவுள்ள கட்டிட நிர்மாணத்தை ஒப்படைத்திருக்கக் கூடாதென்றும் குறிப்பிட்டுவரும் விஷயமறிந்த வட்டாரங்கள்,

இத்திட்டத்திற்கான நிர்மாணப் பணியை மேற்கொள்ளும் ஆற்றல் கோணல் லிமிடெட் நிறுவனத்துக்கு கிடையாதென்றும் அந் நிறுவனம் இப்பணியை வேறேதாவது நிறுவனம் ஒன்றுக்கு கையளித்து கமிஷனை பெற்றுக்கொள்ள விளையலாமெனவும் மேலும் சுட்டிக்காட்டியுள்ளன.

# புதிய அரசுக்கு இராணுவத் தீர்வில் நாட்டமில்லையானால்-

# பூநகரியில் இருந்து விலக்கவேண்டும் படையை!

## முதல்சுற்றுப் பேச்சில் புலிகள் வற்புறுத்தல்!

இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க பிரதிநிதிகளுக்கும் இடையே கடந்த 13-14ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் முதல் சுற்றுப் பேச்சு நடந்து முடிந்துள்ளது.

அந்த பேச்சுவார்த்தையின் இறுதியில் இரு தரப்பு பிரதிநிதிகளதும் கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் 'புலிகளின் குரல்' வானொலியில் 14.10.94 அன்று இரவு 9மணிக்கு பூர்வாங்க கூட்டறிக்கை என்று வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

### 12 மணி நேர பேச்சு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், சிறீலங்கா அரசின் பிரதிநிதிகளுக்கும் இடையே கடந்த இரு நாட்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமான முறையில் நடைபெற்றன. பல அமர்வுகளில் நடைபெற்ற பேச்சுக்கள் 12 மணித்தியாலங்கள் நடைபெற்றன.

போர்நிறுத்தம், போக்குவரத்துக்கான பாதைத் திறப்பு, பொருளாதாரம், புனர்நிர்மாணம் போன்ற விடயங்கள் பேச்சுவார்த்தையில் முக்கிய இடம்பெற்றன.

விடுதலைப் புலிகள் குழுவுக்கு தலைமை தாங்கிய திரு.காரிகாலன் பேச்சுக்களை ஆரம்பித்துவைத்து உரையாற்றினார். அவர் தமது உரையில்,

### திணிக்கப்பட்ட யுத்தம்

"நல்லெண்ணத்துடனும், திறந்த மனதுடனும் விடுதலைப் புலிகளாகிய நாம் பேச்சுவார்த்தையில் பங்குபற்றுகிறோம்.

"2ம் கட்ட ஈழப்போர் ஆரம்பமான காலம்தொட்டு எமது இயக்கத்தின் தலைமை போர் நிறுத்தத்தையும், சமாதான பேச்சுவார்த்தைகளையும் வலியுறுத்தி வருகிறது. எனினும் முந்தைய அரசு இக் கோரிக்கையை நிராகரித்து வந்தது.

"திருமதி சந்திரிக்கா குமாரதுங்காவின் அரசாங்கம் சமாதான வழியில் இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண முன்வந்துள்ளது.

"எமது மக்கள் மீது திணிக்கப்பட்ட யுத்தம் சமூக-பொருளாதார பிரச்சனைகளை உருவாக்கியுள்ளது. ஆரம்பகட்டப் பேச்சுவார்த்தைகளில் இந்தப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

### போர் நிறுத்தம் அவசியம்

"சமாதானமும், இயல்பு நிலையும் ஏற்படுவதற்கு யுத்த நிறுத்தம் அவசியம். பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நடைபெறுவதற்கும் யுத்த நிறுத்தம் அவசியம்" என்று கரிகாலன் கூறினார்.

அரச பிரதிநிதிகள் குழுவுக்கு தலைமை தாங்கிய திரு.பாலமட்ட பந்தி உரையாற்றும்போது,

### அரசு அக்கறை

"தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகளைத் தீர்த்துவைப்பதற்கு அரசாங்கம் மிக ஆவலாக உள்ளது. விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி இப் பிரச்சனைகளை தீர்த்துவைக்குமாறு பிரதமர் என்னைப் பணித்துள்ளார்.

தமிழர்களின் பிரச்சனை ஒரு தேசியப் பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. இதனை தீர்த்துவைப்பதில் அரசாங்கம் அதிக அக்கறை கொண்டுள்ளது. இப்பிரச்சனைகளை தீர்ப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதே எமது நோக்கம்" என்றார்.

### புதிய நூல் நிலையம்

யாழ்ப்பாண நூல் நிலையம் எரிந்தமைக்கான காரணத்தை கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்க விசாரணைக்குழுவொன்றை நியமிப்பது பற்றியும், புதிய நூலகத்தை மீள அமைப்பது பற்றியும் பேச்சுவார்த்தையில் ஆராயப்பட்டது.

### பூநகரியில் இராணுவம் விலகவேண்டும்

போக்குவரத்துப் பாதையை திறந்து விடுவது சம்பந்தமாக பேசப்பட்டது. பூநகரியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை விலக்கி, பூநகரிப் பாதையைத் திறந்துவிட வேண்டும் என்று விடுதலைப் புலிகள் வலியுறுத்தினர்.

பூநகரிப் பாதையை திறந்துவிடுவதால் தமிழ் மக்களின் போக்குவரத்துப் பிரச்சனை சீர்படும் என்றும், வடபகுதியில் இயல்பு நிலை தோன்ற அது வழிவகுக்கும் என்றும் புலிகள் எடுத்துக் கூறினர்.

### முற்றுகையே இலக்கு

யாழ்ப்பாண முற்றுகையை இலக்காகக் கொண்டு இராணுவம் பூநகரியில் நிலைகொண்டு பயிற்சியில் ஈடுபடுவதாகவும், அரசிற்கு இராணுவத் தீர்வில் நம்பிக்கையில்லாத பட்சத்தில் இராணுவத்தை விலக்கி, சங்குப்பிட்டி பாதையை திறந்துவிட வேண்டுமெனவும் புலிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதுபற்றி இராணுவ உயர்பீடத்துடன் பேச்சுக்களை நடத்தப் போவதாக அரசின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

### இராணுவம் மீது குற்றச்சாட்டு

போர் நிறுத்த அவசியம் பற்றி விளக்கிய புலிகள், போர் நிறுத்தத்தைக் கொண்டு வந்து சமாதான சூழ்நிலையை உருவாக்குவதற்கு இராணுவம் முட்டுக்கட்டை போடுவதாக சுட்டிக் காட்டினர்.

போர் நிறுத்தத்தால் இராணுவ தரப்புக்கு பாதிப்பு ஏற்படாது என்றும், இராணுவம் தொடர்ந்தும் பகைமையுணர்வுடன் செயற்படுவதாகவும் புலிகள் சுட்டிக்காட்டினர்.

பகைமையை படிப்படியாக நீக்கி போர் நிறுத்தத்தை நோக்கி நகர்த்திச் செல்ல அரசாங்கம் விரும்புவதாக அரசின் பிரதிநிதிகள் கூறினார்கள்.

போர் நிறுத்தமே பேச்சுவார்த்தை முன்னேற்றமடைய மேலும் ஏதுவாகும் என்று புலிகள் வலியுறுத்தினர்.

புலிகளின் அரசியல் பிரச்சனைகள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் பேசுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டப் பேச்சுக்கு முன் போர் நிறுத்தத்திற்கு முயற்சிப்போம் என்று அரச பிரதிநிதிகள் குழுவைச் சேர்ந்த திரு.ராஜன் ஆசிர்வாதம் கூறியதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

# அரசியல் பழிவாங்கல்-அவதிப்படும் ஏறாவூர்

(ஏறாவூர் நிருபர்)

தீவிர ஐ.தே.க. ஆதரவாளர்கள் என்று கருதப்படும் 16 ஆசிரியர்கள் ஏறாவூரிலிருந்து வெளியிடங்களுக்கு இடமாற்றம் செய்யப் பட்டிருக்கிறார்கள். இதனை எதிர்த்து சென்ற செப்டெம்பர் 29ம் 30ம் திகதிகளில் ஏறாவூர் நகர கல்வி வலயத்திலுள்ள 80 சதவீதமான ஆசிரியர்கள் சுகயீன விடுமுறை யிலிருந்ததால் பாடசாலைகள் நடைபெற வில்லை.

இந்த இடமாற்றத்தைக் கண்டித்து ஏறாவூர் கல்வி மறுமலர்ச்சி இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் "பாடசாலைகள் அறிவை வழங்கும் கலைக் கூடங்களே தவிர அரசியல் ஆதாயந்தேடும் ஆசாட பூதிகளின் அந்தப்புரம் அல்ல. மிக்க முனைப்புடனும், ஈடுபாட்டுடனும் கல்வி போதிக்க வேண்டிய இந்த இறுதித் தவணை நேரத்திலே இந்த இடமாற்றம் வழங்கப்பட்டிருப்பது வேதனைக்குரியது. கடந்த கால வன்செயல்களால் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாக உள்ள நமக்கு கல்வி ஒன்றுதான் எஞ்சியிருக்கிறது என்பதை உணருங்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றத்தை எதிர்த்தும், இடமாற்றத்தினால் எழும் பாதகமான விளைவுகளைச் சுட்டிக்காட்டியும், இடமாற்றத்தை ரத்து செய்யக் கோரியும் ஏறாவூர் நகர பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்திலே ஏகமனதான தீர்மானமொன்று நிறைவேற்றப் பட்டு உரிய அதிகாரிகளுக்கும் பா.உ.களுக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலை நெருங்கிய நாள்முதல் இன்றுவரை ஏறாவூர் நகரம் அரசியல் வன்முறைக்குப் பெயர் போன இடமாக மாறிவருவது ஒட்டுமொத்த உண்மையாகும்.

கடந்த 1990ம் ஆண்டு ஏறாவூரில் படுகொலை நடைபெற்ற வேளையில் ஏறாவூர் மக்களனைவரும் அஞ்சிப் பயந்த வண்ணம் உயிரைப் பாதுகாத்துக்கொள்ளவே மன்றாடினர் என்பதும், இப்போது வந்த தேர்தலால் இவர்கள் பிளவுபட்டு உயிரைப் போக்கிக் கொள்ளும் விஷமத்தனங்களில் ஈடுபடுவதும் உணரத்தக்கது.

இதனிடையே நீண்ட நாட்களின்பின் மட்டக்களப்பு, ஏறாவூரை அண்டிய பகுதிகளில் ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிச் சூடு நடத்தப்படுவதைக் கேட்கக் கூடியதாகவுள்ளது.

## அம்பாறை அம்பலங்கள் — அறு வையார்

### இதையும் கவனிக்கலாமே!

புதிதாக புனர்வாழ்வுக்கு தெரிவான அமைச்சர் சமீபத்தில் சென்றாரும் சென்றார்- உடன் நிருபரையும் அழைத்துச் சென்றார். எங்கு? திருமலை அகதி முகாமிற்கு. 24 மணி நேரத்தில் வீடு ஜமாய்த்து விட்டார். நிருபரும் வெளுத்து வாங்கிவிட்டார். நல்லதுதான்! ஆனால் அமைச்சரது சொந்த மாவட்டத்தில் அகதி முகாம்களை பார்ப்பது யார்?

### டாக்டருக்கும் பங்கு!

அம்பாறைப் பகுதியிலுள்ள வைத்தியசாலையொன்றில் ஆடு, கோழி போன்ற பிராணிகளுக்கும் அறுவைச் சிகிச்சை நடைபெறுவதுபோல் தெரிகிறது. பிரஸ்தாப வைத்தியசாலை வளவுக்குட்செல்லும் அக்கம் பக்கத்து ஆடு, கோழி ஒன்றும் திரும்பி வருவதில்லையாம். உள்ளிருந்து வந்த செய்தியொன்றின்படி ஆடு கோழி போன்று போஸ்ற் மோட்டம் "செய்யப்பட்டு டாக்டர் தொடக்கம் பியோன்வரை பங்கு போடப் படுகின்றதாம்! இப்படியும் ஜீவகாருண்யமிக்க டாக்டரா? தொப்பி அளவானவர்கள் மட்டும் போட்டுக் கொள்ளவும்.

### இப்படியும் ஏமாற்றுவதா?

முன்னாள் அமைச்சரொருவர் கடந்த தேர்தலின் பிரசாரத்தின்போது அம்பாறை மாவட்ட சில தமிழ்ப் பகுதிகளில் ஆலய கட்டிட புனரமைப்பிற்கென தலா 50 ஆயிரம் ரூபா வீதம் வழங்கியுள்ளார். அவர்களும் நம்பி வாங்கியுள்ளனர். அதனை வங்கியிலிட்ட போதே அது வெற்றுக் காசோலை என்பது தெரியவந்தது. இப்படியும் ஏமாற்றுவதா?

### கவனிக்க யாருமில்லை

முனைப் பகுதியில் 'பாக்ஸ்' சேவை குறைவாதலால் தனியார் ஸ்தாபனமொன்று 1 பக்கத்திற்கு ரூ 50/= அறவிடுகின்றது. எவருமே இதனை கண்டிக்கவில்லையாம். ஆளும்கட்சியார் அவர்!!

## மன்னார்த்தீவுச் செய்திகள்

(மன்னாரிலிருந்து எமது நிருபர் நப்ஹான்)

### முருங்கனுக்கான பஸ்சேவை

மன்னார்-முருங்கன் பஸ் சேவை வெகு விரைவில் ஆரம்பமாகலாம் என உத்தியோக பூர்வமாகத் தெரிய வருகிறது. இதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### பெரு நிலத்தில் நெல் கொள்வனவு

மன்னாரிலிருந்து பெருநிலப் பகுதிகளுக்கு லொறிகள் அனுப்பப்பட்டு நெல் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### அமைச்சரை எதிர்பார்க்கும் மக்கள்

வன்னி மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டு தற்போது பிரதியமைச்சராக பதவி வகிக்கும் அல்-ஹாஜ்.எஸ்.எஸ்.எம். அபூபக்கர் எம்.பியை காண மன்னார்ப் பகுதி மக்கள் மிக ஆவலாகவுள்ளனர். மன்னாரை பிரதிநிதித்துவப் படுத்திய ஒருவர் அமைச்சரானது வரலாற்றில் இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

### பாடசாலைகளின் நிலை

மன்னார் தீவிலுள்ள முஸ்லிம் பாடசாலைகளில் மாணவர்களின் தொகை மிகவும் குறைவானதாகவே உள்ளது. 32 ஆசிரியர்கள் படிப்பித்த தாராபுரம் அல்-மினா.ம.வி.யில் தற்போது 32 மாணவர்களே உள்ளனர். இவ்வாறே ஏனைய 7 முஸ்லிம் பாடசாலைகளிலும் மொத்த மாணவர் தொகை மிக மிகக் குறைவாகும்.

### மரம்,மட்டை, கிடுகுக்கு கிராக்கி

மன்னார்ப் பகுதியில் மரம், மட்டை, கிடுகு என்பவற்றின் விலைகள் பெருமளவில் உயர்ந்துள்ளன. 100 கிடுகுகள் சராசரி 400 ரூபாய் வரையும் பனைமட்டை 100ற்கு 150 ரூபாய் வரையும் விலை போகின்றது.

## இயங்க முடியாத தொலைபேசிகள் இருந்தென்ன........?

(அக்குறனை நிருபர்)

இலங்கை ரெலி கொம் நிறுவனத்திற்குச் சொந்தமான தொலைபேசிப் பரிவர்த்தனை மூலம் அக்குறணைப் பிரதேசத்தில் எந்தப் பயனும் இல்லாது பேசா மடந்தைத் தொலை பேசிகளையே இன்று பலர் வியாபார ஸ்தாபனங்களிலும், வைத்தியசாலை, காரியாலயங்களிலும் வைத்துக்கொண்டு எரிச்சல் படுகின்றனர்.

அக்குறணை தபால் நிலையத் தொலைபேசியும் நேரடி இயக்கமிருந்தும் இயங்காத நிலையில் கண்டி எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்து நீண்ட நேரம் கால்கடுக்க நின்று தவம் கிடந்த பின்னரே கொழும்பு போன்ற முக்கிய இடங்களுக்குத் தொடர்பு கிடைக்கின்றது.

ஆனால் மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களுக்கு அவசர அழைப்புகளுக்கென்றால் கண்டிக்குத்தான் செல்ல வேண்டும். அல்லது அதிக செலவில் 'செல்டெல்' ஃபோனில் பேசவேண்டும்.

இந்த நிலை மாறாதா என்று தொலைபேசி சொந்தமாக வைத்திருக்கும் பலர் கேள்வியெழுப்பியும் மாறா நிலையே காணப்படுகின்றது.

இது குறித்து அதிகாரிகள், தொலைபேசிக்குப் பொறுப்பான ரெலிகொம் நிறுவனம் ஆகியோர் கவனமெடுக்குமாறு அக்குறணை மக்கள் கேட்டுக்கொள்கின்றார்கள்.

## இதுதான் தினமுரசோ! கொடும் அதை என்னிடம்!

(மன்னார் நிருபர்)

கற்பிட்டியிலிருந்து மன்னாருக்கு கப்பலில் பயணம் செய்த எமது நிருபரின் தினமுரசு வாரமலர் பத்திரிகை ஒன்று தாழ்வுபாடு கடற்கரையில் பறிமுதல் செய்யப்பட்டது.

இச்சம்பவம் சென்ற மாதம் நடைபெற்றது. தாழ்வுபாடு இறங்கு துறையில் பயணிகளின் பொதிகளை சோதனை செய்த ஒரு தமிழ் தெரிந்த பொலிஸ் உத்தியோகத்தர் தினமுரசு பத்திரிகையை வைத்து விட்டு செல்லுமாறு உத்தரவிட்டார்.

எமது நிருபர் எதுவித மறுப்புமின்றி பத்திரிகையை எடுத்து வைத்ததும் உடனே அங்கிருந்து கொண்டு சென்று வாசித்துக் கொண்டிருந்ததையும் நிருபர் அவதானித்தார்.

## துரோகத்தின் நஷ்டம் ரூபா 5000

(திருமலை நிருபர்)

திருகோணமலை அரசாங்கத் திணைக்களத்தில் கடமை புரியும் குச்சவெளியைச் சேர்ந்த நபரொருவர் ஜமாலியாவில் வசிக்கும் ஏழைப் பெண்ணை விரும்பி 24.09.94ல் திருமணம் செய்ய முற்பட்டபோது, மணமகனின் குடும்பத்தவர் மறுப்புத் தெரிவித்து, பணத்திற்கு ஆசைப்பட்டு மணமகனை வேறிடத்தில் திருமணம் செய்துவைத்தனர்.

ஏழைப் பெண் வீட்டார் இதுபற்றி பொலிஸில் முறைப்பாடு செய்ததன்பேரில் உடனடியாக மணமகன் பொலிசிற்கு அழைக்கப்பட்டு விசாரணை செய்யப் பட்டார். குற்றத்தை ஏற்றுக்கொண்ட மணமகன் ஏழைப் பெண்ணின் குடும்பத்தவர்க்கு நட்டஈடாக ரூபா 5000 செலுத்தியபின் மாமனாரால் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

## பழிவாங்கும் இட மாற்றங்கள்! நிர்வாக சீரமைப்பு என்கிறார் எம்.பி

(காரைதீவு நிருபர்)

கிழக்கின் கல்முனைப் பகுதியில் நடைபெற்ற கல்வி அதிகாரிகளின் இடமாற்றம் பலத்த விமர்சனத்தை ஏற்படுத்தி உள்ளது. சமீபத்தில் நடந்தேறிய கல்முனை மற்றும் சம்மாந்துறைப் பிரதேச சபை அமர்வுகளிலும் இப் பழிவாங்கல் பற்றி விசனமும் கண்டனமும் தெரிவிக்கப்பட்டன.

இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரப்பின் கல்முனைப் பிரதேச செயலாளரான வை.எல்.எஸ்.ஹமீத்திடம் கேட்டபோது இதனை (இடமாற்றத்தை) ஓர் அரசியல் பழிவாங்கல் என்று கூறி எம்மீது சேற்றை வாரி பூசும் செயலில் எதிரணியினர் இறங்கியுள்ளனர் என்று குறிப்பிட்டார்.

ஆட்சி மாற்றம் நடைபெறும்போது பொதுவாக நிர்வாக மறுசீரமைப்பு நடைபெறுவது சகஜமே! இதனை அரசியல் பழிவாங்கல் என்று சொல்ல முடியாது.

மேலும் கடந்த அரசியல் ஊழல்களின் மொத்த வடிவமாக இருந்த ஒருசில உயர் அதிகாரிகளை (மன்னிக்கவும்) அரச ஏஜண்டுகளை மாற்றாமல் விட்டால் மக்களின் வினாக்களுக்கு விடை கூற வேண்டியேற்படும். எனவே புதிய ஆட்சியில் நிர்வாக மறுசீரமைப்பு நடைபெற்றுள்ளது என்பதே சரியாகும் என்று கூறினார்.

## விளம்பரப் பகுதி


### மலையாள மாந்திரீகம்



27 வருடங்களாக மலையாள மாந்திரீக துறையில் நுணுக்கமாக நான் கற்றறிந்த வகையில் இக்காலங்களில் அவ்வப்போது அவரவர் குறைகளுக்கு என்ன பரிகாரம் என அச்சொட்டாக அவ்வேளைகளிலே மலையாள பகவதி வெளிச்ச வீடாக எனக்கு காட்டிக் கொடுக்கின்றது.

இதையொட்டியே வளர்ந்த எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட கம்பனியாக மாறியது. அத்துடன் நவீன உலகத்துக்கு தகுந்தவாறு என்னிடம் மாந்திரீகம், ஜோதிடம், கைரேகை இவைகளுக்கான அதி அற்புத கம்பியூட்டர் உண்டு. உங்கள் குறை என்ன? காதல் தோல்வியா? கல்யாணம் நடக்கவில்லையா? நினைத்தது நினைத்தவாறு நடக்கவேண்டுமா? காதலுக்காக சாவா? வாழ்வா என நினைப்பதை விட்டு என்னை சந்திக்கலாமே.

இவ்வாண்டு மாந்திரீக சக்தியின் வெற்றி பெற்ற ஜபிதா இதோ?

இவ்வாண்டு மலையாள மாந்திரீக காந்த சக்தியும் வெற்றியும்:

நிறைவேறாத காதல் வசியம்- 100/97
கடல் கடந்து செயல் புரியும் காதல் வசியம்- 100/97
கணவன் மனைவி பிணக்கு- 100/45
பெற்றோர் விரும்பாத காதல்-100/87
குத்தகை குடிமிருப்போர் பிரச்சனை-100/33
தீரா ஆஸ்துமா நோய்- 100/100
திருமணத் தங்குதடை நிவர்த்தி-100/97
குடிபோதை நிவர்த்தி- 100/97
கல்வி ஞான விருத்தி- 100/72
சகல வியாபார விருத்தி- 100/83
மீன்பிடி, பண்ணை, ஆடு,மாடு,கோழி வளர்ப்பு- 100/27
புத்திர பாக்கியம்-100/33
பிசாசு தோஷம், சூனிய நிவர்த்தி-100/97

கொழும்பில் மாதந்தோறும் மாதக் கடைசியில் 30,31 திகதிகளில் தான தர்மமும் துர்க்கை உச்சாட பூசை காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெறும். அன்று நிச்சயம் உண்மை அறியலாம்.

**தலைமைப்பீடம்**
P.K.சாமி JDGAN
(மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை காம்பிளக்ஸ்
நுவரெலியா.
தொலைபேசி: 052-2508, 052-3039

**கொழும்பு இல்லம்-**
இல: 162,
கொட்டாஞ்சேனை வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.
தொலைபேசி: 342463, 342464

### நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு | ரூபா 440/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் | ரூபா 225/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் | ரூபா 115/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772
கொழும்பு

THINAMURASU VAARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

### இலங்கை கல்வி முன்னேற்ற கழகம் நடாத்தும் மாதிரிப் பரீட்சையும் 5000/= பரிசும்

நடைபெறும் திகதி: 30.10.94 (ஞாயிறு 8AM-5PM)
பாடங்கள் : கணிதம், விஞ்ஞானம் .

பரீட்சை நிலையங்கள்
01. NO 258. D.S. SENANAYEKE ST, KANDY.
02. NO 316. GALLE RD, COL-04.
03. NO 64 2/2 HINNY APPUHAMY M.W.T, COL-13.

EPI

★ பரீட்சை கட்டணம் 30/= பரீட்சை தினத்தன்று செலுத்தினால் போதுமானது.
★ சுய விலாசமிட்ட கவரை அனுப்பி விண்ணப்பப் பத்திரத்தை தபாலில் பெற்றுக்கொள்க.
★ நேரில் மேற்கூறிய எந்த ஒரு கிளையிலும் பெற்றுக்கொள்ள முடியும்.
★ விண்ணப்பம் அனுப்பாமல் OCT 30ம் திகதி சமூகமளிக்க விரும்பும் மாணவர்களிடத்து 50/= அறவிடப்படும்.
★ இரு பாடங்களிலும் மிகக்கூடிய புள்ளிகள் பெறும் மாணவருக்கு 5000/= பரிசு வழங்கப்படும்.
★ 75% இற்கு கூடிய புள்ளிகள் பெறும் மாணவர்கள் அனைவருக்கும் A/L97 கற்பதற்கு புலமை பரிசில் வழங்கப்படும்.
★ முதல் 50 மாணவர்களின் புள்ளிகள் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.
★ இப்பரீட்சைக்கு தயார்படுத்தும் நோக்கில் இலவச வகுப்புகள் கண்டியில் ஞாயிறு தோறும் 1.45 PM - 4.15 PM வரையும் கொட்டாஞ்சேனையில் வெள்ளி தோறும் 3 PM - 5.30 PM வரையும் பம்பலப்பிட்டியில் வியாழன் தோறும் 3 PM - 5.30 PM வரையும் நடைபெறுகிறது. கலந்து கொண்டு வெல்க. கிருதாயுகம் எழுக மாதோ.

வினாப்பத்திர தயாரிப்பாளர்
திரு .W.L. RAJARATNAM
(PRINCIPAL OF EDUCATIONAL PROGRESSIVE INSTITUTE)

### வீடியோ படப்பிடிப்பில் முன்னணி நிறுவனம்

VICTOP RECORDING STUDIO
356, GALLE ROAD, WELLAWATTE,COLOMBO-6

இல.358, J.T. Complex இல் வெகுவிரைவில் எமது நிறுவனத்தால் புதிய ஸ்ருடியோ ஒன்று திறக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் எமது அன்பர்கள் வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்.

அதுமட்டுமல்ல, மங்களகரமான நிகழ்ச்சிகளை சிறந்த வீடியோ கமராக்களில் பதிவுசெய்வதோடு, ஸ்டில் புகைப் படங்களையும் சிறந்த முறையில் எடுத்துத் தருவோம்.

மற்றும் மங்கள நிகழ்ச்சிகளுக்கு தேவையான அலங்காரப் பொருட்கள் (மேக்கப் செற்) வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
* T.V.—டெக் வாடகைக்கு
* 24 மணி நேரம் குளிரூட்டப்பட்ட எயர்போட்டிற்கான வான் சேவீஸ்.

உங்கள் மின்சார உபகரணங்கள் பழுதடைந்துவிட்டதா? 592453, 078 69749 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் இல்லத்தில் உங்கள் கண்முன் திருத்தித் தரப்படும்.

### தொழிலு க்கு வந்தனை செய்வோம் அதன் பொருட்டு EPI அளிக்கும்

பயிற்சி நெறிகள் ஆரம்பம்: 29.10.94

| | |
|---|---|
| * TEXTILE PRINTING | * COOKERY |
| * MACKRAM | * CAKE DECORATIONS |
| * SOAP DECORATIONS | * WILTON ICING |
| * CLOTH FLOWER MAKING | * DRESS MAKING |
| * STOCKI NET | * MACHINE EMBROIDERY |
| * DIP IN CRISTAL FLOWERS | * HAND EMBROIDERY |
| * SHORT HAND & TYPING | * COMPUTER TRAINING |
| * SCREEN PRINTING & PRINTING | * HOUSE WIRING |

* பணம் ரொக்கமாக அவசியமில்லை * மாதக் கட்டணம் போதுமானது
* பயிற்சி நெறி முடிவில் EPI சான்றிதழ் வழங்கப்படும்.
* அனுமதிக்கட்டணம் 50/= மட்டுமே

EPI

சகல விபரங்களுக்கும் நேரில் வருக
கொட்டாஞ்சேனையில்
64 2/2
HINNY APPUHAMY Mwt.
COLOMBO-13.
(விவேகானந்தா கல்லூரி அருகில்)
கண்டியில்
NO- 203,
D.S. SENANAYEKE Street,
KANDY.

### மாந்திரீகம்

நீங்கள் விரும்பும் நபரை உங்கள் வசமாக்கி எண்ணங்களை நிறைவேற்ற காதலில் வெற்றிபெற, கல்வியில், செய்யும் தொழில் மேன்மையடைய, வேண்டாதோர் உறவைப் பிரித்து வைக்க, பேய், பிசாசு-பில்லி சூனியங்களை விரட்ட, எதிரியை முறியடிக்க, வழக்கில் வெற்றிபெற மட்டக்களப்பு மாந்திரீகம் செய்து கொள்ளுங்கள்.

வெளிநாட்டில் வசிப்பவர்களுக்கும் கடல் கடந்து பலிக்கும்படி செய்து அனுப்பிவைக்கப்படும்.

கடிதத் தொடர்பு
Yogi- S. Lafeer
Ipps of Swiss And Lanka
Nintavur (E.P.)
Sri Lanka
Advt.

### முத்திரைகள் விற்பனைக்கு

வெளிநாட்டு அழகிய பலவர்ண முத்திரைகள் விற்பனைக்குண்டு. 100 வகை ரூ. 85/=, 50 வகை ரூ.40/= தபாற்செலவு உட்பட (பதிவுத் தபால் செலவு மேலதிகம்)

M.N. MOHAMED IRFAN
25/1, KIRIGALA ROAD, MAWANELLA.
Advt.

விளம்பரம் செய்து வியாபாரத்தைப் பெருக்குங்கள்.

விளம்பர மேலாளர்
இல.5, காவிந்த பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-06.

Phone 852041

Advertising Manager
No.5, Kavinda Place,
Kirulapone
Colombo-06.



# எக்ஸ்ரே ரிப்போர்ட்

## பேச்சு மேசையில் புலிகளின் கோரிக்கைகள்

# ஆட்டத்தை மெல்லத் தொடர நினைக்கும் அரசும் நோக்கத்தை நிறைவேற்ற முயலும் புலிகளும்!



முதல் சுற்றுப் பேச்சை முடித்துக் கொண்டு அரச பிரதிநிதிகள் கொழும்பு திரும்பிவிட்டனர்.

புகைப்படங்களோடு செய்திகள் வெளியிட்டுக்கொள்ள தினசரிகளுக்கு ஒரு வாய்ப்பு.

பேச்சு முயற்சிகள் தொடருகின்றன. நாங்கள் பிரச்சனை தீர்க்க ஆவலாயுள்ளோம் என்று காட்டிக்கொள்ள அரசாங்கத்திற்கும் பிரசார இலாபம்.

பேச்சுவார்த்தைகளுக்கு நாம் எதிரானவர்களல்ல என்று சொல்லிக் கொள்ள புலிகளுக்கு ஒரு சந்தர்ப்பம்.

இது தவிர முதல் கட்ட பேச்சுக்களில் வேறெந்த முன்னேற்றமும் இருப்பதாகத் தெரியவில்லை,

எதைப்பற்றிப் பேசுவது என்று அரசாங்கம் ஒரு நிகழ்ச்சி நிரலை தயாரித்து புலிகளுக்கு அனுப்பியிருந்தது.

பிரதிநிதிகள் செல்வதற்கிடையில் அந்த நிகழ்ச்சி நிரல் புலிகளின் கையில் கிடைத்துவிட்டது.

உணவுப் பொருட்கள் விநியோகம், போக்குவரத்து, மருத்துவமனைகளை சீர்திருத்தல், மின்சார விநியோகம், யாழ் நூலக புனர் நிர்மானம்; யுத்த நிறுத்த வழிவகைகளை ஆராய்தல் போன்ற விடயங்கள் ஆராயப்படும் என்று நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

புலிகளைப் பொறுத்தவரை போர் நிறுத்தம் ஒன்றுதான் முக்கியமான முதல் பிரச்சனை.

ஏற்கனவே பிரதமருக்கு பிரபா அனுப்பிய கடிதத்திலும் போர் நிறுத்தமே வலியுறுத்தப்பட்டிருந்தது.

ஆனால், அரசாங்க நிகழ்ச்சி நிரலில் போர் நிறுத்தம் பத்தோடு பதினொன்றாகவே காணப்பட்டது.

இதேவேளை புலிகள் தாமும் ஒரு நிகழ்ச்சி நிரலை தயாரித்தனர்.

அந்த நிகழ்ச்சி நிரலில், கடல்வலய தடை நீக்கம், முழுமையான பொருளாதார தடை நீக்கம், அகதிகளை மீளக் குடியமர்த்தல் போன்றவை இடம் பெற்றிருந்தன.

புலிகளின் பிரதிநிதிகள் அதனையே வலியுறுத்துவர் என்றும் யாழ்ப்பாணத்தில் புலிகளின் குரல் வானொலி மக்களுக்கு அறிவித்தது.

ஆனால் முக்கிய விடயம் என்னவென்றால் அரசின் பிரதிநிதிகள் குழுவில் இராணுவ விபரங்களை அறிந்தவர்கள், அதனோடு தொடர்புடையவர்கள் எவருமே இருக்கவில்லை.

எனவே- பேச்சில் புலிகள் தமது கோரிக்கைகளை வலியுறுத்தும்போது அவைபற்றி ஆராயக்கூடிய நிலை இல்லை என்பது முன்கூட்டியே தெரிந்துவிட்டது.

பேச்சு ஆரம்பித்தபோது புலிகளின் நிகழ்ச்சி நிரலும் எடுத்துக்கொள்ளப்பட்டது.

புலிகளின் கோரிக்கைகளுக்கு அரசின் பிரதிநிதிகள் சொன்ன பதில் பிரதமரிடம் போய் சொல்லுகிறோம் என்பதாகவே இருந்தது.

ஆக, அரசின் பிரதிநிதிகளது பணி புலிகளைக் கண்டு அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று கேட்டு அறிந்து வருவதுதான். ஏன் எனில், முடிவு எடுக்கக் கூடிய அதிகாரமுள்ள எவரும் பிரதிநிதிகள் குழுவில் செல்லவில்லை.

வந்தோம். வரவேற்கிறீர்கள். கண்டோம். கருத்தைக் காதில் வாங்கினோம். சென்று கூறி விடை அறிந்து பத்து நாளில் திரும்பி வருகிறோம் என்று அரச பிரதிநிதிகள் வந்துவிட்டார்கள்.

புலிகள் போர் நிறுத்தத்தை வலியுறுத்துவார்கள் என்பது அரசாங்கத்திற்கு தெரியாத விசயமல்ல.

தெரிந்தும்கூட போர் நிறுத்தம் பற்றிய தனது நிலைப்பாட்டை பிரதிநிதிகள் குழுவிடம் அரசாங்கம் தெரிவித்து அனுப்பவில்லை.

போர் நிறுத்தம் பற்றி ஆராய்வது என்று மட்டும் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் பிரதிநிதிகள் குழுவில் உள்ளவர்கள் அதனை எப்படி ஆராய முடியும்?

போர் நிறுத்தம் என்பது இராணுவ விவகாரம் சம்பந்தப்பட்டதுமாகும்.

பாதுகாப்புப்படை அதிகாரிகள் இல்லாமல் போர் நிறுத்தம் பற்றிய ஆராய்தல் நடத்தப்படுவது சாத்தியமல்ல.

ஆயினும், போர் நிறுத்தம் பற்றிய புலிகளது வலியுறுத்தலையிட்டு அலட்சியமாக இருக்க முடியாது என்பது அரசாங்கத்திற்கும் தெரியும்.

ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன முன்னணிக்கு சார்பான அலையை திசை திருப்பக்கூடிய பலம் புலிகளின் கையில் இருக்கிறது.

இரண்டு கப்பல்களை புலிகள் மூழ்கடித்துவிட்டபோதும் பேச்சு முயற்சிகளை தொடர்ந்து நடத்தியும், அச் செய்திகளின் ஆரவாரம் மூலமும் பிரதமர் சந்திரிக்காவின் 'இமேஜ்' காப்பாற்றப்பட்டுவருகிறது.

ஆனாலும் மீண்டும் ஒரு பாரிய தாக்குதலை புலிகள் மேற்கொண்டால் பூசி மெழுகுவது சாத்தியம்தானா என்ற படபடப்பு அரசாங்கத்திற்கு இருக்கத்தான் செய்யும்.

புலிகள் அரசுப் பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசிய செய்திகளை பெரிதாக்கி சிங்கள மக்களிடம் கொண்டு செல்லுவது, அதன் மூலம் புலிகள் சமாதானத்திற்கு தயார் என்று சிங்கள மக்கள் நம்புகிற சூழ்நிலையில் போர் நிறுத்தம் ஒன்றை அறிவிப்பதே நல்லது என்று அரசாங்க மட்டத்தில் ஒரு கருத்து இருக்கிறது.

படை அதிகாரிகளைப் பொறுத்தவரை அரசாங்க முடிவோடு நேரடியாக முரண்பட மாட்டார்கள். அடுத்த ஜனாதிபதியாக திருமதி சந்திரிக்கா வரக்கூடிய நிலையில் படை அதிகாரிகள் முரண்பட விரும்ப மாட்டார்கள்.

படைகளுக்குள் உயர் மட்டத்தில் மாற்றங்கள் நிகழும் என்ற சூழ்நிலையில் எந்த அதிகாரியும் முரண்பட விரும்பமாட்டார்.

ஆனால், சாதாரண படை வீரர்கள் போர் நிறுத்தம் ஒன்றை விரும்பவில்லை.

**நாரதர்**

அவர்களது அதிருப்திகள் வெளிப்பட்டே வருகின்றன.

ஜனாதிபதியாக சந்திரிக்கா வருவாரேயானால் படைவீரர்களது அதிருப்தியை சம்பாதிக்க அவரும் விரும்பமாட்டார். தனது உத்தரவுகளுக்கு மதிப்பிருப்பதையே அவர் விரும்புவார்.

பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு முன்னர் திருமதி சந்திரிக்கா படைவீரர்களுக்கு என்று விசேஷமாக அறிக்கை விட்டதனையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

சமீபத்தில் இராணுவத் தளபதி ஒரு அறிக்கை விட்டிருந்தார்.

பேச்சுவார்த்தைக்கு படையினர் ஒத்துழைக்க வேண்டும். புலிகள் சமாதானத்திற்கு வராவிட்டால் யுத்தத்தில் குதிக்கவும் தயாராகவும் இருக்கவேண்டும் என்பதே அந்த அறிக்கையின் சாரம்சமாகும்.

நெருப்பில்லாமல் புகையாது. படையினர் மத்தியில் உள்ள அதிருப்தியே அப்படியான ஒரு அறிக்கைக்கான அவசியத்தை ஏற்படுத்தியதாகத் தோன்றுகிறது.

அது மட்டுமல்ல புலிகள் மீதான நம்பிக்கையீனமும் இராணுவத் தளபதியின் அறிக்கையில் இருக்கிறது.

பிரச்சனை என்னவென்றால் அரசின் சார்பிலோ, படையினர் சார்பிலோ, எவருமே புலிகளை நம்பலாம் என்று உத்தரவாதம் செய்யத் தயாராக இல்லை.

மறுபுறம், புலிகள் முதல் சுற்றுப் பேச்சில் வலியுறுத்தியுள்ள விடயங்களை நிறைவேற்றுவதும் சுலபமானதல்ல.

கடல் வலயத்தடை நீக்கப்பட வேண்டும் என்ற புலிகளின் கோரிக்கைக்கு கடற்படை சம்மதிக்காது.

சமீப காலத்தில் புலிகளது கடற் தாக்குதல்கள் கடல் பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கத்தையே வெளிப்படுத்தியுள்ளன.

கடற் புலிகள் என்னும் பிரிவுக்கு தனி முக்கியத்துவமும், விசேச கவனமும் கொடுத்து பிரபாகரன் உருவாக்கியது கடற் பாதையின் இராணுவ முக்கியத்துவம் கருதியே என்பது வெளிப்படை.

கடல் வலயத் தடையை நீக்குவது என்பது மீனவர்களுக்கான கோரிக்கை மட்டுமே என்று அப்பாவித்தனமாக அரசு கருதும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஆனாலும் கடல் வலயத் தடை நீக்கப்பட்டால் மீனவர்கள் பயனடைவர் என்பதும் அவர்களது அவல வாழ்க்கைக்கு முடிவு ஏற்படும் என்பதும் முக்கியமானது.

அகதிகளை மீளக் குடியமர்த்தல் என்று புலிகள் முன்வைத்துள்ள கோரிக்கையும் கவனத்திற்குரியது.

கிழக்கில் உள்ள அகதிகள் பற்றி அக் கோரிக்கையில் வலியுறுத்தப்படவில்லை.

வடக்கே மாதகல், காங்கேசந்துறை மற்றும் தீவுப் பகுதிகளை சேர்ந்த அகதிகளை மீளக் குடியேற்றுவது பற்றியே புலிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.

தற்போதுகூட அந்த அகதிகள் தமது சொந்தப் பகுதிகளுக்கு திரும்பிச் செல்வதை அரசாங்கம் தடுக்கவில்லை.

ஆனால் புலிகள் என்ன சொல்கிறார்கள் என்றால், அகதிகள் தமது சொந்தப் பகுதிக்கு செல்ல வேண்டுமானால் அங்குள்ள படையினர் திரும்பிப் போய்விட வேண்டும்.

அதாவது, படையினர் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்த பகுதிகளை கைவிட்டுச் செல்ல வேண்டும் என்பதே புலிகளது கோரிக்கையாகும்.

அதனைத்தான் நேரடியாகக் கூறாமல் அகதிகளை மீளக் குடியமர்த்தல் என்று மறைமுகமாக சொல்லியுள்ளார்கள் புலிகள்.

அகதிகளை மீளக் குடியேற்றும் அணுகு முறைகள், வழிவகைகள் பற்றி உடனே முடிவு செய்யலாம். அது அரசாங்கத்திற்கு சிக்கலான விசயமல்ல. அரசின் பிரதிநிதிகள் குழுவே அது பற்றிப் பேசிவிட்டு வந்துவிடலாம்.

ஆனால், மீளக்குடியமர்த்தல் என்னும் கோரிக்கைக்குள் புதைந்து கிடக்கும் படையினர் திரும்பிச் செல்லும் விவகாரம் இருக்கிறதே அதற்கு தீர்வு காண்பதுதான் பிரச்சனை.

படையினர் தற்போது உள்ள நிலைகளில் இருந்துகொண்டுதான் பேச்சு நடக்கும் என்று அரசாங்கத்தின் சார்பில் படையினருக்கு உறுதி வழங்கப்பட்டுள்ளது.

வடபகுதி படை முகாம்களுக்கு விஜயம் செய்த பிரதி பாதுகாப்பு அமைச்சர் அந்த உத்தரவாதத்தை வழங்கியிருந்தார்.

போர் நிறுத்தம் வந்தாலும் படையினர் தாம் இருந்த நிலைகளிலேயே இருப்பர் என்றுதான் அர்த்தம்.

எனவே-பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை அரசாங்கம் உடனே விட்டுக்கொடுப்பது என்பது சாத்தியமானதல்ல.

போக்குவரத்துப் பாதை விடயத்திலும் புலிகள் தமது முன்னைய நிலைப் பாட்டையே வற்புறுத்தியுள்ளார்கள்.

கேரதீவு-சங்குப்பிட்டி பாதைத் திறப்புக்கு புலிகள் தயார். ஆனால் அங்குள்ள படையினர் விலகிக்கொள்ள வேண்டும். அல்லது சோதனையிடும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது.

ஆனால்- பூநகரியில் இருந்து விலகிக் கொள்ள படையினர் சம்மதிப்பார்களா என்பதுதான் கேள்விக்குறி.

பதவியேற்றவுடன் போக்குவரத்துப் பாதைத் திறப்புப் பற்றி அரசாங்க தரப்பால் உரத்துப் பேசப்பட்டது.

இன்று அல்லது நாளை பாதை திறக்கப்பட்டு விடும் என்பதுபோல செய்திகளும் வந்தன. ஆனால் இப்போது அரசாங்க தரப்பு பாதைத் திறப்பில் உள்ள சிக்கல்களை புரிந்துகொண்டு அது பற்றிய பேச்சைக் குறைத்துக் கொண்டுள்ளது.

முதல் சுற்றுப் பேச்சுக்கான அரசாங்க நிகழ்ச்சி நிரலில் அத்தியாவசியப் பொருட்களின் போக்குவரத்து என்றே குறிப்பிடப்பட்டிருப்பதையும் கவனிக்க வேண்டும்.

இதே சமயம் ஆனையிறவுப் பாதையைத் திறக்கத் தயாராக இருப்பதாக படையினர் கூறியுள்ளனர்.

இதனை புலிகள் விரும்பமாட்டார்கள். அப்படித் திறப்பதாக இருந்தால் படையினர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்று புலிகள் சொல்லக் கூடும். அதனைப் படையினர் ஏற்க மாட்டார்கள்.

யாழ் குடாநாட்டு போக்குவரத்து விடயத்தில் புலிகளின் கோரிக்கையானது "நாடுகளின் எல்லையில் மட்டுமே இராணுவங்கள் நிற்பதுண்டு. உள்ளே வருவதோ செயற்படுவதோ ஆக்கிரமிப்பு" என்ற கருத்தின் அடிப்படையிலானதாகும்.

இதனை புலிகள் சொல்லும்போது அரச பிரதிநிதிகளோடு சிரித்துக் கொண்டும் சொல்லலாம், பேச்சில்லாத போது சினந்து கொண்டும் சொல்லலாம். அர்த்தம் ஒன்றுதான்-அடிப்படை ஒன்றுதான்.

புலிகளின் தரப்பில் இருந்து வந்த ஒரே ஒரு கோரிக்கை மட்டுமே அரசாங்கத்திற்கு இனிப்பானதும், சுலபமானதுமாகும்.

"யாழ் நூலக எரிப்பிற்கு காரணமானவர்களை கண்டறிய கமிஷன் போடுவது" என்பதுதான் அந்தக் கோரிக்கை.

அது யாரைக் குறி வைக்கிறது என்று உடனே யாவருக்கும் தெரிந்து விடும்.

ஏற்கனவே ஊழல் குற்றச்சாட்டில் திரு.காமினியை மடக்கிப்போட முயலும் அரசாங்கத்திற்கு புலிகளின் கோரிக்கை லட்டு மாதிரி இனிக்கக்கூடும்.

ஆனால், பொதுஜன முன்னணியோடு திரு.காமினி திசாநாயக்க கைகோர்த்திருந்த காலத்தில் அன்றைய ஜனாதிபதி பிரேமதாச ஒரு கூட்டத்தில் உரையாற்றும்போது, யாழ் நூலகம்

(6ம் பக்கம் பார்க்க)



சூட்டான கட்சிக்காரரர் வன்னியிலை தேர்தல் வழக்குப் போட்டது தெரியுமல்லோ. இயக்க முக்கியஸ்தர் ஒருவர் நீலமானவரைக் கண்டு கேட்டாராம், "என்ன வழக்குப் போட்டிருக்கிறியள். முறையோ அண்ணை?" உடனடியா நீலமானவர் சொன்ன பதில் இது: "அதோ தம்பி. அது வீக்கான வழக்குத்தானே!"

இந்தியா டுடே வாசந்தி யாழ்ப்பாணத்திலை சிகரெட் புகைத்ததலே கண்ணிலை தெரியேல்லை எண்டு எழுதினவல்லோ. அதே இந்திய டுடேயிலை (செப்.21-அக்.5) 41ம் பக்கத்திலை பாலசிங்கத்தார் பேட்டி கொடுக்கிற போசிலை அழகா ஒரு படம். வாசந்தியின் கை மட்டும் தெரியுது. (ஆனந்தித் தங்கச்சி மாதிரி முகத்தையும் காட்டியிருக்கலாம்) அந்தப் படத்திலை மேசையிலே ஒரு சின்ன ரேப் ரெக்கோடர். அருகிலை ஒரு மூக்குக் கண்ணாடி. அதுக்குப் பக்கத்திலை இருக்குது பாருங்கோ வெளிநாட்டு சிகரெட் பெட்டி-555. இதை ஏன் சொல்லுறன் எண்டால் யாழ் போகும் பத்திரிகையாளர் சிலருக்கு பயத்திலை கண்ணும் சரியாத் தெரியிறதில்லையுங்கோ. பயப்பிடேல்லை எண்டு காட்ட கண்டதையும், காணாததையும் எழுதிப் போடுகினம். ஹி...ஹி...ஹி...!

வடக்கு-கிழக்கு மாகாணத்திலை அதிகாரம் நடத்தின கட்சி இப்ப அதிகாரமுள்ளவையின் தயவை நாடித்திரியறது ஒரு பக்கமிருக்க, அந்தக் கட்சி செயலர் போன மாதம் ஒரு கடிதம் அனுப்பினவராம் பாதுகாப்பு சம்பந்தமான அமைச்சருக்கு. அதிலை பறிபோன பிரதிநிதி பதவியின் றப்பர் ஸ்ராம்பைக் குத்தியனுப்பினவராம். பார்த்தவை விழுந்து விழுந்து சிரிச்சவையாம். சீச்சீ இந்தப் பழம் புளிக்கும் எண்டு வழக்குப் போட்டாலும் அனுபவிச்ச பதவி ருசி கனவிலையும் மறக்குமோ? அதுதானே!

## அதிரடி அய்யாத்துரை

ரெண்டு எழுத்தார் நிபந்தனையில்லா பேச்சு எண்டு அறிவிச்சவையல்லோ. அவை பலத்தோடை இருந்துகொண்டு அப்படி அறிவிச்சவை. ஆனா அதைப் பார்த்துப்போட்டு பலமே இல்லாதவை ஆளும் கட்சிக்கு நிபந்தனையில்லா ஆதரவு எண்டு அறிக்கை விடுறதுதானுங்கோ பகிடி. சரணாகதிக்கெல்லாம் இப்ப நிபந்தனையில்லாமை எண்டு அர்த்தம் வந்துட்டுதோ தெரியேல்லை. ஆதரவு குடுக்காட்டி இருக்க இடமும் அல்லோ இருக்காது.

யாழ் போன பிரதிநிதிகள் தங்கியிருந்த விடுதிக்கு ஜெனரேட்டர் உபயத்திலை மின் கொடுத்தவையாம். இடையிலை கொஞ்சநேரம் மின்வெட்டு. யாழ்ப்பாண சனம் மின்சாரம் இல்லாமல் படுற கஷ்டத்தை இரண்டு மணித்தியாலமாவது பிரதிநிதிகள் அனுபவிச்சு அறியட்டும் எண்டுதான் 'கட்' செய்தவையோ தெரியேல்லை.

கப்பல் தாக்குதலில் பிடிச்ச கப்ரனையும் இன்னொருவரையும் யாழ்ப்பாணத்திலை சிகப்பு சிலுவை சங்கத்தார் பார்க்க அனுமதிச்சவை ரெண்டு எழுத்தார். அதை எப்படியோ கேள்விப்பட்டு கப்ரன் விடுதலை எண்டு அரச பிரசார சாதனங்களில் செய்தி வந்தது. பாதுகாப்பு வட்டாரங்களே உறுதிப்படுத்தாத செய்திகளையெல்லாம் இப்படி அவசரப்பட்டு வெளியிட றதுதான் கருத்துச் சுதந்திரமோ? யாரோ தவறா விளக்கம் சொல்லிப் போட்டினமாக்கும்.

கொழும்பிலை பஞ்சிகாவத்த எண்டு ஒரு இடம் இருக்குது. அங்கை வாகனங்களுக்கு தேவையான புதிய, பழைய உதிரிப்பாகங்கள் கிடைக்கும். போன வாரம் வானொலி சிங்கள சேவையிலை ஒரு செய்தி. ஆளும்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிச்ச கூட்டான தமிழ்கட்சி பஞ்சிகாவத்தையில் கூட்டம் நடத்துகிறது. செய்தியைக் கேட்டுப்போட்டு ஒரு தமிழ் கட்சி தலைவர் கூட்டான தமிழ் கட்சி தலைவர்களில் ஒருவரை போனில் பிடித்து, "அண்ணை கூட்டம் நடத்துகிறியளோ பஞ்சிகாவத்தையிலை?" எண்டு கேட்டாராம். உடனே அவர் சொன்ன பதில் "என்ன தம்பி, பஞ்சிகாவத்தைக்கு போய் நாங்கள் என்ன பழைய காரோ வாங்கிறது? உது யார் சொன்ன கதை?" பார்த்தியளோ, செய்திச் சுதந்திரம் படுறபாட்டை.

மாமியார் மருமகள் சண்டை பற்றி கண்ணதாசன் எழுதினதை படிக்கக் கிடைச்சது. அதிலை ஒரு துளி உங்களுக்கு. இது மாமியார் புலம்பல்.

ராசாக் கிளிபோல  
நல்ல பிள்ளை பெத்தெடுத்தேன்;  
பேசாக் கிளியாச்சு  
பெண்டாட்டி நினைவாச்சு!  
ஊசல் பணியாரம்  
உளுந்துவடை ஊசலடி!  
பாருடா என்று சொன்னா  
பார்க்காமே போறாண்டி  
கேளடா என்று சொன்னா  
கேக்கமனம் இல்லையடி"

மருமகள் புலம்பல் அடுத்தவாரம்.

# தேர்தல் நிலவர ரிப்போர்ட்

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி தங்களுக்கே என்று பொதுஜன முன்னணி அடித்துச் சொன்னாலும் உள்ளே ஒரு பயம் இல்லாமல்இல்லை.

சென்ற பொதுத் தேர்தலில் பொதுஜன முன்னணி எதிர்கொண்டது பலவீனமான ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையை.

> "புன்னகைத்துப் பேசிக்கொண்டே எதிரியின் பலத்தையும் பலவீனத்தையும் எடைபோடும் புத்திசாலி காமினி"

தலைவர் பேசுகிறார் என்றால் காத்திருந்து ஆர்வமாகக் கேட்கும் ஆதரவாளர்கள் இல்லாத ஒரு தலைவராக ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா இருந்தார்.

தலைவரைக் கண்டதும் கூடியிருக்கும் கூட்டத்தினர் சிலிர்த்து ஆரவாரம் செய்யக்கூடிய ஆளுமை அவரிடமில்லாதது தேர்தல் பிரசாரத்தில் பெரிய ஓட்டையாக இருந்தது.

அரசியல்வானில் இளைய நட்சத்திரம் திருமதி சந்திரிக்காவின் பிரவேசத்திற்கு ஈடுகொடுக்கக்கூடிய பிரசார கவர்ச்சியை ஐ.தே.கட்சி பிரேமா மறைவின் பின் தொலைத்துவிட்டு பரிதாபமாக நின்றது.

17 வருட ஒரே ஆட்சியின் சலிப்பும் வாக்காளர்களை கொட்டாவி விட வைத்தது.

ஒரு மாற்றத்திற்கான அலை மேலோங்க அவ்வாறான காரணங்கள் பெரிதும் உதவிகரமாக அமைந்தன.

ஆயினும்கூட ஐக்கிய தேசியக் கட்சி எழவே முடியாத வீழ்ச்சிக்கு தள்ளப்பட்டு விடவில்லை.

இப்போது ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா தன்னையே தான் அறிந்து ஒதுங்கிக் கொண்டார்.

அடுத்து யார் என்ற போட்டியில் தனது நாகரிகமான போட்டியாளர் ரணிலைச் சமாளித்து திரு.காமினி வெற்றி பெற்றார். ஜனாதிபதி வேட்பாளராகியும் விட்டார்.

இன்றைய அரசியலுக்கு வெளிப்படைத்தன்மையானவர்களைவிட விவேகமானவர்கள் வேண்டப்படுகிறார்கள்.

நேர்மையானவர்களாக இருந்தால் மட்டும் போதாது. நெளிவு சுழிவு தெரிந்தவர்களாகவும் இருப்பது விரும்பப்படும்.

அரசியல் எதிரியை நேரடியாக சந்திப்பதைவிட சுற்றிவளைத்து தாக்குவது, அது முதுகில் குத்துவதாக இருந்தாலும் சரி, பாரிய குழியை வெட்டி இலை தழைகளால் மூடி மறைத்து இடறிவிழ வைத்தாலும் சரி இன்றைய அரசியலில் வரவேற்பு காத்திருக்கிறது.

ஏனெனில், யாருமே வந்த வழி எப்படி எப்படி என்று பார்ப்பதில்லை. வெற்றியே முக்கியம். கையில் அதிகாரம் வந்தபின் கரிசனம் கிடைக்கிறது. கௌரவம் வருகிறது. எதிர்த்து நின்றவர்கள்கூட இது ஒரு புதிய சகாப்தம் என்று பேசவும், எழுதவும் தொடங்கிவிடுவார்கள்.

சில வார்த்தைகள் இங்கே மிக மலிவாகிவிட்டன. புதிய சகாப்தம், நம்பிக்கை துளிர்விடுகிறது. கருத்துச் சுதந்திரம், மனித உரிமை, ஜனநாயகம் இப்படியான வார்த்தைகளே அவை.

எனவே- இப்படியான ஒரு சூழலில் திரு. ரணிலை விடவும் திரு. காமினிக்கே இன்றைய அரசியல் ஒரு பந்தயக் குதிரைக்குரிய மதிப்பை வழங்கும்.

திரு. காமினி காத்திருந்து கனியை குறிவைத்து அடிக்கும் புத்திசாலி. புன்னகைத்தபடியே எதிரியின் பலத்தையும் பலவீனத்தையும் எடைபோட்டு வியூகம் வகுக்கக் கூடியவர்.

அரசியல் அனுபவம் என்று பார்த்தால் திருமதி சந்திரிக்காவைவிட காமினி பழம் தின்று கொட்டை போட்டவர்.

எனவே- ஜனாதிபதித் தேர்தலில் சுலபமாக வெற்றிக்கனியை பறித்துவிடலாம் என்று திருமதி சந்திரிக்கா கணக்குப் போட முடியாது.

அரசியல் அனுபவம், விவேகம் என்பனவும், உள்ளே பிரச்சனை இருந்தாலும், அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றும் நோக்கில் ஒன்றுபட்டு நிற்கும் கட்சியும் காமினியின் பலம்.

ஆனால் நாட்டின் பொதுவான பிரச்சனைகளிலும், பிரதான பிரச்சனையான இனப்பிரச்சனையிலும் ஐக்கிய தேசியக் கட்சியிடம் புதிதாகச் சொல்வதற்கு ஒன்றுமில்லை.

திரு.காமினி புதிதாகச் சொன்னாலும் கூட, 17 வருடமாய் இருந்து சாதித்தார்களா? என்ற ஒரு கேள்வியில் எல்லாம் அடிபட்டுப் போகும் என்பதுதான் பலவீனம்.

முக்கியமாக மலையகத்தில் தனது பாரம்பரிய பங்காளியான திரு. தொண்டமானை ஐக்கிய தேசியக் கட்சி இழந்தால் அது பயணப் பாதையில் படகில் விழுந்த- உடனே சீர்செய்ய முடியாத ஓட்டையாகி விடும்.



## உருவாகிவரும் புதிய நெருக்கடிகள்

# காமினியின் உத்திகள் சமாளிப்பாரா சந்திரிக்கா?

இதுதவிர முஸ்லிம் காங்கிரசின் ஆதரவும், ஈ.பி.டி.பி, புளொட், த.வி.கூ., ஈ.பி.ஆர்.எல்.எஃப். போன்ற தமிழ் கட்சிகளும் திருமதி. சந்திரிக்கா பக்கம் கை உயர்த்தியுள்ளன.

இதற்கிடையே திரு.காமினி ஒரு கணக்குப் போட்டிருக்கிறார்.

சென்ற பொதுத் தேர்தலில் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் பெற்றவாக்குகளைவிட மேலதிகமாக 36 வாக்குகள் பெற்றால் போதுமானது.

அவரது கணக்கு கட்சிக்காரர்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. 'அட ஆக 36 வாக்குகள்தானே. முயன்றும் பார்க்கலாமே' என்று களத்தில் இறங்க வைத்துள்ளது.

சுலபமான ஒரு கணக்கைச் சொல்லி கட்சியின் பிடரியில் பிடித்து உலுப்பி விட்டிருப்பது திரு.காமினியின் புத்திசாலித்தனமான உத்தி.

புலிகள் கோரும் போர் நிறுத்தத்துக்கு அரசாங்கம் உடன்படாமல் போக, அதனால் புலிகள் அதிகம் ஆத்திரப்பட்டுவிட்டால், அதனால் ஏற்படும் விளைவுகளை வைத்து தமக்கு சாதகமாக்கிக்கொள்ளும் கணக்கும் இல்லாமல் இல்லை.

அதுதவிர, பாண் விலைக் குறைப்பு என்ற பொதுஜன முன்னணி சென்ற பொதுத்தேர்தலில் அறிவித்த வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கிறது. ஆனால் பாண் நிறை சம்பந்தப்பட்ட அதிருப்திகள் விலைக் குறைப்பின் பயனை ஓரம் தள்ளியிருப்பதும் உண்மைதான்.

சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் சில புலிகளோடு நடத்தும் பேச்சுப் பற்றிய கண்ணோட்டங்களில் இனவாத உணர்வுகளை கிளறிவிடுகின்றன. புலிகளின் அதிரடித் தாக்குதல்கள் அந்த கிளறும் நடவடிக்கைகளுக்கு சாதகமாகப் பயன்படுத்தப் படுகின்றன.

மறுபுறம், அரசாங்கத்திற்கும், புலிகளுக்கும் இடையே நடக்கும் பேச்சுக்கள் பற்றிய விமர்சனங்களில் சற்று இனவாத நெடி அடித்தாலும் காமினி கண்டும் காணாதது போல் இருக்கிறார்.

புலிகளை சந்திரிக்காவும் வழிக்கு கொண்டுவர முடியாது. அவர்களை பலப்படுத்தி விடப் போகிறார் என்ற கருத்தும் ஏற்பட்டு வருகிறது.

குறித்த நேரத்தில் கூட்டங்களிலோ, பாராளுமன்றத்திலோ பிரதமர் கலந்து கொள்ளத் தவறுவது, சிங்கப்பூர் பயணம் போன்றவையெல்லாம் பிரசார லாபம் கருதி பெரிது படுத்தப்படுகின்றன. திருமதி சந்திரிக்காவின் தனிப்பட்ட 'இமேஜ்' என்பதையே பொதுஜன முன்னணி சார்ந்து நிற்கிறது.

எனவே, இந்த 'இமேஜை' சேதமாக்குவதே எதிரணியின் பிரசார உத்தியில் முக்கியமானதாகவே இருக்கிறது.

எனினும், ஆட்சிக்கு வந்து மிகக் குறுகிய காலமே என்பதால் தொடர்ந்து சந்தர்ப்பமளித்துப் பார்க்கலாம் என்னும் திருவாளர் பொதுஜனத்தின் அபிப்பிராயம் திருமதி சந்திரிக்காவுக்கு சாதகம்.

தமிழ்-முஸ்லிம் வாக்காளர்கள் மத்தியிலும் தற்போதைய நிலையில் காமினியைவிட பிரதமர் சந்திரிக்காவுக்குத்தான் கூடுதலான வரவேற்பு தெரிகிறது.

அதேசமயம், தென்னிலங்கையில் திரு.காமினியின் கூட்டங்களுக்கு அதிகளவான மக்கள் கூடுகிறார்கள். பொதுத் தேர்தல் காலத்தைவிட இது அதிக கூட்டம் என்று கணிப்பிடப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இதுவும் புது உற்சாகத்தைக் கொடுத்துள்ளது.

ஆனால், காமினியின் மேலதிக 36 வாக்கு என்ற கணக்கு திரு. தொண்டமானும், தமிழ்-முஸ்லிம் கட்சிகளும் திருமதி சந்திரிக்கா ஆதரவு நிலைப்பாட்டால் பொய்த்துப் போகும் சந்தர்ப்பமே அதிகம்.

ஆனால், சிறு திருப்பம் கூட தேர்தல் களத்தில் சாதகத்தை பாதகமாக்கும். பாதகத்தை சாதகமாக்கும். அலையின் திசையை சடுதியாக மாற்றிவிடும்.

எனவே- நிகழ்ச்சிப் போக்குகளை அவதானித்து நிலவரங்களை வெளியிடுவோம். ●

---

(எக்ஸ்ரே ரிப்போர்ட் தொடர்ச்சி)

## காமினி என்றவுடன் யாழ் மக்கள் கண்ணில் தெரிவது

# யாழ் நூலக எரிப்பு!



எரிக்கப்பட்ட யாழ் நூலகம்

எரியக் காரணமானவர்களே புலிகள் உருவாகக் காரணம் என்று குற்றம் சாட்டியிருந்தார்.

அப்போது பொதுஜன முன்னணியும் அதைக் காதில் வாங்கவில்லை. ஏனெனில் காமினி அவர்களுக்கு வேண்டப்பட்டவராக இருந்தார்.

எப்படியோ இப்போது கமிஷன் போட்டாலும்கூட குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பது நடக்கப்போகும் காரியமல்ல. சூரியகந்த புதைகுழியைத் தோண்டுவது போல சுலபமான விசயமுமல்ல.

திரு. காமினி திசாநாயக்கா யாழ் நூலக எரிப்பிற்கும் தனக்கும் தொடர்பில்லை என்று கூறி வருகிறார். ஆனால் அவரது மறுப்பை பெரும்பாலான யாழ் மக்கள் ஏற்கவில்லை என்பதும் உண்மை. யாழ் மக்கள் மனதில் ஆழப்பதிந்த நிகழ்வு அது. காமினியின் பெயரைக் கேட்டதும் யாழ் மக்கள் கண்களில் உடனே தெரிவது யாழ் நூலகம்தான்.

ஆனால், கமிஷன் நியமிக்கப்பட்டு குற்றவாளிகள் என்று எவரையும் அக்கமிஷன் சுட்டிக் காட்டாவிட்டால் அது காமினிக்கே சாதகமாகும். தனது மறுப்பை அவர் உரத்துச்சொல்ல முடியும். ஆளும் கட்சியைப் பொறுத்தவரை பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான கதையாகிப் போகலாம்.

ஆக, யாழ்-நூலக எரிப்புக்கு கமிஷன் நியமிப்பது தவிர யாழிலிருந்து அரச பிரதிநிதிகள் புலிகளிடமிருந்து கொண்டு வந்திருப்பதில் புதிதாக எதுவும் இல்லை.

விருந்தில் இருக்கும்போது தனக்குத் தேவையானதை நேரடியாகவும் கேட்கலாம். "பக்கத்து இலையைக் கவனியுங்கள்" என்று விருந்து பரிமாறுபவரின் கவனத்தை தன் பக்கம் இழுத்தும் மறைமுகமாகக் கேட்கலாம்.

கடல்வலயத் தடை நீக்கம், அகதிகளை மீளக்குடியமர்த்தல், பூநகரிப் பாதைத் திறப்பு, இராணுவம் விலகல் போன்ற புலிகளின் கோரிக்கைகள் மீனவர்கள், அகதிகள், பயணிகள் நலனை சுட்டிக்காட்டினாலும், அது "பக்கத்து இலையைக் கவனியுங்கள்" என்பது மாதிரித்தான்.

யாழ் குடாநாட்டில் தமது நிர்வாக, அதிகார நிறுவனங்களுக்கு தடையில்லாத- தமது சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தாத ஒரு சூழ்நிலையைத்தான் புலிகள் கோரி நிற்கிறார்கள்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை ஜனாதிபதித் தேர்தல்வரை சிக்கலான விசயங்களில் தலைபோட விரும்பவில்லை.

பேச்சில் சூடான கட்டங்கள் தோன்றாத நிகழ்ச்சி நிரலையே அது விரும்புகிறது.

ஆனால்- புலிகளோ அரசின் நெருக்கடியான நேரத்தில்தான் தமது விவேகத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

அசாதாரணமான புலிகளது இராணுவ பலம் அவர்களது காய் நகர்த்துதலுக்கு உதவுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் முடியட்டும். சந்திரிக்கா ஜனாதிபதியாகட்டும் என்று புலிகள் காத்திருக்கவில்லை.

கடலிலே கடற்படைக் கப்பல்களை அமுக்குகிறார்கள்; தரையிலும் முடியுமான இலக்குகளைக் குறி வைக்கிறார்கள்- தாக்குகிறார்கள்.

பிரதமர் சந்திரிக்கா மீது புலிகள் நம்பிக்கை வைத்திருப்பதாக சித்தரிக்கும் பிரசார வித்தகர்கள் இவற்றையெல்லாம் கண்டுகொள்ளாமலிருக்கலாம்.

ஆனால்- புலிகளோ ஜனாதிபதியானால் சந்திரிக்காவின் பலம் கூடிவிடும். இப்போது பலவீனமாக உள்ளபோதே போர்நிறுத்தக் கோரிக்கையை முன்வைத்து நிர்ப்பந்தம் செய்யவேண்டும் என்று நினைக்கிறார்கள்.

போர் நிறுத்தக் கோரிக்கை என்பது புலிகளின் அற்புதமான வியூகம்.

அரசாங்கம் உடன்பட மறுத்தால் பேச்சு வார்த்தையை முறித்த பழியை அரசாங்கம் மீதே போட்டுவிட சுலபமான வழி கிடைக்கும்.

திருமதி சந்திரிக்கா ஜனாதிபதியான பின் போர் நிறுத்தக் கோரிக்கையை முன்வைத்தால் அது சில சமயம் சாத்தியப்படலாம். எனவே தற்போதைய பலவீன நிலையிலேயே தமது பலத்தைப் பிரயோகித்து புலிகள் அவசரமாய் நிர்ப்பந்திக்கிறார்கள்.

அரச பிரதிநிதிகளோடு நடத்திய பேச்சு முடிவில் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் பந்திக்குப் பந்தி போர் நிறுத்தம் பற்றியே புலிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆக, புலிகளுக்கு பொதுஜன முன்னணி ஆட்சியோ, பிரதமர் சந்திரிக்கா ஜனாதிபதி யாவதோ முக்கியமல்ல.

ஆனால்- அரசுக்கு புலிகளோடு உடனே முரண்படாத கால நீடிப்பு தேவைப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்குமுன் இன்னொரு சுற்றுப் பேச்சு இருக்கிறது. அதனையும் ஒருவிதமாக சமாளித்தால் போதும் என்ற நிலை.

யாவும் நலம். பரம திருப்தி என்று இப்போது எழுதுகிற விமர்சகர்களில் சிலர் பிரேமா-புலிகள் பேச்சின் போதும் இதையே தான் எழுதினார்கள்.

தாம் 1989இன் பிற்பகுதியில் எழுதிய அதே கட்டுரைகளில் பிரேமா என்பதற்கு பதிலாக சந்திரிக்கா என்று மாற்றிவிட்டு வெளியிடுகிறார்களோ என்று ஒரு சந்தேகம். பழைய பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தால் தெரியும்.

அதே சமயம் நமது தொலைக்காட்சியும், வானொலியும் பயங்கரவாதிகள் என்றும், போராளிகள் என்றும் மாறி மாறி உச்சரித்துத் தொலைக்கின்றன.

சாகரவர்த்தன கப்பல் கப்டன் புலிகளின் வசம் இப்போதும் பத்திரமாக இருக்கிறார். அவரை புலிகள் விடுதலை செய்துவிட்டதாக கடந்தவாரம் அமோகமான பொய்கள் செய்திகளாகின. உபயம்-'லங்கா புவத்' என்கிறார்கள்.

ஆக, யாவுமே நலம். ஆரோக்கியம் என்று யாவரும் நம்பவேண்டும் என்கிறார்கள்.

இந்த ஆரவாரம் மத்தியில் உண்மையான நிலவரங்களை வெளியிடுவதும், அலசுவதும் பேச்சுக்கு எதிரான முயற்சி என்றுகூட கூறப்பட்டால் ஆச்சரியமில்லையல்லவா? ■

---

## 700 ஆயுதங்களுக்கு 50 கோடி

### அன்ரன் பாலசிங்கம் வெளியிட்ட தகவல்



"நான் அப்போது இந்தியாவில் இருப்பது இந்திய அரசுக்குத் தெரியாது. இரகசியமாக கிட்டுவை சந்திக்கவேண்டும். கிட்டுவுக்கு நாலாபுறமும் பொலிஸ் இருக்கிறது. நான் பொலிசின் கண்ணில்படாமல் வீட்டின் பின்புறச் சுவர்களை கடந்து சென்றேன். கிட்டு என்னை மேல் மாடிக்கு அழைத்துச் சென்று உரையாடினார்.

"பின்னர் இந்திய அரசோடு நாம் நடத்திய பேச்சுக்களில் 50 கோடி ரூபாயை எமக்குத் தருவதாகவும், அதற்குப் பதிலாக நாம் வைத்திருக்கும் 700 ஆயுதங்களை தருமாறும் இந்திய அரசு கேட்டது.

"நாம் அதற்கு 50 கோடி ரூபாயை உடனடியாகத் தரும்படியும், குறிப்பிட்டகால இடைவெளியில் அதனை வெளிநாட்டில் உள்ள எமது வங்கிக்கணக்கில் வைப்பிலிட்ட பின்னர் ஆயுதங்களை ஒப்படைப்போம் என்றும் சொன்னோம்.

"ஆனால் இதை சரணாகதியாகக் கருதக்கூடாது. போர் நிறுத்தம் ஒன்றை மேற்கொண்டு அதனை வழங்குவோம் என்று சொன்னோம். அதற்கு இந்திய அரசு மறுத்துவிட்டது. பேச்சுக்கள் முறிந்தவுடன் கிட்டு கைது செய்யப்பட்டார்."

(அன்ரன் பாலசிங்கம் 10.8.94 அன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற 'கேணல் கிட்டு சிறுவர் பூங்கா' திறப்பு விழாவில் ஆற்றிய உரையில் இருந்து.

ஆதாரம்-உலகத் தமிழர்- 15.09.94)



அலசுவது—இராஜதந்திரி

# புதிய சூழலில் பூர்வாங்கப் பேச்சுக்கள்: குறுகிய போக்குகள் புறம்தள்ளப்படவேண்டும்

பிரதம மந்திரி திருமதி. சந்திரிகாபண்டாரநாயக்கா குமாரதுங்க தலைமையிலான புதிய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பூர்வாங்கப் பேச்சுக்கள், பல்வேறு வகையிலும் முக்கியத்துவம் பெற்றதாகவே விளங்கியிருந்தன.

இப்பூர்வாங்கப் பேச்சுக்களை நடத்துவதில் சந்திரிகா மற்றும் அவரது அமைச்சரவையைச் சேர்ந்தவர்கள் வெளிப்படுத்திய ஆர்வம், நல்லெண்ணம், உறுதிப்பாடு என்பனவும் வரவேற்கக்கூடியனவாகவே விளங்கியிருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை நடத்துவதற்கு புதிய அரசு தனது சம்மதத்தைத் தெரிவித்து, வடபகுதிக்கான பொருளாதாரத் தடையையும் பெருமளவில் தளர்த்தியிருந்தது. இதனையடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளும் தமது நல்லெண்ணத்தை வெளியிடும் வகையில் பத்துப் பொலிஸ்காரர்களை விடுதலை செய்திருந்தனர்.

இவ்வாறு நல்லெண்ணங்கள் பரிமாறப்பட்டு, ஒரு சுமுகமான சூழ்நிலை தோன்றும் அறிகுறிகள் தென்பட்ட வேளையிலேயே புலிகள் மன்னார்க் கடலில் 'சாகரவர்த்தன' என்ற கடற்படை ரோந்துக் கப்பலை மூழ்கடித்திருந்தனர்.

இதனையடுத்து கிழக்கே தொப்பிகல என்ற பிரதேசத்தில் சுமார் பதின்மூன்று இராணுவத்தினரையும் புலிகள் கொன்றிருந்தனர்.

இதேவேளை இராணுவத்தினரும் புலிகளுக்குப் பதிலடி கொடுக்கும் விதத்தில் பலாலி தளத்திலிருந்தும் 4 கிலோ மீட்டர் தூரம்வரை விஸ்தரிப்பு நடவடிக்கையொன்றை மேற்கொண்டிருந்தனர்.

இவற்றைத் தொடர்ந்து கடந்தவாரம் வடக்கே வெற்றிலைக் கேணிக் கடல் பிராந்தியத்தில் 'ஓஸன் டிரேடர்' என்ற சரக்குக் கப்பலொன்றை புலிகள் தாக்கி மூழ்கடித்திருந்தனர்.

எனவே சந்திரிகா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான நல்லெண்ணங்கள் துளிர்விட்டு வந்த தறுவாயில் இடம்பெற்ற மேற்படி தாக்குதல்கள், அனைத்து சமாதான முயற்சிகளையும் பாழடித்து விடுமோ என்று எண்ணத் தோன்றியிருந்தது.

ஆயினும் தாக்குதல்கள் எத்துணை மோசமானவையாகவும், ஒரு சவாலாகவும் இருந்தபோதிலும் சந்திரிகா அரசு நல்லெண்ண நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் வெளிப்படுத்திய உறுதிப்பாடு, சமாதான முயற்சிகளுக்கு உரமிடுவதாகவே விளங்கியிருந்தது.

பிரதமர் சந்திரிகா உட்பட அவரது அமைச்சரவைச் சகாக்கள் பலரும் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதில் எதுவித தடங்கலோ, தாமதமோ இருக்காது என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியிருந்தனர்.

இதனையடுத்து அநுராதபுரத்தில் பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தமது ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோது வடக்கு-கிழக்குப் பிரச்னை குறித்து மனந்திறந்த நிலையில் தமது கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

முன்னைய ஆட்சியாளர்கள் வடக்கு-கிழக்கில் யுத்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதில் வெளிப்படுத்திய தீவிரத்தைப் பற்றியும் சந்திரிகா தமது அநுராதபுர உரையில் குறிப்பிட்டிருந்தார்.

மூவாயிரம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான ஆயுத பேரம் ஒன்றை முன்னைய ஆட்சியாளர்கள் ரஷ்ய நாட்டுடன் மேற்கொண்டதுடன், அப்பேரம் மூலமாக கொடிய ஆயுதங்களை வாங்குவதுடன், கோடிக்கணக்கான ரூபாய்களை தரகுப் பணமாகவும் ஏப்பம் விடுவதற்கு முன்னைய ஆட்சியாளர்களும், அவர்களது தரகர்களும் திட்டமிட்டிருந்ததையும் பிரதமர் சந்திரிகா தெரிவித்திருந்தார்.

> **நம் முன்னைய தலைமுறையால் சாக்கடைக்குள் தள்ளப்பட்ட சமாதானம் அதனை— மீட்டெடுப்பதே— இன்றைய சந்ததியின் பாரிய பணி**

கூடவே அரசியல் தீர்வில் தமக்கிருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்திய சந்திரிகா, எத்தகைய இடையூறுகள் ஏற்பட்ட போதிலும் தமது அரசு வடக்கு-கிழக்கு சர்ச்சைக்கு அரசியல் ரீதியிலான அணுகுமுறைகள் மூலமாகவே தீர்வொன்றைக்காண முன்வரும் என்று கூறியிருந்தார்.

வடக்கு-கிழக்கு நெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்றின் அவசியத்தை உணர்ந்திருக்கும் சந்திரிகா, தென்னிலங்கையில், பொருட்களின் விலைகளைக் குறைப்பதிலும் ஆர்வங் காட்டுபவராகக் காணப்படுகின்றார்.

பல்வேறு அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் விலைகள் தற்போது குறைக்கப்பட்டுள்ளன. இவ்விலைக் குறைப்பு சாதாரணமான மக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைக்க புதிய ஆட்சியாளர்கள் மேற்கொண்டுவரும்' ஆக்கபூர்வமான நடவடிக்கையையே புலப்படுத்துவதாக இருக்கின்றது.

வடக்கு-கிழக்கில் யுத்தக் கெடுபிடியும், தென்னிலங்கையில் வாழ்க்கைச் சுமை அதிகரிப்பும் காணப்பட்டிருந்த போதிலேயே முன்னைய ஆட்சியாளர்கள் 'பஜேரோ' **(Pajero)** கலாசாரத்தை மேற்கொண்டிருந்தனர்.

தட்டிக்கேட்க எவருமில்லாத நிலையில் எடுத்ததற்கெல்லாம், துப்பாக்கிகளிலேயே கைகளை வைத்திருந்தனர்.

ஆடம்பர வாகனங்களில் கோடிக் கணக்கான பணத்தைச் செலவிட்டும், வீண் படோபங்களில் அதிகப் பணத்தை முன்னைய ஆட்சியாளர்கள் செலவிட்ட தருணத்திலேயே, பொதுஜன ஐக்கிய முன்னணி நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

1970ம் ஆண்டில் சந்திரிகாவின் தாயார் திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கா, பல முன்னணி இடதுசாரித் தலைவர்களின் துணையுடன் ஆட்சியைக் கைப்பற்றியிருந்தார்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி என்ற பெயரில் அன்றைய சிறிமாவோ அரசாங்கம், பிற்போக்கான நடைமுறைகளையே நடைமுறைப்படுத்தியிருந்தது. இதனால் நாட்டு மக்கள் பட்டினி நிலைக்கே தள்ளப்பட்டிருந்தனர்.

> **சர்வதேச அரங்கில் தீர்க்கப்படாதிருந்த பிரச்னைகள் சுமுகமாகவும்—சமாதானமாகவும் தீர்க்கப்பட்டிருக்கின்றன.**



இப் பொல்லாத நிலைமை 1970ம் ஆண்டிலிருந்து 1977ம் ஆண்டுவரை நீடித்திருந்தது. இதனையடுத்து 1977ம் ஆண்டில் ஐ.தே.கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது.

இந்த ஆட்சி மாற்றத்தையடுத்து பொருளாதார நிலைமையை மேம்படுத்தும் வகையில் திறந்த பொருளாதாரத் திட்டத்தை ஐ.தே.க அரசு அறிமுகப்படுத்தியது.

கூடவே நாட்டின் ஆட்சியமைப்பையும் மாற்றியமைக்கும் விதத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையையும் திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனா தலைமையிலான ஐ.தே.க அரசு ஏற்படுத்தியிருந்தது.

திறந்த பொருளாதாரக் கொள்கை, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை என்பன இலங்கையர்களுக்குப் புதிய அனுபவங்களாகவே இருந்தன.

ஆயினும் இன்று ஐ.தே.கவின் பாராளுமன்ற ஆட்சி நிறைவுபெற்று நாடு மூன்றாவது ஜனாதிபதித் தேர்தலையும் எதிர்நோக்கியுள்ள இத்தருணத்தில், திறந்த பொருளாதாரக் கொள்கை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை என்பன, ஒரு முற்று முழுதான பொருளாதார அபிவிருத்தி-அரசியல் சுபீட்சம் ஆகியனவற்றைக் காண்பதற்குப் பதிலாக நாட்டை பல்வேறு வழிகளிலும் பாழடிப்பனவாகவே விளங்கியிருந்தன.

திறந்த பொருளாதாரத் திட்டத்தின் கீழ் பல்வேறு துரித அபிவிருத்தித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டன. ஆயினும் அவற்றின் பரிபூரண வெற்றியை மழுங்கடிக்கச் செய்வதாகவே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை காணப்பட்டது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை அரசியல் ரீதியாக ஏற்படுத்திய தாக்கங்கள் வடக்கு-கிழக்கு யுத்தத்தை விகாரமடையச் செய்திருந்ததுடன், தென்னிலங்கையில் எண்ணிலடங்காத அடிப்படை மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கும் வழிவகுத்திருந்தது.

தென்னிலங்கையில் இன்று நாளுக்கு நாள் தோண்டப்பட்டு வரும் புதைகுழிகள், கடந்த கால ஆட்சியில் கொலைவெறி தலை விரித்தாடியதையே புலப்படுத்துகின்றன.

வடக்கு-கிழக்கில் விமானக் குண்டு வீச்சுக்களாகவும், ஷெல் வீச்சுக்களாகவும் ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியெடுக்கப்பட்ட அதே சமயம், தென்னிலங்கையில் கண்மூடித்தனமான முறையில், மனிதப் படுகொலைகள் இடம்பெற்றிருந்தன.

வடக்கு-கிழக்கு மக்களின் பிரச்னையைத் தீர்ப்பதில் தாமதங்களை ஏற்படுத்தி, தமிழீழ விடுதலைப் புலிகளையும் பயங்கரவாதிகளாகவே பிரகடனப்படுத்தி அர்த்தமற்ற ஒரு நீண்ட யுத்தத்துக்கு ஐ.தே.க அரசு வழிவகுத்திருந்தது.

அதேவேளை தென்னிலங்கையில் இளஞ் சமூகத்தவரிடையே காணப்பட்ட வேலையில்லாப் பிரச்னை மற்றும் பல்வேறு சமூக, பொருளாதாரப் பிரச்னைகளையும் ஐ.தே.க. அரசு புறக்கணித்திருந்தது. தென்னிலங்கையில் காணப்பட்ட பல்வேறு சமூகப் பிரச்னைகளின் வெளிப்பாடாக விளங்கிய ஜே.வி.பி.யினரையும் பயங்கரவாதிகள் என்ற கண்ணோட்டத்துடனேயே முன்னைய ஆட்சியாளர்கள் நோக்கியிருந்தனர்.

வடக்கு-கிழக்கின் அடிப்படை அரசியல் பிரச்னையின் வெளிப்பாடாக விளங்கிய தமிழீழ விடுதலைப் புலிகளையும், தென்னிலங்கையின் அரசியல் சமூக, பொருளாதாரப் பிரச்னைகளின் பிரதிபலிப்பாக விளங்கிய' ஜே.வி.பி இயக்கத்தையும் நிதானமான அரசியல் நடவடிக்கைகள் மூலமாகக் கையாளுவதை விடுத்து, பலாத்காரமான கொடிய அடக்குமுறைகள் மூலமாகவே முன்னைய ஆட்சியாளர்கள் அணுகியிருந்தனர்.

இந்நிலையில் தென்னிலங்கையில் ஜே.வி.பி.யினரின் இராணுவ ரீதியிலான செயற்பாடுகளை மூர்க்கத் தனமாக முறியடித்து, கண்மூடித்தனமாக அடிப்படை மனித உரிமைகளையும் ஐ.தே.க ஆட்சியாளர்கள் மீறியிருந்தனர்.

ஆனால் வடக்கு-கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தவர் மீதான இராணுவ நடவடிக்கைகள் பாரதூரமான எதிர் விளைவுகளை ஐ.தே.கவினருக்கு ஏற்படுத்தியிருந்தது.

வடக்கு-கிழக்கு விவகாரம் என்பது ஒரு தனித்துவமான அரசியல் என்பதனையும், வடக்கு-கிழக்குப் பிரச்னைத் தீர்விலேயே முழு நாட்டினதும் முற்று முழுதான அபிவிருத்தி தங்கியுள்ளதென்பதனையும் கடந்தகால அனுபவங்கள் உணர்த்துவனவாக இருக்கின்றன.

வடக்கு-கிழக்கில் கெடுபிடி யுத்த நிலைமைகள் உக்கிரமடைகின்ற போதெல்லாம், ஒரு நிரந்தர சமாதானத்தை நோக்கி வெறுமனே பெருமூச்சு மட்டுமே விடமுடிந்தது: ஆனால், ஆயிரக்கணக்கான உயிர்கள் தமது இறுதி மூச்சுக்களை விட்ட போதெல்லாம், செய்வதறியாத நிலையிலேயே இருக்க முடிந்தது.

சர்வதேச அரங்கில் தீர்க்கப்பட முடியாதிருந்த பல்வேறு சிக்கலான இனப் பிரச்னைகள் சுமுகமாகவும், சமாதானமாகவும் தீர்க்கப்பட்டிருப்பதையே அறிய முடிகின்றது.

தென்னாபிரிக்காவின் நிறவெறிப் பிரச்னை, பாலஸ்தீனத்தின் தாயகப் பிரச்னை போன்றவற்றுக்கெல்லாம் உலக அரங்கில் வெற்றிகரமான தீர்வுகள் எட்டப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது.

இதே வேளை பிரிட்டனின் வட அயர்லாந்துப் பிரச்னைக்கும் அரசியல் ரீதியிலான தீர்வைக் காணும் சாத்தியக் கூறுகளே அண்மைக் காலங்களில் வலுவடைந்து வருகின்றன.

இந்நிலையில் விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சிகள் மேம்பட்டு, உலக சமூகம் சகலவற்றிலும் நவீன மயமான தன்மைகளைக் கண்டுவரும்போது குறுகிய வேறுபாடுகள் கண்ணோட்டங்கள் என்பன, மானிட சமூகத்தவரிடையே 'விஷம் மிக்க புல்லுருவி'களாகவே இருப்பதைக் காணமுடிகின்றது.

இந்நிலையில் பிரச்னைகளைத் தீர்க்கும் முயற்சிகளில் இறங்குவோர் தம்மிடையே சந்தேகங்கள், மற்றும் குறுகிய அற்ப-சொற்ப நிலைப்பாடுகள் என்பவற்றுக்கு இடந்தராது தமது மனநிலையை நன்கு பரந்து விரிந்த நிலையில் வைத்திருப்பதே மிகவும் இன்றியமையாததாகின்றது.

இந்நிலையில் கற்றோர், சான்றோர், என்று முன்பிருந்த தலைமுறையினர் சாக்கடையாக மாற்றிவிட்டுச்சென்ற இலங்கையின் சமாதான சகவாழ்வை, தெளிந்த சுத்தமான நீரோடையாக மாற்றுவதே இன்றைய சந்ததியினரின் தலையாய பணியாக இருக்கின்றது.

எனவே புதிய நல்லெண்ண சமரச முயற்சிகளில் இறங்குவோர் ஒரு பரந்துபட்ட நிரந்தரமான தீர்வையே தமது இலக்காகக் கொள்ள வேண்டியவர்களாகின்றனர்.

## அழகுக் குறிப்புக்கள்

# சருமத்தைப் பட்டாக்கும் 'வாக்ஸிங்'



ருக்கா–நாதன்

'வாக்ஸிங்' முறையினால் கை, கால்களில் தோன்றும் முடிகளை எளிதாக அகற்றலாம். இதனால் எவ்விதமான கெடுதலும் இல்லை. இது சருமத்தை பட்டுப்போல் மென்மையாக செய்கிறது. இவற்றை நாம் வீட்டிலே தயாரிக்கலாம்.

**வாக்ஸ் தயாரிக்கும் முறை:**
சீனி– 300 கிராம், எலுமிச்சைச் சாறு 1/2 கப் (10 எலுமிச்சம்பழம்)
கிளிஸரின்– 1 தேக்கரண்டி

சீனியையும் எலுமிச்சை சாறையும் ஒன்றாக கலந்து ஒரு கனமான பாத்திரத்தில் ஊற்றி அடுப்பில் வைக்கவும். பாகு நன்றாக கொதித்து கம்பிப் பதம் வந்ததும் கீழே இறக்கி கிளிஸரின் சேர்க்கவும். கைகளின்மீது முடி உள்ள இடத்தில் டால்கம் பவுடர் சற்றுத் தடவி, வாக்ஸிங் சூடு பொறுக்கும் படியானதும் முடி வளர்ந்துள்ள திசையில் கை மீது பாகை தடவி உடனே அதன்மீது 2" அகலமாக துணியை நீட்டமாக கிழித்து பாகின் மீது அழுத்தி வையுங்கள். பிறகு முடி வளர்ந்த எதிர் திசையில் உள்ள துணியின் ஓரத்தை சற்று தூக்கி உடனே எதிர் திசையில் இழுக்க வேண்டும். துணியில் பாகுடன் முடியும், ஒட்டிக்கொண்டு வேருடன் வந்துவிடும். இப்படி துணிப் பட்டைகளை ஒவ்வொன்றாக போட்டு கைகள், தோள்கள் அக்குள்கள் மற்றும் தொடை, கால்களில் உள்ள முடிகளை அகற்றி விடலாம்.

முகத்தில் உள்ள சருமம் மிகவும் மிருதுவாகவும் மெல்லியதாகவும் உள்ளபடியால் முகத்திற்கு இந்த வாக்ஸிங் செய்யக் கூடாது. ஏனெனில் முகத்தில் சருமம் இழுபட்டு சீக்கிரம் சுருக்கங்கள் தோன்றும். அடிக்கடி வாக்ஸிங் செய்து வந்தால் நாளா வட்டத்தில் கை கால்களில் முடி வளர்வது நின்றுவிடும். வாக்ஸிங் செய்யும் போது அந்த இடத்தில் எரிச்சலோ அல்லது செம்புள்ளிகளோ தோன்றினால் உடனே ஐஸ் வைக்கவும். பின்பு கிறீம் போட்டு மசாஜ் செய்யவும்.

முகத்திற்கு வாக்ஸிங் செய்வதானால் கோஸ்வாக்ஸ் கிடைக்கிறது. அதை பாவிக்கலாம். இதைவிட முகத்தில் உள்ள முடிகளை த்ரெட்டிங் செய்து அகற்றலாம். ஹெயார் ரிமூவர் கடைகளில் உண்டு. இவை மூலமாகவும் முடி அகற்றலாம். ஆனால் இவை சிலருக்கு அலர்ஜி ஆக்கிவிடும். 'ஃப்யூமிஸ் ஸ்டோன்' எனப்படும் ஒரு வகை கல்லும் முடியை அகற்ற உபயோகிக்கப்படும்.

இவைகளை விட மூலிகைகள் மூலமாகவும் முடி அகற்றலாம். ஆனால் இவை வெகு நாட்களுக்கு பொறுமையுடன் செய்ய வேண்டும். (மஞ்சள், கஸ்தூரி மஞ்சள் போன்றவை.)

### விரும்பத்தக்க பழக்க வழக்கங்கள்



எப்போதும் சுறுசுறுப்பாக இருங்கள். உங்கள் புன்னகையே மற்றவர்களை உபசரிக்கும். தவறு செய்யும் மற்றவர்களை மன்னியுங்கள். உங்கள் பழக்க வழக்கங்கள் உங்கள் குணம் எல்லாவற்றிலும் அழகு இருக்க வேண்டும்.

## கர்ப்பிணிகளும் வைத்திய ஆலோசனையும்

நீங்கள் கருவுற்றிருக்கும் காலப் பகுதியில் உங்களின் உடலில் கீழ்காணும் அறிகுறிகளில் ஒன்றோ பலதோ ஏற்படும் பட்சத்தில் தாமதியாது வைத்தியரை அணுகி ஆலோசனையை பெற்றுக்கொள்வது ஆவசியமாகும்.

01. பெண் உறுப்பில் இரத்தக் கசிவு ஏற்படுதல்.
02. முகம் மற்றும் கை கால் பகுதியில் வீக்கம் ஏற்படுதல்
03. அதிகமான உடல் வலிகள் ஏற்படுதல்.
04. வயிற்றில் உள்ள குழந்தை அதிகமாக துடித்தால் அல்லது துடிக்காதிருத்தல்.
05. உடல் உஷ்ணம் அதிகரித்து காணப் படுதல், (பரன்ஹைய்ட் 101.6 வெப்பத் திற்கு அதிகமாதல்) அல்லது உடல் குளிர்ந்து காணப்படுதல்.
06. பார்வை மங்கி வருதல்



07. சிறுநீர் கழியும் பொழுது வேதனை உண்டாகுதல்
08. விழுதல் அல்லது பலமாக மோதியமை போன்ற சம்பவங்கள் ஏற்படுதல்.

## நீங்களும் தைக்கலாம் எஸ்-எஸ்


### 16 வயதுப் பெண் பிள்ளைகளுக்கான பிளவுஸ் (Blouse)



முன்பக்க அளவு– 16அங்குலம்
நீளம் – 12+8 அங்குலம்
கை நீளம்– 6 அங்குலம்
கை அகலம்– 20 அங்குலம்
கொலரின் அளவுகள்–
நீளம்–15 அங்குலம்
அகலம்– 3 அங்குலம்


**வெட்டும்முறை:**


மேலே கொடுக்கப்பட்ட அளவின்படி 16+16 அங்குல இரு துணிகளை எடுத்துக் கொள்ளவும். முன்பக்கம் படம் Iல் காட்டப்பட்டவாறு 8 அங்குலமாக மடித்துக் கொள்க. மடித்த அப்பகுதிகளில் Aயிலிருந்து உள்நோக்கி 2 1/2 அங்குலம் அளந்து Eஎனக் குறிக்குக. Eயிலிருந்து 4 அங்குலம் அளந்து Fஎனக் குறிக்குக. எஞ்சிய பகுதி 1 1/2 அங்குலமாகும். அப்பகுதியே கழுத்துப் பகுதி யாகும். முன்பக்கக் கழுத்தினை 2 அங்குலம் பதிவாக வெட்டவும். பின்பக்கக் கழுத்தை 1/2 அங்குலம் பதித்து வெட்டவும். இவ்வாறு வெட்டிய பின்னர் படம் 2ன் வடிவத்தினை வெட்டுவோம்.




8 அங்குல நீளம் 24+24அங்குல அகலமுமான சதுர துணியினை எடுக்கவும். எடுத்த அப்பகுதியை சமனாக மடித்து ABCD எனக் குறித்துக்கொள்ளவும். படம் 2 வடிவம் போன்று சரிவாக வளைவாக வெட்டவும். இதன் பின்னர் படம் 3ன் வடிவம் கொலர் பகுதியாகும். அப்பகுதிக்கு 15 அங்குல நீளமும் 3 அங்குல அகலமுமான நேர் துண்டினை எடுத்து படம் 3 அமைப்பினைப்போன்று வளைத்து வெட்டவும்.

**கை வெட்டும் முறை:**





20 அங்குல அகலமும் 6 அங்குல நீளமுமான சதுர துணியினை எடுக்கவும். எடுத்து அப்பகுதிக்கு ABCD எனக் குறித்துக்கொள்ளவும். Aயிலிருந்து கீழ்நோக்கி 3 1/2 அங்குலம் அளந்து Eஎனக் குறிக்குக. Eக்கும் Cக்கும் இடையில் உள்ள அளவு 1 1/2 அங்குலமாகும். Cயிலிருந்து உள்நோக்கி 2 அங்குலம் அளந்து Fஎனக் குறிக்குக. இக் கை வடிவத்தினை படம் 4ல் காணலாம். இவ்வாறு வடிவத்தினை நன்கு கவனித்து வெட்டவும்.



வெட்டிய பகுதிகளை பொருத்துவோம்.

முதலில் தோள் பகுதியினை பொருத்தவும். அதன்பின்னர் விலாப் பகுதியினைப் பொருத்தவும். இப்பகுதியும் பொருத்தப்பட்டபின்னர். 28-30 அங்குல நீளமும் 2 அங்குல அகலமுமான நேர் துணியினை எடுத்து பொருத்தப்பட்ட மேற்சட்டையில் சிறு சிறு சுருக்கிடவும். இவ்வாறு படம் 2ல் காட்டப்பட்ட வடிவத்தினை திரும்பவும் மேற் பகுதியுடன் சிறு சிறு சுருக்கிட்டுக் கொள்ளவும். இதன் பின்னர் பிளவுசின் திறந்து பூட்டும் பகுதியை துணி வைத்து மடித்துத் தைக்கவும். பின்னர் கொலர் பகுதியை கழுத்துடன் பொருத்தவும். இவைகளை பொருத்திய பின்னர் கையை கைப் பகுதியில் பொருத்தவும்.

இப்போது படத்தில் காட்டப்பட்டவாறு அமைந்துவிட்டதா என்று அவதானிக்கவும்.

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது–சுகந்தினி

### கரட் உப்புமா

**தேவையான பொருட்கள்:**
கரட்–1/2 கிலோ
கடலை– 400 கிராம்
பச்சைமிளகாய்– 6
சோம்பு–ஒருகரண்டி
கடுகு– 2 கரண்டி
உளுத்தம் பருப்பு– 2 கரண்டி
கோதுமை மாவு– 2 கரண்டி
தேங்காய் எண்ணெய்–தேவைக்கேற்ப
கொத்தமல்லித்தளை–சிறிதளவு
தக்காளி– 4
உருளைக்கிழங்கு–1
பெரிய வெங்காயம்–06
உப்பு–தேவையான அளவு

**செய்முறை:**

கடலையை முதல் நாள் இரவே ஊறவைக்கவும். கரட், உருளைக் கிழங்கு போன்றவற்றை நன்றாகக் கழுவி மேல் தோலைச் சீவி புளியங்கொட்டை அளவு நறுக்கி வைக்கவும். பச்சைமிளகாய், வெங்காயத்தை அரிந்து கொள்ளவும். ஊறின கடலையை நன்றாக அலம்பி வேக வைக்கவும்.

கரட், உருளைக்கிழங்கு போன்றவற்றை அதிலேயே போட்டு நன்கு வேக வைக்கவும். தேவையான அளவு உப்பு சேர்த்து வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு போட்டு வெடித்ததும் சோம்பு, உளுத்தம் பருப்பைப் போடவும். பின்னர் வெங்காயம், பச்சைமிளகாயைப் போட்டு வதக்கவும்.

வெந்த கரட், உருளைக்கிழங்கு, கடலை கலவையை வாணலியில் போட்டு கிளறிக் கொள்ளவும். பக்குவம் வந்ததும் கோதுமை மாவைத் தூவி விடவும். பின்னர் கொத்தமல்லி, கறிவேப்பிலை தக்காளி போட்டு கிளறவும். இப்போது கரட் உப்புமா ரெடி.

## லேடீஸ் ஸ்பெசல்

### வீட்டுக் குறிப்பு



துணிகளில் எண்ணைக் கறை படிந்து உள்ளதா? கறை உள்ள இடத்தின் மீது முதலில் சிறிதளவு டால்கம் பவுடரை தூவி அழுந்தத் தேய்த்து விடுங்கள். பிறகு வழக்கமான முறையில் துணியை துவைத்து விடவும். கறை இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.




## சிந்திக்கலாம் இங்கே

'சாகத் துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்காலளவு.'

சாதிக்க வேண்டும் என்ற துணிச்சல் உள்ளவனுக்கு வெற்றி விரல் நுனியில் காத்திருக்கும்.

எந்தவொரு காரியத்திலும் ஈடுபடும்போது நம்பிக்கைதான் உயிர்நாடி.

அதற்காக வரட்டுத்தனமான நம்பிக்கைகளுக்கு எல்லாம் வரவேற்புக் கொடுக்க வேண்டும் என்று அர்த்தமல்ல.

சாதாரண பஸ் நடத்துநராக இருந்த ரஜினிகாந்த் தன்னால் நடிக்க முடியும் என்று நம்பியதுதான் முயற்சியின் தொடக்கம்.

உன்னாலே முடியாது போ என்று திருப்பியனுப்பிவிட்டு பின்னாலே நின்று சிரித்தவர்கள் சிலர்.

"இவன் எல்லாம் நடிக்க வந்து விட்டான் பாரடா" என்று பல்லைக் காட்டியவர்கள் வேறு சிலர்.

தோலின் நிறத்தையும், தோற்றப் பொலிவையும் வைத்தே புது முகங்களை திரையில் அறிமுகம் செய்த காலத்தில் அதற்கெல்லாம் நேர்மாறான உருவத்தோடும் நிறத்தோடும் சினிமாவில் வாய்ப்புத் தேடியதுதான் தளராத நம்பிக்கையின் முத்திரை.

"ரஜினி பெரிய நடிகராகவில்லையா? நம்மால் ஏன் முடியாது" என்று சட்டைக் கொலரைத் தூக்கி விடுவது மட்டும் நம்பிக்கைத் துணிச்சலாகிவிடாது.

ரஜினிகாந்துக்கு சினிமாவில் வாய்ப்பு வசமானதுக்குக் காரணம் அவரிடம் தெரிந்த தனித்துவம்.

வேறு யாரையும் பின்பற்றாமல் தனக்கென்று ஒரு தனிப்பாணியை யோசித்து முயற்சித்து அந்த வித்தியாசத்தை தனது விலாசமாக்கினார்.

அந்த விலாசம்தான் ரஜினி பிரபலமாகி 'சூப்பர் ஸ்டா'ராக சுடர்விடக் காரணமானது.

நடிகராக வேண்டும் என்று விரும்பியவர்கள் எல்லாம் சிவாஜி மாதிரியே நடித்துக் காட்டுவார்கள். கட்டப் பொம்மன் வசனத்தை மனப்பாடமாக்கி ஒப்புவிப்பார்கள்.

அவர்கள் மத்தியில் ரஜினியின் தனிப்பாணி பாலச்சந்தரை பற்றிப் பிடித்ததால்தான் ரஜினியால் சினிமா வாய்ப்பை எட்டிப்பிடிக்க முடிந்தது.

சினிமாவைப் பொறுத்தவரையில் மட்டுமல்ல சகல காரியங்களிலும் ஆர்வமும்-ஆழமான அக்கறையும் முக்கியம்.

அக்கறை அனுபவத்தை தரும். அனுபவம் புதுமைகளுக்கு ஏற்ற உத்திகளை தரும்.

அரைத்த மாவையே 'அரைத்துக் கொண்டிருந்தால் அலுப்புத்தான் மிஞ்சும். ஆர்வமும் குன்றும்.

அப்படித்தான் ஈடுபடும் வேலைகளிலும் புதிய மாற்றங்கள் இல்லையென்றால் சோர்வுதான் தழுவிக் கொள்ளும்.

வேலை ஒன்றாகவே இருக்கலாம். செய்யும் முறையில்தான் மாற்றம் வேண்டும்.

செய்வது பானையாக இருந்தாலும் அதிலும் சிறப்பான தேர்ச்சி வந்துவிட்டால் புதுமை செய்யலாம்.

செதுக்குவது சிற்பமாக இருந்தாலும் வெளிப்படுத்தும், கருத்தும், வடிவமும் புதுப் பொலிவானதாய் இருக்கலாம்.

நூறு சிற்பி இருந்தால் நூறு பேரும் ஊரறிய, உலகறிய புகழ் பெற்றுவிடுவதில்லை.

அந்த நூறு பேரில் எவர் எவர் தனித் திறமையை வெளிப்படுத்தி முத்திரை பதிக்கிறார்களோ அவர்களே புகழ் ஏட்டில் தம் பெயரை பத்திரப் படுத்த முடிகிறது.

எமது முயற்சிகள் பிரதியெடுக்கும் நகலக்ளாக இருக்கக்கூடாது. அசலகளாக இருக்க வேண்டும்.

முன்னவர்களின் பாதிப்புக்கள் எமது முயற்சிகளில் தெரியத்தான் செய்யும். ஆனால் அவர்கள் செய்ததை அப்படியே திரும்பச் செய்துகொண்டே இருந்தால் எமது பதிவு என்று எதுவுமேயிருக்காது.

புதுமைக்கு எப்போதும் வரவேற்பு இருக்கவே செய்கிறது.

அந்த வரவேற்பு எமது முயற்சிகளை முதுகில் தட்டிக்கொடுக்கும் போது உற்சாகம் ஊற்றெடுக்கும்.

அந்த ஊற்றிலே சோர்வும், சுமைகளின் வலியும் அடிபட்டுப் போய்விடும்.

எனவே- சாதிக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டே நிம்மதியான நித்திரையில் இருந்தால் வாழ்க்கையில் உனது முத்திரையைப் பதிக்க முடியாமல் போகும்.

இன்றே எழுந்திரு. செய்யும் தொழிலை- பணியை உன் முயற்சியால் உருவாக்கும் புதுமை வெளிச்சத்தில் அழகுபடுத்து. ஆழப்படுத்து. வெற்றி நிச்சயம்.

□□

## முரசின் பரிசு

யார் அந்த 50 அதிஷ்டசாலிகள்?

தினமுரசு நடத்தும் பரிசுப் போட்டி.

* 50 பேர் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

முரசின் பரிசு
கூப்பன் இல 12
உண்மை–நேர்மை–
வெளிப்படைத்தன்மை

* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* பரிசுக் கூப்பன்களை 1-25 வரை பத்திரமாக சேர்த்து வைக்க வேண்டும்.
* நாம் அனுப்பச் சொல்லும் போது 25 கூப்பன்களையும் அனுப்பி வைக்கலாம்.
* மிக்ஸி- ரைஸ் குக்கர்கள்-இட்லி குக்கர்கள், கைக் கடிகாரங்கள், நவீன ரக இல்லப் பொருட்கள் என்பன பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.
* கூப்பன்களை பத்திரமாக சேகரியுங்கள். உங்கள் அதிஷ்டத்தைப் பரிசீலிக்கலாமே.

# கட்டுமீறி வளர்ந்த கட்டுடல்?!

## காணக்கண் கோடி வேண்டும்





## பெ...பெ...பெ...ரி...ய.....வாய்!

வாய் இருந்தால் வங்காளம் போகலாம் என்று ஊரில் பேசப்படுவதுண்டு. வாயிருக்கிறது பிழைத்துக்கொள்வான் என்றும் சொல்லப்படுவதுண்டு.

அப்படியாக வாயின் பலன்கள் பலவகைப்படும். பல ரகப்படும்.

வாயாடிகளை அவனுக்கு அல்லது அவளுக்கு பெரியவாய் என்று சொல்லுவதுண்டு. அதன் அர்த்தமும் பெரிய வாய் என்பது அல்ல.

ஆனால் ஸ்கொத்லாந்தில் உள்ள நீல்மரிக் லமார் என்ற வாலிபனுக்கு உண்மையிலேயே பெரிய வாய். படத்தைப் பாருங்கள்.

இந்தப் பெரிய வாயால் அடித்திருக்கிறது அதிஷ்டம்.

திருவாளர் அவலட்சணம் என்னும் தொலைக்காட்சித் தொடரில் கதாநாயகனாக நடிக்கும் சந்தர்ப்பம் என்றால் சாதாரணமா? பல இலட்ச ரூபாய்கள் ஊதியம்.

வாய்ப்புக் கிடைத்த கதைதான் சுவாரசியம். தொலைக்காட்சி செய்தி விமர்சகர் ஒருவர் தெரு நிகழ்ச்சிகளை படம் பிடித்துக்கொண்டிருந்தபோது நீலும் வாயை விரித்தபடி கமராவில் படும்படியாக நடமாடினான்.

செய்திப் படத்தை ஒளிபரப்பியபோது நிகழ்ச்சித் தயாரிப்பாளருக்கு பெரிய வாய் நீல் கண்ணில் பட்டுவிட்டான். உடனே ஆள் அனுப்பித் தேடி நீலை பிடித்து வந்தார்கள். என்னவோ ஏதோ என்று பயந்துபோன நீலுக்கு நடிக்கும் வாய்ப்பு கிடைத்த செய்தி வெல்லக் கட்டியாய் இனித்தது.

இப்போது காதைக் கொடுங்கள். இந்த பெரிய வாய் நீலுக்கு எப்படி வந்தது தெரியுமோ? தன்னுடைய தங்கையின் கை வளையல் ஒன்றை தனது வாயுள் செலுத்தி மேலுதடு, கீழுதடு ஆகியவற்றின் கீழ் மறைத்துவிடுகிறான். தனது கண்களையும் பெரிதாக விழித்துக்கொள்கிறான். பெரிய வாய் தயார். எப்படியோ நடிகனாகிவிட்டான். கில்லாடிதான்.

காண்பதென்ன கனவா அல்லது நனவா? இவள் என்ன பெண்ணா இல்லை பெருமலையா?! என்று மலைத்துப் போய்விட்டீர்களா? முரசின் குண்டர் ஸ்பெசல் வரிசையில் இது அமர்க்களமான தகவல். இப் பெண்ணும் ஒரு காலத்தில் கட்டழகியாக இருந்தவர்தான். அதுவும் பல்லாயிரம் இரசிகர்களை கவர்ந்த நாடக நடிகையாக இருந்தவர். பெயர் ரெய்கியோ. திடீரென்று பருக்கத் தொடங்கி இப்படியாகிவிட்டார். ஆனாலும் இந்த உடலை வைத்தே 'மொடலிங்' செய்கிறார். வருமானத்திற்கு குறைவில்லை. போக்குவரத்துக்கு விசேஷமான பெரிய 'ட்றக்' வண்டி ஒன்றை தயாராக வைத்திருக்கிறார். இவரது எடை என்ன? அதிகமில்லை- ஆக 719 இறாத்தல் மட்டும். உடல் எடை மேலும் ஏறினால் விபரீதம் என்பது டாக்டர்கள் எச்சரிக்கை. அதனால் தினசரி பயிற்சியிலும் ஈடுபட்டு வருகிறார்.



## தகவல் பெட்டி

### ஏறலாம் ஏறு!

தரையிலேதான் சைக்கிள் ஓடவேண்டுமா? அல்லது ஓடமுடியுமா? மரத்தில் ஓடினால் என்ன? யோசித்து கண்டுபிடித்துவிட்டார்கள். மரத்தில் ஏறும் இந்த சைக்கிள் ஐக்கிய எமிரேட் குடியரசில் உள்ள ஒருவரால் பரீட்சார்த்தமாக தயாரிக்கப்பட்டது. ஏறுது பார்- ஏறுது பார் ஐயாவோட சைக்கிள்.

## துப்பறியும் புத்திசாலி நாய்கள்







மோப்ப சக்தி உள்ள நாய்களுக்கு துப்பறியும் துறையில் நல்ல கிராக்கி.

தனிப் பயிற்சி கொடுத்து தயாராக்கிவிட்டால் போதும்.

ஒரே பாய்ச்சல். குற்றவாளிகளின் கோட்டைவரை போய்விடும்.

பொலிசாரால் பயிற்சியளிக்கப்பட்ட நாய்களுக்கு மாத்திரமல்ல, அதன் குட்டிகளுக்கும் மவுசு. தாயைப்போல பிள்ளை. நூலைப்போல சேலை. அதனால் குட்டிகளை எத்தனை ஆயிரம் கொடுத்தும் வாங்கிவிட பலத்த போட்டி நடக்கும்.

படத்தில் பொலிஸ் துறைக்கான நாய்களை பரிவோடு வளர்த்து தயார்படுத்துபவர் குட்டிகளை தூக்கி குதூகலிக்கிறார்.

பொலிஸ்நாயான மாகிரட் ஈன்றுள்ள குட்டிகள் எத்தனை தெரியுமோ? 22.




...சாவ்லா

# மினிசினி

- கமலின் 'நம்மவர்' தற்போது முடிவடையும் நிலையில் உள்ளது. இதனையடுத்து இவர் கே.விஸ்வநாத் இயக்கும் தெலுங்குப் படத்தில் நடிக்கவுள்ளார். இதன் பின்னர் கே.பாலசந்தர் இயக்கத்தில் நடிக்கவுள்ளார். இதற்கிடையில் பாலுமகேந்திரா இயக்கும் இவரது சொந்தப் படத்தில் கௌரவ வேடத்தில் நடிக்கவுள்ளார்.
- சென்ற ஆண்டின் சிறந்த படமாக ஜனாதிபதி பரிசு பெற்ற 'மணிச் சித்ரதாழ்' படத்தை இயக்கியவர் பாசில். இப்போது இவர் வினீத்-ஷோபனா ஜோடியாக நடிக்கும் மலையாளப் படமொன்றை இயக்கி வருகிறார்.
- தெலுங்கில் நாகார்ஜுன்-ஸ்ரீதேவி நடித்து தமிழுக்கு மொழிமாற்றப்படவுள்ள படம் 'நாட்டுக்கு நல்ல தீர்ப்பு'. 'உதயம்' புகழ் ராம்கோபால் வர்மா இயக்கியுள்ள இப்படத்தின் கதையை எழுதியுள்ளவர் மணிரத்தினம்.
- சரத்குமார் நடிக்கும் 'நாட்டாமை' படத்தைத் தயாரிக்கும் சுப்பர் குட் பிலிம்ஸ் நிறுவனம் அடுத்து அர்ஜுன் நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளது. பார்த்திபன் நடித்த 'உன்னை வாழ்த்திப் பாடுகிறேன்' படத்தை இயக்கிய ஸ்ரீதேவ் இப்படத்தை இயக்குகிறார்.
- 'சேவப்பேரி பாண்டி' படத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டராக நடித்த ஜி.டி.ரமேஷ், ராதிகா இணைந்து நடிக்கும் படம் 'உதவும் கரங்கள்.' இதில் நடிகை ஜெயப்பிரதாவின் சகோதரி மகள் இரண்டாவது கதாநாயகனாக அறிமுகமாகிறார்.
- பாக்கியராஜின் 'சுந்தரகாண்டம்' படத்தில் இரண்டாவது கதாநாயகியாக நடித்த சிந்துஜா, 'சிட்டி' என்ற மலையாளப் படத்தில் ஒரு பாடல் காட்சியில் நடனமாடியுள்ளார். இப்படம் தமிழிலும் வரவுள்ளது.
- பிரபுவின் 'செந்தமிழ்ப்பாட்டு' படத்தில் பிவாகவால் வில்லனாக அறிமுகப்பட்டவர் காசன்கான். இவர் தற்போது 'பாட்சா', 'கட்டுமரக்காரன்', 'ஆணழகன்', 'நிலா' போன்ற படங்களில் வில்லனாக நடித்து வருகிறார்.
- பாரதிராஜா இயக்கத்தில் பிரபு நடிக்க இருக்கும் 'திருவிழா' படத்தின் பெயர் மாற்றப்படவுள்ளது. அத்துடன் முதலில் இசையமைக்க ஒப்பந்தமான ஏ.ஆர்.ரகுமானுக்கு பதிலாக தற்போது தேவாவை இசையமைக்க ஒப்பந்தமாக்கியுள்ளனர்.

# நாட்டாமை

நாட்டாமைக்கு சுற்று வட்டார மக்கள் மத்தியில் நல்ல பெயர். கிராமத்து தகராறுகளை தீர்த்து வைப்பது மட்டுமல்லாமல் கிராம மக்களுக்கு உதவுவதிலும் நாட்டாமைக்கு நாட்டம் அதிகம். நாட்டாமையின் வயல் அறுவடை என்றால் கிராமமே திரண்டுவிடும். அறுவடையில் கலந்து கொள்ளும் குடும்பங்களுக்கு மூட்டை மூட்டையாக நெல் வீடுக்குப் போய் சேரும். இப்படி நாட்டாமையின் குணத்தை சித்தரிக்கும் காட்சிகளை படமாக்கியுள்ளார்கள். கே.எஸ்.ரவிக்குமார் இயக்கும் 'நாட்டாமை' படப்பிடிப்புகள் நிறைவாகும் கட்டத்தை நெருங்கி வருகின்றன.



சரத்குமார்-குஷ்பு
படம்-நாட்டாமை

## இயேசுவாக புதுமுகம்

இயேசு கிறிஸ்து நாதரின் வாழ்க்கை வரலாற்றை 'பரமபிதா' என்னும் பெயரில் தமிழில் படமாக்கி வருகிறார்கள். கடந்த ஆறு மாதமாக இயேசுவாக நடிக்கக்கூடிய நடிகரை தேடியலைந்து இப்போதுதான் பிடித்திருக்கிறார்கள்.

கே.ஆர்.வினோத் என்னும் புதுமுகம் இயேசுவாக நடிக்கிறார்.

ஏரோது மன்னனாக நடிப்பது மன்சூரலிகான்.

பெத்லகேம் உட்பட இயேசுநாதரின் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட முக்கிய இடங்களில் படப்பிடிப்பு நடக்கவுள்ளது.

## குழந்தைக்குப் பின் ஐஸ்வர்யா!

ஐஸ்வர்யாவுக்கு பெண் குழந்தை பிறந்துள்ளதால் மிக்க மகிழ்ச்சியோடு இருக்கிறார்.

குழந்தை பிறந்ததும் நடிப்புக்கு டாட்டா காட்டி விடுவார் என்று பேசப்பட்டது. ஆனால் ஐஸ்வர்யா "தொடர்ந்து நடிக்கப் போகிறேன்" என்று கூறியுள்ளார்.

ஏற்கனவே நடித்துக்கொண்டிருந்த 'பத்ரகாளி மைந்தன்' படப்பிடிப்பிலும் விரைவில் கலந்துகொள்ளப் போகிறார் ஐஸ்வர்யா.

## எங்கே போனாளோ?

'மே மாதம்' படத்தில் கதாநாயகியாக அறிமுகமான சோனாலி பம்பாய் நடிகை. இந்த நடிகையை புதிய படம் ஒன்றில் நடிக்க வைக்க ஒரு தயாரிப்பாளர் தேடியலைந்தாராம். சென்னையில் கேட்டால் பம்பாயில் என்கிறார்கள். பம்பாயில் வீட்டில் கேட்டால் சென்னையில் என்கிறார்கள். வெறுப்பேறிய தயாரிப்பாளர் சோனாலியை நடிக்கவைக்கும் ஆசைக்கு 'குட்பை' சொல்லிவிட்டு, வேறு ஒரு பம்பாய் நடிகையை இறக்குமதி செய்துள்ளாராம்.

## ஆசை

இயக்குநர் மணிரத்தினத்தின் சொந்தத் தயாரிப்பான 'ஆசை' படவேலைகள் ஆரம்பமாகியுள்ளன. படத்தை இயக்குவது மணிரத்னமல்ல. 'கேளடி கண்மணி' படம் மூலம் பிரபலமான வசந்த் இயக்கும் படம் இது.

'ஆலயம்' பட நிறுவனத்தை நடத்திவரும் மணிரத்னம் வேறு இயக்குநர்களை வைத்து படத் தயாரிப்பில் ஈடுபட்டு வருகிறார். ஏற்கனவே 'சத்திரியன்' 'தசரதன்' போன்ற படங்களையும் வேறு இயக்குநர்கள் மூலமாக 'ஆலயம்' பட நிறுவனம் தயாரித்து வெளியிட்டிருந்தது.

'ஆசை' பட இயக்குநர் வசந்தின் ஆசை என்னவென்றால் மற்றொரு கேளடி கண்மணியாக இந்தப் படமும் தன் பெயரை பேச வைக்க வேண்டும் என்பதுதான்.

மறக்குமுடியவில்லை

வெளுக்கியது துலக்கிற்றுபடி வந்தனைத்தான் அதே நொடி மனையும் பயிரும்-அவனும் நானும் மறப்பதென்றால் அது எப்படி? -பாரதிதாசன்-



மதுபாலா

'உனவானி' படத்தின் மூலம் வசூல் அறுவடை யானதால் ராம்கியின் மார்க்கெட் உயர்ந்திருக்கிறது. ஏற்கனவே பிஸியாக இருக்கும் ராம்கியை நோக்கி சின்ன பட்டு ஜெட்டில் படமெடுக்கும் தயாரிப்பாளர்கள் படை எடுக்கத் தொடங்கி விட்டார்கள்.

## அப்பா-மகள்!

பாண்டியராஜன்- யுவராணி ஜோடி சேர்ந்து நடிக்கும் படம் 'மாப்பிள்ளை மனசு பூப்போல'.

பாடல் காட்சிகள் படமாக்கப்பட்டு வேகமாக வளர்ந்துவரும் படம் இது.

'மதுரையிலே வாங்கி வந்த மரக் குதிரை' என்று தொடங்கும் பாடலை எஸ்.பி.பாலசுப்பிரமணியமும் அவரது மகள் பல்லவியும் பாடியுள்ளனர்.

## ஷோபனா வீட்டுக்குள்...

தமிழ் நாட்டில் நடிகை ஷோபனாவின் வீடு வைை அழகிய வேலைகளைக் கொண்டது. இவர் தற்போது இந்த வீட்டை படப்பிடிப்புகளை நடத்த வகற்கு விட்டுள்ளார். மலையாளப் படங்கள் மட்டும்தான் அங்கே எடுக்கப் பட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இப்போது ஷோபனா வீட்டில் மோகன்லால்-மீரா நடிக்கும் படமொன்று படமாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.



விக்ரம்-ஜெனி
படம்-புதிய மன்னர்கள்

## பிடிக்...

## செய்திதான்

'பதவிப் பிரமாணம்' படத்தின் இயக்...
கீர்த்தனாவும் ரகசிய திருமணம் செ...
என்ற செய்திதான் இப்போது கோடம்பா...
'உங்கள் அன்புத் தங்கச்சி', 'சன்னதிப்பு...
கும்மிடணும்' ஆகிய படங்களில் ...

இந்த வளர்ச்சியைப் பொறுக்காத சிலர் இந்... வருகிறார்கள். உதயசங்கருக்கும், எனக்கும் இயக்குநர்-... வேறு எந்த மாதிரி உறவு முறையும் கிடையாது." என்று மறுக்கி...

## மீசைக்கு டாட்டா

...ளர் மக்களை ஏமாற்றி பணம் சம்பாதிக்கும் வில்லன் வங்கியொன்றில் பணத்தைப் ...
மன்சூர் அலிகான் ஏமாற்றிக் கொள்ளை அடிப்பதாக 'வாழ்க ஜனநாயகம்' படத்...
'இதை வித்தியாசமாக மக்கள் ரசிக்கும் விதத்தில் எடுக்க வேண்டும்' என உதவி ...
எடுக்கலாம்?" என்று கேட்...
"நீங்கள் பெண் வேடத்தில் வந்...
ஆனால் நீங்கள் பெண் வேடத்தி...
கேட்டனர். "நானா எதற்கும் ...
எடுத்து விட்டு முஸ்லிம் பெண்...
நடித்தார். இவருடன் அ...

## தப்பில்லா

அன்...
படத்தில் 150...
கொண்டாட...
வந்திருந்த ...
சிரஞ்சீவி த...
"தமிழ் ந...
பழைய நா...
தமிழில் ...
மன்னித்து...
ஆரம்பித்து ...
இல்லாதபடி...

கார்த்திக் நடித்து ...
படம் 'முத்துக்காளை' ...
ஆர்.வி.உதயகுமாரின் ...
இருந்த கோகுல கிரு...
முத்துக்காளை மூலம் ...
அந்தளவு கிடைத்து...
'முத்துக்காளை' எப்...
வெளிவந்திருக்க வே...
கார்த்திக்கின் ஜோடி...
சௌந்தர்யா தெலுங்...
படவுலகில் பிஸியாகி...
அவரை பிடித்து வந்...
எடுத்து முடிக்க கா...
விட்டது 'முத்துக்காள...
மன்னார்சாமி எழுப...
படமாக இருக்குமா...
இசை-இளையராஜா.

## குரு-சிஷ்ய...

இயக்குநர் பாக்யரா...
உதவியாளராக இரு...
வாதான் பாண்டியரா...
பின்னர் தனியாகிச் செ...
'ஆண்பாவம்' படத்தில் இ...
நடித்தார். பட பிர...
மாக ஒடியதால் பாட...
படங்களைத் தந்தார். ...
யிலே ஒரு சரிவு
இப்போது மீண்டும்...
எழுந்திருக்கிறார். தன...
...தார் பாக்யராஜ...
வசனம் எழுதும் படம்...
நடிக்கிறார். இவருடை...
'தாய்க்குலமே தாய்க்கு...
படத்திற்கு பெயர் ...
படத்தின் தலைப்பு பே...
படம் என்று தெரிந்து...
இருவர் ஊர்வசி...
மற்றொரு கதாநாயகி...
இசை-தேவா.

## யந்த்ரா இல்ல...

இவருடன் நடி...
என்று கவுண்ட...
'கலைஞன்' படத்...
நடிக்கப் போகிறே...
தெரிந்ததுடன் ...
கமல்சார் கோபக்...
பட்டு ஷூட்டிங்கில்...
நடந்துகொண்ட...
நடிக்கத் திரைப்...
விக்க கொடுத்தார்...
சிவரஞ்சனி.

## எது...

"ரே ஒரு தெரு...
...க்கிறேன். அது...
விட்ட மாதிரியும் ...
மாதிரியும் போகா...
எனக்கு முக்கியம்" ...



—முகப்பில்—
நெப்போலியன்-குஷ்பூ
—ஸ்ரீ மதி—

# சினி விசிட்

## சிவாஜிக்கு ரஷ்யாவில் கௌரவம்

நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு பிரான்ஸ் நாட்டின் 'செவாலியர்' விருது கிடைத்ததையொட்டி உஸ்பெகிஸ்தான் நாட்டு தூதர் சிவாஜி கணேசனை சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

"உங்களுக்கு கிடைத்துள்ள விருது மிக உயர்ந்ததும், மரியாதைக்குரியதுமாகும். ரஷ்யாவில் இந்த விருது இதுவரை யாருக்கும் வழங்கப்படவில்லை. நீங்கள் நடித்த பல படங்களை நான் பார்த்திருக்கிறேன். உங்கள் நடிப்பைக் கண்டு வியந்திருக்கிறேன். உங்களை நேரில் சந்திக்கும் எனது நீண்டகால ஆசை இப்போது நிறைவேறியுள்ளது" என்று உஸ்பெகிஸ்தான் தூதர் சிவாஜியிடம் தெரிவித்தார்.




## வேறு என்ன வேண்டும்?

ரஜினியின் தங்கையாக 'பாட்சாவில்' நடித்துவரும் செண்பகா 'ஜல்லிக்கட்டு காளை' படத்தில் பிரபுவின் ஜோடி. இளமையுண்டு, திறமையும் உண்டு. கொடி கட்டிப் பறக்க வேறு என்ன வேண்டும் என்று கேட்கும் செண்பகா ஜல்லிக்கட்டுக் காளையில் தாராளமாக நடித்திருக்கிறார். பிரபுவின் இன்னொரு ஜோடியான கனகா[illegible] வேடத்தில் நடித்திருப்பாரோ?

## இரட்டை வேடத்தில் பிரபு அவருக்கு ஜோடி குஷ்பு!

சின்னத் தம்பி மூலம் ராசியான ஜோடியாக பிரபலமாகி, பரவலான கிசு-கிசுக்களில் மாட்டியவர்கள் பிரபு-குஷ்பு.

தமிழக சஞ்சிகை ஒன்று பிரபு-குஷ்பு திருமணம் என்றுகூட செய்தி வெளியிட்டது. 'வேண்டாம் சாமி வம்பு' என்று பிரபு செல்ல குஷ்புவைவிட்டு விலகிக் கொண்டார். ஜோடிகள் மாறின.

இப்போது பிரபு-குஷ்பு ஜோடியை சேர்த்துவைக்க (படத்திலேதான்) கமலின் நண்பர் ஒருவர் முன்வந்துள்ளார். கமலின் சொந்தப்பட தயாரிப்புக்களை மேற்பார்வை செய்த டி.என்.சுப்பிரமணியம்தான் அந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

பிரபு இரட்டை வேடத்தில் நடிக்கவுள்ளார். பேராசிரியராகவும், கல்லூரி மாணவனாகவும் பிரபுவை நடிக்க வைக்கலாம் என்று கதை ரெடி பண்ணுகிறார்கள்.

இசை-இளையராஜா. 'அபூர்வ சகோதரர்கள்', 'மகளிர் மட்டும்' போன்ற படங்களை இயக்கிய சிங்கீதம் சீனிவாசராவ் கதை-திரைக்கதை எழுதி படத்தை இயக்கப்போகிறார்.

## கிசு-கிசு நியூஸ்
### மதுவின் தந்திரம்

இந்தியில் மதுபாலா ஒரு பிரபலமாகிவிட்டார் என்பது... [illegible]

## உயர்ந்தியா ச்!

[illegible]

— ஆந்தை —


## "மசாலா வேண்டாம்"

[illegible]

★

## ஆளைக் காணோம்

நீலக் கண் நடிகை என்று அழைக்கப்பட்ட சிவரஞ்சனிக்கு தமிழில் இப்போது இறங்குமுகம். பாண்டியராஜனுடன் 'பிள்ளையார் சுழி' என்னும் படத்தில் நடித்து வருகிறார். முந்தைய பந்தாக்கள் எதுவும் கிடையாது. கவர்ச்சியின் எல்லை வரை துணிந்து சென்றும்கூட இந்தளவு விரைவில் மார்க்கெட் டல்லாகும் என்று பாவம் சிவரஞ்சனி நினைத்திருக்க மாட்டார்.





## ஆட்டோ ஓட்டும் சீசன்

தோழர் பாண்டியனில் சத்யராஜ் ஆட்டோ ஓட்டினார். தொண்டன் படத்தில் முரளி ஆட்டோ ஓட்டுகிறார். பாட்சாவில் ரஜினி ஆட்டோ ஓட்டுகிறார். இது ஆட்டோ சீசன்.

பாட்சாவில் ரஜினிகாந்த் கதை விவாதத்திலும் பங்குகொண்டு நடித்து வருகிறார்.

அமிதாப்பச்சன் நடித்து வெளியான 12 படங்களின் தமிழ் பதிப்பில் நடித்துள்ளார். பாட்சா 13வது படம். அமிதாப்பச்சன் நடித்த 'ஹம்' படத்தின் தழுவல்தான் பாட்சா. ஆறு பாடல்கள் பிரமாதமாக வந்துள்ளனவாம். இயக்குநர் சுரேஷ் கிருஷ்ணா ஏனைய தனது படங்களைவிட பாட்சாவுக்கு செலவை அதிகமாக்கி காட்சியமைப்புகளில் அசத்தி வருகிறார். மூத்த தாரப் பிள்ளையாக ரஜினிகாந்த். இளைய தாரப் பிள்ளைகளாக சசிகுமார், செண்பகா, யுவராணி ஆகியோர் நடிக்கின்றனர். பணச்செருக்கு கொண்ட பெண்ணாக நக்மா நடிக்கிறார்.

## உலகம் சுற்றிய செந்தில்

இப்போதுள்ள நடிகர்களில் உலகம் முழுவதும் சுற்றி வந்தவர்களில் நகைச்சுவை நடிகர் செந்திலும் ஒருவர். இவர் போகாத நாடு சீனா மட்டும்தானாம்.

இவரிடம், "வெளிநாடுகளில் பாம்பு, தவளை எல்லாம் சமைப்பார்களாமே நீங்கள் சாப்பிட்ட அனுபவம் உள்ளதா?" என்று கேட்டதற்கு, "வெளிநாட்டில் இப்படி ஏதாவது போட்டிருப்பார்களோ என்ற சந்தேகத்தால நான் அசைவ சாப்பாடு சாப்பிடுறதில்ல. சைவ உணவு மட்டும்தான். நண்பர் யாராவது வீட்டுக்கு அழைத்தால் அசைவ உணவு.


"எனக்கு சைவின் சாப்பாடு என்றால் உயிர். ஆனால் வெளிநாடுகளில் அவற்றை நான் சாப்பிடுவதில்லை" என்றார் செந்தில்.

## இயக்குவது பாலகுமாரன்

'காதலன்' படத்தைத் தொடர்ந்து தயாரிப்பாளர் கே.டி.குஞ்சுமோன் இரண்டு படங்களைத் தயாரிக்கவுள்ளார். இந்த இரண்டு படங்களில் ஒன்றை ஷங்கர் இயக்குவார் எனத் தெரிகிறது.

மற்றொரு படத்தை, 'ஜென்டில்மேன்', 'காதலன்' போன்ற படங்களின் வசனகர்த்தாவும், எழுத்தாளருமான பாலகுமாரன் இயக்கவுள்ளார். இவர் ஏற்கனவே பாக்கியராஜ் நடித்த 'இது நம்ம ஆளு' படத்தை இயக்கியுள்ளார்.





## பேராசை வேண்டாம்

சின்னஞ்சிறிய நாயொன்று
தேடி எடுத்த இறைச்சியை
பொன்னாய் வாயில் கௌவியே
பாலந்தன்னில் சென்றது.

செல்லு ம் போதில் தன்னு ரு
தெளிந்த நீரில் தெரிந்தது.
இன்னோர் நாய்தான் என்றெண்ணி
இறைச்சி பிடுங்கப் பாய்ந்தது.

பாய்ந்து நீருள் வீழ்ந்ததால்
பட்டெனவே இறைச்சியும்
சாய்ந்து நீருள் மறைந்தது
நாயும் தவிக்கலானது

பேராசை கொள்வதால்
பெரிது ம் பயனு ம் இல்லையே!
நேராக வாழ்ந்திடு
நித்தம் பயனு ம் சேர்ந்திடும்!

-பசறையூர் மல்லிகா பத்மநாதன்-

"சொந்தச் சகோ தரர்கள் துன்பத்திற்-
சாதல் கண்டும்
சிந்தை இரங்காரடி! கிளியே!
செம்மை மறந்தாரடி!!

-சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை

# அணிலின் அறிவுரை

ஒரு காட்டில் மிகப் பெரிய சிறுத்தை ஒன்று இருந்தது. அது மிகவும் பொல்லாத சிறுத்தை. சதா சர்வ காலமும் மற்ற மிருகங்களை வதை செய்யும். அவைகளைப் பிடித்துக் கடித்துத் தின்றுவிடும்.

ஒருநாள் அந்தச் சிறுத்தை ஒரு பெரிய மரத்தடியில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தது. அப்போது அந்த மரத்தின் உச்சிக் கிளையொன்றில் மிகவும் உற்சாகமுடன் ஒரு சிறிய அணில் விளையாடிக்கொண்டிருந்தது. அப்போது எதிர்பாராமல் அது உச்சங் கிளையைப் பிடிக்க ஒருமுறை சற்று வேகமாகப் பாய்ந்தது. அப்போது சரக்கென்று கிளையைப் பிடிக்க முடியாமல் தடுமாறியது. இதனால் பொசுக்கென்று மரத்தில் இருந்து கீழே விழுந்துவிட்டது.

அந்த மரத்தடியில் படுத்திருந்த சிறுத்தை இதுவரை மர உச்சியில் விளையாடிக்கொண்டிருந்த அணிலையே பார்த்தபடி இருந்தது. எதிர்பாராமல் கீழே விழுந்த அணிலும் நிலை தடுமாறி அந்தச் சிறுத்தையின் அருகிலேயே விழுந்தது. விழுந்த அணிலை லபக்கென்று சிறுத்தை பிடித்துக்கொண்டது. அணிலின் கொழுகொழுவென்ற சதை சிறுத்தைக்கு மிகவும் பிடித்திருந்தது. அதன் உடலைக் கிழித்து அதனைச் சாப்பிட ஆசைப்பட்டது.

ஆனால் அணிலோ பயந்து நடுங்கிய படி, "சிறுத்தையாரே நான் ஒரு தவறும் செய்யவில்லை. தயவு செய்து என்னை விட்டு விடுங்கள், இனி நான் இப்படிக் குதிக்கமாட்டேன்" என்று கெஞ்சியது. இதைக்கேட்ட சிறுத்தைக்குப் பாவமாக இருந்தது. என்றாலும் அணிலைத் தின்ன அது ஆசைப்பட்டது. "இல்லையில்லை, மிகவும் பசியுடன் இருக்கும் எனக்கு, உன்னைக் கடவுளாகப் பார்த்துத்தான் என்னிடம் அனுப்பினார். எனவே உன்னை இழக்க எனக்குச் சம்மதமில்லை," என்று கூறியது சிறுத்தை. ஆனால் மிக படபடப்புடன் இருந்த அணிலோ, "சிறுத்தையாரே! எப்போதும் மகிழ்வுடன் சுற்றியலையும் என்னை நீங்கள் இப்படிக் கொன்று தின்ன நினைக்கலாமா? நான் ஒரு போதும் உங்கள் எதிரில்கூட வரமாட்டேன்." என்று கெஞ்சியது. சிறுத்தைக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பரிதாபமாகக் கெஞ்சும் அணிலை சட்டென்று தின்னவும் முடியவில்லை. அதே சமயம் கொழுகொழுவென இருக்கும் அதனைத் தின்னாமல் அப்படியே விட்டுவிடவும் பிடிக்கவில்லை. எனவே சிறுத்தை ஒரு முடிவு செய்தது. அதன்படி, "அணிலே! நான் ஒரு கேள்வி கேட்பேன். நீ அதற்குரிய பதிலைச் சரியாகக் கூறினால் உன்னைத் தின்னாமல் விட்டுவிடுவேன். நீ கூறும் பதில் சரியில்லை என்றால் உன்னைத் தின்றுவிடுவேன்," என்றது.

உடனே அணில், "சிறுத்தையாரே! நான் இதற்கு ஒப்புக் கொள்கிறேன். ஆனால் உமது கைப்பிடியில் சிக்கிக் கொண்டுள்ளவரை எனக்குப் பயமும், படபடப்பும் அப்படியே இருக்கும். இந்நிலையில் சரியான பதிலை என்னால் கூறவே இயலாது. எனவே என்னைக் கீழே இறக்கி விடுங்கள். நான் சரியான பதிலைக் கூறுகிறேன். ஒருவேளை என் பதில் சரியில்லை என்றால் என்னைக் கூப்பிடுங்கள். நானே வந்து உங்கள் கையில் சிக்கிக்கொண்டு உமக்கு உணவாகிறேன்," என்று கூறியது. அதற்குச் சிறுத்தையும் சம்மதித்தது.

சிறுத்தை, அணிலைக் கீழே இறக்கி விட்டது. அணில் சிறுத்தையை விட்டுச் சற்றுத் தூரத்தில் நின்றது. சிறுத்தை அணிலை நோக்கி, "அணிலே! உடலில் சற்றும் வலிமை இல்லாத நீ எப்போதும் உற்சாகமுடனும், மகிழ்வுடனும் துள்ளி அலைகிறாய். ஆனால் மிகுந்த வலிமையான உடலைப் பெற்றுள்ள நான் எப்போதும் உற்சாகமில்லாமல் இருக்கின்றேன். எனக்கு ஆர்வமோ, மகிழ்ச்சியோ இல்லை. இதற்குரிய உண்மையான காரணம் என்ன?" என்று கேட்டது.

உடனே அணில், "சிறுத்தையாரே! நான் எந்தச் சூழலிலும் எந்த உயிருக்கும் தீங்கு செய்ய நினைப்பதில்லை. கிடைக்கிற காய், பழங்களையும் சாப்பிடுகிறேன். என்னைக் காணும் மனிதர்களோ மிருகங்களோ பயந்து ஓடுவதில்லை. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை 'ஏய் அணிலைப் பாருங்கள்' என்று என்னைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார்கள். என்னைப் பார்த்து இரசிக்கிறார்கள். எனவே என் மனதில் மனிதர்களைப் பற்றியோ, மற்ற மிருகங்களைப் பற்றியோ ஒருவித பயமும் இல்லை. எனவேதான் நான் எப்போதும் மகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும் இருக்கிறேன்.

ஆனால், உங்கள் நிலை அப்படியல்ல. நீங்கள் எப்போதும் மற்ற மிருகங்களையும், மனிதர்களையும் அடித்துத் தின்பதிலேயே குறியாக இருக்கிறீர்கள். அந்த உயிர்களைக் கொல்லும்போது மிகுந்த கொடுமைக்காரராக மாறிவிடுகிறீர்கள். எனவே எப்போதும் உங்கள் மனதில் கொடிய எண்ணங்களும் கொடுமையான சிந்தனைகளுமே இருக்கின்றன. ஆகவே உங்களது மனம் அந்தச் சூழலிலேயே இருப்பதால் உங்களுக்கு எப்போதுமே வருத்தமான உற்சாகமில்லாத மனநிலை உள்ளது. அத்தோடு உங்களைக் காணும் எல்லா உயிர்களுமே, 'ஐயோ சிறுத்தை' என்று அலறியபடி உங்களை விட்டு வெகு தூரம் ஓடி ஒளிகிறார்கள். இதனால் உமக்கு அவமானமும், ஆத்திரமும் தோன்றுகிறது. இதுதான் உங்களது மகிழ்வில்லாத வாழ்விற்கும், எனது மகிழ்வான வாழ்வுக்கும் உள்ள வித்தியாசம்" என்று கூறியது.



இவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த சிறுத்தை சிறிது நேரம் அமைதியாக இருந்தது. பின் அணிலிடம், "நண்பா! நான் எவ்வளவு பெரிய தவறு செய்து இருக்கிறேன். நல்ல மனமும், செயலும்தான் மகிழ்வுக்கு வழி என்ற உண்மையை உணராது இருந்திருக்கிறேன். உயிர் கொலை பாவம் என்பது எனக்கு இதுவரை புரியவே இல்லை. நான் திருந்திவிட்டேன். என்னை அறிவுரை கூறி நல்வழிப்படுத்திய உனக்கு என் நன்றிகள்," என்று கூறியது.

மேலும் சிறுத்தை அணிலைப்பார்த்து, "அணிலே! உன் நல்ல அறிவுரைக்கு நன்றியாக உன்னை அன்புடன், தடவித்தர விரும்புகிறேன். என்னருகில் வா," என்று கூப்பிட்டது.

உடனே அணில், "சிறுத்தையாரே! பொல்லாதவர்கள் அறிவுரை கேட்டு உடனே திருந்தியதாகச் சரித்திரமே இல்லை. என்னை நீங்கள் இப்போது தொட்டால் என்னைச் சாப்பிடும் ஆசை ஏற்படலாம். எனவே இப்போது உங்களருகில் நான் வருவது முட்டாள்தனம். உயிர் பிழைப்பது மிக அபூர்வம். நீங்கள் திருந்தியதாகக் கூறியதே போதும்," என்று கூறிவிட்டு விருட்டென்று ஓடி ஒரு மரத்தில் ஏறிக்கொண்டது.

வஞ்சகச் சிறுத்தை அணிலை ஏமாற்ற முடியாத வருத்தத்தில் காடே அதிரும்படி கத்தியது. எதிரில் இருந்த மரம், செடி, கொடிகளை ஓங்கி அடித்தது. பொல்லாதவர்கள் திருந்தியதாகக் கூறினாலும் அவர்களை உடனே நம்பி ஏமாந்துவிடக்கூடாது என்றறிந்த அணில் மகிழ்வுடன் உயிர் தப்பி ஓடியது. ●

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 22.10.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல. 62
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 60

பரிசுக்குரியவர்
ஏ.கே.காளிதாசன்-த.ம.வி, இறம்பொடை.

பாராட்டுக்குரியவர்கள்

எம்.எஸ்.இஸ்ஸத்துல் நிஸா-தர்ஹா நகர்.
சந்திரசேகரம் சத்தியராஜ்-இந்துக்கல்லூரி, வாழைச்சேனை.
கே.சுதர்சன்-பதுளை.
எஸ்.எம்.ஹசாம்-அசன் குத்தூஸ் வித்தியாலயம், புத்தளம்.
சி.மங்களரூபன்-தமிழ் மத்திய மகாவித்தியாலயம், வவுனியா.
செல்வி.கி.கிருஷ்ணசாந்தினி-தமிழ் மகா வித்தியாலயம்,பசறை.
என்.சுஜீந்தர்-கார்மேல் பாத்திமா தேசிய கல்லூரி, கல்முனை.
எம்.எப்.நூஸ்ரத் இஸ்மாயில்-அல்ஹிரா ம.வி, கொட்டாரமுல்லை.
தி.வினோதன்-புனித பிரான்சிஸ் சவேரியார் ம.வி, திருகோணமலை.

## விஞ்ஞான விளக்கங்கள்

01. **பெற்றோல் உள்ளங்கையில் வைத்திருக்கும் போது கை குளிர்கிறது.**
பெற்றோல் எளிதில் ஆவியாகும் பதார்த்தமாகையினால் கையில் உள்ள வெப்பத்தை உறிஞ்சுவதனால் கை குளிருகின்றது.
02. **கொள்ளிவாய் பிசாசு**
சேற்று நிலப் பகுதியில் தோன்றும் மெதேன் வாயு தீப்பற்றி எரிதல்.
03. **வெட்ட வெளியில் நிற்கும் ஒருவர் இடிவிழும்போது நிலத்தில் விழுந்து படுக்க வேண்டும்.**
தலை மயிர் மின்னேற்றமடைவதனால் மின்னலைக் கடத்தும். ஆகவே இடிவிழும்போது நிலத்தில் விழுந்து படுக்கவேண்டும்.
04. **அம்மை நோயாளி உள்ள வீட்டு வாசலில் வேப்பிலை கட்டப்பட்டிருக்கும்.**
வேப்பிலை ஒரு கிருமி கொல்லி. ஆதலால் அம்மைநோயாளி உள்ள வீட்டு வாசலில் வேப்பிலை கட்டப்படவேண்டும்.
05. **கச்சான் பூக்க ஆரம்பித்ததும் அடி மரத்திற்கு மணல் குவிக்கப்படுகிறது.**
அதன் காய்கள் நிலத்தின்கீழ் சென்று கச்சான் விதைகள் முற்றுவதற்காக மண்ணால் மூடப்படுகின்றது.

பி.சுதர்சினி அன்றனீற்றா-திருகோணமலை.

## விடுகதைகளும் விடைகளும்

01. சின்னச் சிறுக்கனும் சின்னச் சிறுக்கியும் சிரிச்சி மகிழ்ந்து செஞ்ச கொண்டை. சிக்கில்லாம பிரிச்சவருக்கு நாடு தருவன், நகரு தருவன், நாட்டுச் செட்டிட மகளத் தருவன். அது என்னவாம்?
02. கடல் கொந்தளிக்கும்போது சிப்பிகள் மலர்கின்றன. அது என்ன?
03. கழுத்தை வெட்டினால் கண் தெரியும். அவன் யார்?
04. நீறு பூசின கோவிலிலே நின்று கும்பிட இடமில்ல. அது என்ன?
05. கொத்து கொத்து ஈச்சங்காய் கொலையோட ஈச்சங்காய் மதுரைக்குப் போனாலும் வாடாத ஈச்சங்காய். அது என்ன?
06. ஒரு பெரிய மரம். அதில் பன்னிரெண்டு கிளை. ஒரு கிளைக்கு முப்பது இலை.
07. கிணற்றைச் சுற்றி அகத்திக்கீரை. அது என்ன?

### விடைகள்

01. இடியப்பம் 02. சோறு 03. நுங்கு
04. முட்டை 05. பற்கள்
06. ஒரு வருடம், 12 மாதம், 30 நாள்
07. கண்

எஸ். சித்திரகலா-மாம்புரி.

01. அவன் கூறுவதை நாம் கேட்போம். நாம் கூறுவதை அவன் கேட்க மாட்டான். அவன் யார்?
02. யானை கட்டத் தூணாகும், அரசருக்கும் வீடாகும். குடிக்க நீராகும். சோடனைக்குப் பூவாகும். அது என்ன?
03. அடைபட்ட கூண்டுக்குள்ளே அண்ணன் தம்பி மூவர் அழகு நடை போடுகின்றனர். அவர்கள் யார்?
04. சவப் பெட்டியோ ஒன்று. சவங்களோ பல. அது என்ன?
05. வண்ணமுண்டு. சேலையுமல்ல, வாலுண்டு மீனுமல்ல, கொண்டையுண்டு. பெண்ணுமல்ல, கூவித்திரியும் குயிலுமல்ல. அது என்ன?

01. வானொலி 02. தென்னைமரம்
03. கடிகாரமுட்கள் 04. தீப்பெட்டி 05. சேவல்

ஏ.சி. மஹீஸா-முதலைப்பள்ளி மு.வி, பள்ளிவாசல்துறை

## என்றும் நினைவில் நிற்கவேண்டிய மூன்று

- வாழ்வில் ஒருமுறை வருவது
**பெற்றோர், அழகு, வாலிபம்.**
- எவரும் எதிர்பாராதவை
**நேரம், வாய்ப்பு, மரணம்.**
- ஒவ்வொருவரையும் பிரித்துக் காட்டுபவை
**நடைமுறை, தோற்றம், பாங்கு.**
- அற்பமாய்க் கருதக் கூடாதவை
**வியாதி, கடன், கடமை.**
- யாராலும் திருட முடியாதவை
**கல்வி, அறிவு, கைத்தொழில்.**
- தூய உள்ளத்துடன் செய்ய வேண்டியவை
**தர்மம், பிரார்த்தனை, கிருபை.**
- ஞாபகத்தில் இருக்க வேண்டியவை
**மரணம், உண்மை, கடமை.**
- சென்றால் திரும்பாதவை
**உயிர், சொல், வயது.**
- நோக்கத்தைத் தடுப்பவை
**கோபம், பேராசை, துர்நடத்தை.**
- மனிதனை இழிவுபடுத்துபவை
**பொய், கோள், திருட்டு.**

அ.ச.மு.பௌஸ்(திலீப்)
தி/அல்-அக்ஸா ம.வி-கிண்ணியா.

## அதிசய சதுரம்

இந்த சதுரத்திலுள்ள எண்களை எப்பக்கத்தில் கூட்டினாலும் ஒரேவிடை வருவதைக் காண்பீர்கள். அது மட்டுமல்ல. தலைகீழாகத் திருப்பிக் கூட்டிப் பாருங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 96 | 11 | 89 | 68 |
| 88 | 69 | 91 | 16 |
| 61 | 86 | 18 | 99 |
| 19 | 98 | 66 | 81 |

மொகமட் சபீக்
றோ.க.த.க.வித்தியாலயம்
பம்பலப்பிட்டி-கொழும்பு-4.

பாப்பா முரசிற்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. எழுது ங்கள். இதோ முகவரி-

**பாப்பா முரசு**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல.1772**
**கொழும்பு.**

## செய்து பாருங்கள்



நன்கு பழுத்த எலுமிச்சம் பழத்தை எடுத்து அதை நன்றாக அழுத்தி உள்ளே ஜூஸ் ஆகும்படி செய்யுங்கள். இந்த எலுமிச்சம்பழத்தினுள் ஒரு துத்த நாகத் தகடையும், ஒரு செப்புத் தகடையும் வெளியில் தெரியும்படி செருகவும். இரண்டு தகடுகளும் தனித்தனியே இருக்க வேண்டும். ஒன்றை ஒன்று தொடக் கூடாது. இப்போது இரு தகடுகளையும் ஒரே சமயத்தில் உங்கள் நாக்கால் தொடுங்கள். லேசான அதிர்வை உணர்வீர்கள்.

அது ஒரு லேசான மின் அதிர்வு. எலுமிச்சம் பழத்திலுள்ள ஜூஸ் மின் கடத்தியாக, இரண்டு உலோகத் தகடுகளும், எலுமிச்சம் பழமும் சேர்ந்த மின்கலமாகி விட்டது. இவற்றின் மூலம் உருவாக்கப்பட்ட மின்சார அலையைத்தான் நீங்கள் உணர்ந்தீர்கள். மின்கலமும் அப்படித்தான் செயற்படுகிறது. மின்கலத்தில் இரு உலோகங்களும் மின்கடத்தி (எலக்ட்ரோலைட்) என்ற திரவமும் இருக்கும். இவற்றால் தான் மின்சாரம் உருவாக்கப்படுகிறது.

## வள்ளுவரின் நூற் பெயர்கள்

திருவள்ளுவர் அருளிச் செய்த நூல் ஒன்பது பெயர்களால் குறிப்பிடப்படுகின்றது. அவை வருமாறு:

1. திருக்குறள் 2. உத்தரவேதம்
3. திருவள்ளுவர்
4. பொய்யாமொழி
5. வாயுறை வாழ்த்து
6. தெய்வநூல் 7. பொதுமறை
8. முப்பால் 9. தமிழ்மறை

ஏம். தில்லைராஜா
பசறை தமிழ் தேசிய கல்லூரி.

## கற்றுக்கொடு!

காற்றே
நீ
'ஸ்நேகிக்க'
கற்றுக்கொடு
சுவாசிக்கும்
இந்த
மனிதங்களுக்கு
விசுவாசிக்கத் தெரியவில்லை!

ஐக்கியத்தை
தொலைத்துவிட்டு
சௌக்கியமிழந்துபோன
நமது
தேசத்தைப்பார்
சாகக்கிடப்பவனைப்போல
சங்கடப்படுகிறது!

ஆத்திரமும்
ஆக்கிரமிப்பும்
ஆழமாய்
பதிந்து போனதால்
ஆதரிக்கும்
அணுகுமுறை
ஆற்றில் போட்ட கோலமாய்!

ஆயுத
முற்றுகையில்
அடிக்கடி
உயிர் தொலைவது
நிரந்தரமாகிப்போன
நிகழ்வானதை
நிறுத்தப் புறப்படு!

காற்றே
போர் முறை போக்கில்
சீர்கெட்டுப்போன
இந்த
சமுதாயத்தில்
நேசமாய் வீசு!

சுவடு
தெரியாமல்போன
சமாதானம்
சூரியனிலுமில்லை
சந்திரனிலுமில்லை
நேசிக்கும்
நெஞ்சங்களில்தான்
என்று
நிச்சயப்படுத்திச் சொல்!

காற்றே
நீ சூறாவளியாகி
சீறிப்பாய்வதைவிட
தென்றலாகி
'ஸ்நேகிக்க'
கற்றுக்கொடு!
இந்த
மனிதங்களுக்கு
விசுவாசிக்கத் தெரியவில்லை!

-நூரளையூரான்-
கே.கனகராஜா.

## இருதய நோயாளி

என்
துக்கங்களில்தான்
உன் சந்தோஷங்கள்
நிச்சயிக்கப்படுகின்றன...

♥

வார்த்தைக்கு வராமல்
வாய்க்குள்ளேயே
வாசிக்கப்படும்
சோகத்தைப் போல
என்
நேசங்களும்
உன்
தேசத்தின்
எல்லைகளுக்குள்ளேயே
நாசமாகிவிட்டன.

♥

உன்னைவிட்டு
சென்றி மீற்றர் தூரம்
பிரிந்தால்கூட
என் உயிர்
அங்குலம் அங்குலமாய்
சிதைந்து போகிறதே...
உன்னை
பார்க்க மறந்தால்கூட
என்
சுவாசங்கள்கூட
எனக்கு
சுமையாகிப் போகிறதே....
ஆனால்
என்
கண–நேர
ஜனன சந்தோஷங்கள்
கூட
உனக்கு
மரண பாரமாய்
இருக்கிறது
இல்லையா..?

♥

என்
சத்தியங்கள்
சிதிலாகும்போது
நீ
சிரித்துக்கொள்வாய்
என்பது
எனக்குத் தெரியும்...
என்
சந்தோஷங்கள்
சாகும்போது
நீ–
சந்தோஷித்துக்கொள்வாய்
என்பதும்
எனக்குத் தெரியும்...

♥

மலரே..!
மன்னித்திடுக...
உன்னைக் காதலித்து
உனக்குள்
என்னைத் தேடியதற்காய்..!
இனி
இறந்து போனாலும்
ஒரு
இருதய நோயாளியாகத்தான்
நான்
இறந்து போவேன்...!

அ.சுதாசேகர்–பொத்துவில்.



## கலையுலகு எனைப் போற்றும்!

1. மாத்திரையோ டென்வாழ்வு திட்டம்!–துயர்
மனநிலையால் எப்பொழுதும் சீற்றம்!
சாத்திரிகள் சொல், பேயின் குறையாம்!–அதை
சாந்தி செய்தால் பெறு பேறு நிறைவாம்!


2. மருத்துவர்கள் என் நோயைக் காணார்–சற்றும்
மகிழ்வூட்டி எனதுறவைப் பேணார்!
பருத்தவுடல் ஆம், முன்னர் இரும்பு!–பழைய
பலம் குன்றி அது இப்போ, துரும்பு!

3. சிகைகூட அழகில்லை வெண்மை! வாழ்வில்
செயமில்லை, இருந்தென்ன நன்மை?
வகைவகையாய் சேர்த்தவைகள் இல்லை! நானும்
வாழ்வினிலே ஏற்பவைகள் தொல்லை!

4. கட்டியவள் அயலில்லை தூரம்! இ:து
காசினியைத் துறக்கின்ற நேரம்!
பெற்ற சுகம் கடைசியிலே வருமா?– பணம்,
பெற்றுமென்ன, அது நிறைவைத் தருமா?

5. ஈன்றெடுத்த மழலைகளும் மாற்றம்!–எனில்,
இறுதியிலே எனக்கில்லை ஏற்றம்!
காண்கின்ற இருட்டுலகு தூற்றும்!–மேன்மைக்
கலையுலகு, என்றுமெனைப் போற்றும்!

அ.கௌரிதாசன்–ஆலங்கேணி கிழக்கு.




## அதுமட்டும் புதிர்

உன்
கண்களில்..
தீ–!
என்
இதயம்
எரிகின்றது!

•

உன்
வார்த்தையில்
தேன்!
என்–
நினைவுகளை..
மொய்க்கின்றன
எறும்புகள்!

•

உன்
கடிதங்களில்
கவிதைகள்!
என்
நூலகத்தில்
எங்கும்–உன்
கையெழுத்துப்
பிரதிகள்!

•

உன்
இதயம்
மல்லிகை!
என்
கழுத்துக்கு
மாலையாகுமா?

கே.ராம்ஜீ உலகநாதன்
எல்ல.

## சாபமிடப்பட்ட தேவதை

புராதனக் கதைகள்
புனைந்து வைத்துள்ள
சாபமிடப்பட்ட
தேவதையாய்–
நித்திய வாழ்வில் நான்!

•

நூலறுந்த
நேசக் கொடி
நடுநடுங்கித்
தரையில் வீழ்ந்தது!

•

உங்கள் அன்பு
பொடிப் பொடியாகி
உதிர்ந்து போனபின்
உடல் கூடு
உயிர் சுமப்பதில்
உண்டோ சுகம்?

•

வாழ்க்கை
வாய்திறந்த
புதை குழியாகி,
என்னைப்
பலிகொள்ளக்
காத்துக் கிடக்கிறது!



காதல் இட்ட
சாபத்திற்கு
உயிரின்
சுடர்தான்
காணிக்கையா?

•

நிராசைகளில்
நிலைத்த
சித்திரம் நான்
பூரிப்பை
என் கோலம்
எவ்வாறு காட்டும்?

•

விதியின்
இரும்புக் கரங்களில்
இரு முறையும்
சிக்குண்டேன்!


•

எனது புலன்கள்
சகலவைக்கும்
நீங்கள்
தடை செய்யப்பட்டவராகத்
தீர்ப்பானதும்
இன்னொரு
சாபமிடப்பட்ட தேவதைக்கு
உதாரணமாகிறேன்!

பஹீமா ஜஹான் ஸவாஹிர்
மெல்சிரிபுர.



## கத்தரித்த கடி ஜோக்ஸ்




"ஆஸ்பத்திரியில் எதுக்கு மைக், மேடை, நாற்காலி எல்லாம் இருக்குது?"
"இந்த டாக்டர் ரொம்ப வித்தியாச மானவர்..... ஆபரேசன் முடிஞ்சதும் சின்னதா ஒரு இரங்கல் கூட்டம் நடத்திடுவாரு."



"கிரிக்கெட் பிளேயரை ஃபுட்பால் ஆடச் சொன்னது தப்பாய் போச்சு."
"ஏன்?"
"பந்தை எடுத்து காற்சட்டையிலே தேய்ச்சுக்கிட்டு நிற்கிறார்."

## இவர்கள் விளையாடினால்.......



## வாசகர் கவனிக்க

முரசுடனான சகல கடிதத் தொடர்புகளுக்கும்,
தினமுரசு வாரமலர்
த.பெ.இல–1772
கொழும்பு.
என்ற முகவரியைக் குறிப்பிடவும்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(23.10.94 முதல் 29.10.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

துலாம் - சூரியன், வியாழன், வெள்ளி, இராகு
கும்பம் - சனி
மேடம் - கேது
கர்க்கடகம் - செவ்வாய்
கன்னி - புதன்

சந்திரன்–இடபம், மிதுனம், கர்க்கடகம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினர் உதவி, காரியசித்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- | மனக்குறை நீங்கும், பொருள் வரவு. | காலை 6 மணி |
| செவ்வாய்- | தொழில் சிறப்பு, முயற்சி மேன்மை. | பி.ப 2 மணி |
| புதன்- | வீண்குறை கேட்டல், தொழில் விருத்தி. | பி.ப 1 மணி |
| வியாழன்- | கடன்தொல்லை, பணத்தட்டுப்பாடு. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | மனக்குறை அகலும், கௌரவம். | காலை 6 மணி |
| சனி- | வெளியிடவாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு மந்தம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- | துன்பநிலை, மனக்கலக்கம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, துயர் நீங்கும். | காலை 9 மணி |
| புதன்- | பெரியோர் பகை, வீண் பயணம். | பகல் 12 மணி |
| வியாழன்- | பொருள் வரவு, காரியசித்தி. | காலை 8 மணி |
| வெவ்ளி- | செய்தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் 11 மணி |
| சனி- | தூரஇடப் பயணம், வரவுக்கு மிஞ்சிய செலவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் விருத்தி, கௌரவம். | பகல் 12 மணி |
| திங்கள்- | வீண் குறைகேட்டல், தொழில் மந்தம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | பயனற்ற செயல், கடன்சுமை. | பி.ப 1 மணி |
| புதன்- | தனலாபம், காரியசித்தி. | காலை 7 மணி |
| வியாழன்- | துன்பம் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- | மனப்பயம், காரியக்கேடு. | காலை 8 மணி |
| சனி- | எதிர்பார்த்த நன்மை, செலவு மிகுதி. | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, பொருள் வரவு. | காலை 7 மணி |
| திங்கள்- | தெய்வானுகூலம், முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | மனப்பயம் நீங்கும், செல்வாக்கு அதிகம். | காலை 6 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, மனத் தைரியம். | பி.ப 1 மணி |
| வியாழன்- | உறவினர் பகை,, முயற்சித்தடை. | காலை 7 மணி |
| வெள்ளி- | தொழில் விருத்தி, பொருள் வரவு. | பி.ப 2 மணி |
| சனி- | வீண் மனஸ்தாபம், செலவு மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-2

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, பொருள் வரவு. | பி.ப 2 மணி |
| திங்கள்- | மனச்சுமை, நீங்கும், கடன் தொல்லை அகலும். | காலை 6 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், வீண் செலவு. | பி.ப 1 மணி |
| புதன்- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, திடீர் சுகயீனம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | புதிய முயற்சி, தொழில் சிறப்பு. | காலை 6 மணி |
| சனி- | பொருள் வரவு, காரியசித்தி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 9

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| திங்கள- | அந்நியர் சகவாசம், திடீர் பயணம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | முயற்சி மேன்மை, பணவரவு. | பி.ப 1 மணி |
| புதன்- | உயர்ந்த நோக்கம், கௌரவம். | காலை 7 மணி |
| வியாழன்- | பயனற்ற செயல், அரச விரோதம். | காலை 9 மணி |
| வெள்ளி- | எதிர்பார்த்த நன்மை, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| சனி- | முயற்சித்தடை, பணவிரயம். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 7

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியர் உதவி, பணப்புழக்கம். | காலை 7 மணி |
| திங்கள்- | பெரியோர் பகை, வீண் மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| புதன்- | அந்நியர் நட்பு, மனக்குறை நீங்கும். | பி.ப 1 மணி |
| வியாழன்- | பெரியோர் சகாயம், பணவரவு. | காலை 6 மணி |
| வெள்ளி- | மன அமைதி குன்றும், பணச் செலவு. | காலை 7 மணி |
| சனி- | துயர் அதிகம், கௌரவமற்றதன்மை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -8

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் நட்டம், காரியக்கேடு. | காலை 6 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, மறைமுக எதிர்ப்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பெரியோர் சகவாசம், கௌரவம். | காலை 7 மணி |
| புதன்- | துன்பம் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப 1 மணி |
| வியாழன்- | உறவினர் நட்பு, மனக்குறை நீங்கும். | காலை 8 மணி |
| வெள்ளி- | பொருள்வரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |
| சனி- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 5

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | குடும்ப சுகம், மன மகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, முயற்சி மேன்மை. | காலை 6 மணி |
| செவ்வாய்- | உறவினர்பகை, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| புதன்- | கடன்தொல்லை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வியாழன்- | உயர்ந்த நட்பு, முயற்சித்தடை. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| சனி- | பொருள் வரவு, சுபகாரிய மகிழ்ச்சி. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -6

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, செய்தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| திங்கள்- | முயற்சி பலிதம், பணவரவு. | காலை 10 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, குடும்ப சுகம். | காலை 8 மணி |
| புதன்- | பயனற்ற செயல், மறைமுக எதிர்ப்பு. | பகல் 12 மணி |
| வியாழன்- | கடன்தொல்லை, சுபகாரியத்தடை. | காலை 7 மணி |
| வெள்ளி- | வீண்குறை கேட்டல், கௌரவக்கேடு. | பி.ப 1 மணி |
| சனி- | உயர்ந்த எண்ணம், மனக் கலக்கம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-2

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | மனக்கவலை, செய்தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |
| திங்கள்- | கடன்சுமை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | மனப்பயம், வீண் குரோதம். | பி.ப 1 மணி |
| புதன்- | தனலாபம், உறவினரால் மகிழ்ச்சி. | காலை 6 மணி |
| வியாழன்- | வெளியிடப் பயணம், அரச சன்மானம். | காலை 8 மணி |
| வெள்ளி- | மனக்குறை நீங்கும், புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| சனி- | செய்தொழில் விருத்தி, கௌரவம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 1

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் பலிதம், பொருள் வரவு. | காலை 6 மணி |
| திங்கள்- | கடன் தொல்லை நீங்கும், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வீண் மனஸ்தாபம், தொழில் கேடு. | காலை 7 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, திடீர் பிரயாணம். | பி.ப 1 மணி |
| வியாழன்- | உயர்ந்த எண்ணம், காரியானுகூலம். | காலை 7 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், பொருள் வரவு. | பகல் 12 மணி |
| சனி- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 4

# மருத்துவ ✝ விந்தைகள்

## வீட்டுக்கு மேலே மின்சாரக் கம்பிகள் மூளைப்புற்று நோய்க்கு காரணமா?




நொயெல் டேவீஸ் தனது பெற்றாருடன். வீட்டின் மேலே மின் கம்பிகள் தொங்குகின்றன.

அதி சக்திவாய்ந்த மின்சக்தியைக் கடத்தும் கம்பிகளால் மனித மூளைக்கு பாதிப்பு ஏற்படலாம் என்ற புதிய நம்பிக்கை ஒன்று உலக விஞ்ஞானிகளையே அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. வீடுகளுக்கு மேல் தொங்கும் அதிக வலுக்கொண்ட மின்கடத்தும் கம்பிகள் அந்த வீடுகளில் தொடர்ந்து வசிப்போருக்கு உயிர் ஆபத்தை ஏற்படுத்தக் கூடும் என்ற புதிய அச்சம் எழுந்துள்ளது.

### புதிய சர்ச்சை–நடக்கிறது வழக்கு

மின் கடத்தும் கம்பிகளைத் தொட்டால் தான் அதிர்ச்சி ஏற்பட்டு மரணம் சம்பவிக்கும். ஆனால் மின் கடத்தும் கம்பிகளுக்கு ஒரு குறிப்பிட்ட அளவுக்குட்பட்ட பகுதியில் இருப்பவர்களையும் மின்காந்தம் ஏதோ ஒரு வகையில் தாக்கும் சாத்தியக் கூறுகள் இருக்கலாம் என்ற புதிய கொள்கை வலுப்பெற வாய்ப்பேற்பட்டிருக்கிறது.

வேல்ஸ் நாட்டிலுள்ள அபர்காவெனி நகரில் வசிக்கும் நால்வருக்கு மூளைப் புற்றுநோய் கண்டது. இவர்களில் இருவர் ஏற்கனவே இறந்துவிட்டனர். 38 வயதான ஸ்ரூவர்ட் வில்லியம்ஸ் மற்றும் 15 வயதுடைய மாணவன் நொயெல் டேவீஸ் ஆகிய இருவரும் கடுமையான பாதிப்புகளுக்குளாகியிருக்கின்றனர்.

ஸ்ருவர்ட்டுக்கு அண்மையில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவிருக்கிறது. அவருடைய ஒரு கண்ணுக்கூடாகத் துளையிட்டே மூளையில் சிகிச்சை இடம்பெறும் என்பதனால் அவருடைய ஒரு கண் குருடாகிவிடும். அதுமட்டுமல்லாமல் அவருடைய உயிருக்கும் உத்தரவாதம் அளிக்கப்படவில்லை.

நொயெல் ஒரு சிறந்த விளையாட்டு வீரன். படிப்பிலும் படுசுட்டி. ஆனால் இந்த வயதிலேயே மூளைப்புற்று நோய் கண்டுள்ளது. அவனுடைய கண்பார்வையும் பாதிப்புக்குள்ளானது. உடல் பருத்த போதிலும்- இந்த வயதில் சாதாரணமாக இவனை ஒத்த வயதினருக்கு இருக்கும் ஆண்மை அற்றவனாகக் காணப்படுகிறான்.


இத்தகைய பாதிப்புகளுக்குக் காரணம் இவர்கள் வாழும் இல்லங்களுக்கு மேலாக 132,000 வோல்ற்ஸ் வலு கொண்ட மின் கடத்தும் கம்பிகள் தொங்குவதே என்று நம்பப்படுகிறது. இதனை நிரூபிப்பதற்கேற்ற சரியான சான்றுகள் இல்லை என்ற போதிலும் இதில் ஏதோ உண்மை இருக்கலாம் என்ற நம்பிக்கை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ருவட்டும் நொயெலும் தங்கள் உடல் நிலைப் பாதிப்புக்கு மின் கடத்திக்கம்பிகளே என்று காரணம் காட்டி மின்சக்தி வழங்கும் நிறுவனத்தின் மீது வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர். வழக்கின் தீர்ப்பு எவ்வகையிலிருந்த போதிலும் மின்காந்தத்துடன் தொடர்பு கொள்ளும் சகலருக்கும் இச்செய்தி ஒரு பயப்பிராந்தியினை ஏற்படுத்தியுள்ளது. அதுமட்டுமல்லாமல் இது தொடர்பாக புதிய ஆய்வுகளை விஞ்ஞானிகள் மேற்கொள்வதற்கான ஊக்கத்தினையும் ஏற்படுத்தியுள்ளது. ●

## இரத்த அழுத்தத்திலிருந்து மீள விரும்புகிறீர்களா?

இரத்த அழுத்தம் ஏற்படுவதற்குக் காரணம்:

* பிறப்பு பரவணு மூலம் ஏற்படுதல்
* உணவில் உப்பை அதிகம் சேர்த்துக் கொள்வதால்
* பொட்டாசியம் தேவையான அளவு உட்கொள்ளாமை
* உடல் பருமன் காரணமாக
* மனக் குழப்பம்



இரத்த அழுத்தத்தைக் குறைத்துக் கொள்ள கடைபிடிக்க வேண்டியவைகள்:

* உடல் பருமனாக காணப்பட்டால் உணவு கட்டுப்பாட்டை கடைபிடித்தல், தேக அப்பியாசங்கள் மூலம் உடல் பருமனைக் குறைத்துக் கொள்ளுதல்.
* கொழுப்புச் சத்தான ஆகாரங்களை தவிர்த்தலும் எண்ணைக்கு பதிலாக சோயா எண்ணை, சூரியகாந்தி எண்ணை போன்றவைகளை பாவித்தல்.
* தேக அப்பியாசத்தில் சைக்கிள் ஓட்டுதல், நீந்துதல், அரை மணித்தியாலம் அதிக வேகமாக நடத்தல் போன்றவை சிறந்ததாகும்.
* தினத்தில் அரைப் பகுதியை ஓய்வுக்காகவும், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளுக்காகவும் ஒதுக்கிக் கொள்ளுதல்.
* உணவில் உப்பைக் குறைத்துக் கொள்ளுதல்
* சிவப்பு பச்சரிசி, தக்காளி, கெரட், பால், வாழைப்பழம், தோடை, அலிப்பேரை போன்ற பொட்டாசியம் நிறைந்த உணவுகளை அதிகமாக உட்கொள்ளுதல்.

## சத்திர சிகிச்சை செய்யப்பட்டவரின் உடலில் கத்தரிக்கோல்
### பேராதனையில் நோயாளிக்கு ஏற்பட்ட சோதனை!

சிறுநீரகத்தில் ஏற்பட்டிருந்த கோளாறு காரணமாக சத்திர சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டு சிகிச்சையை முடித்து வீட்டிற்கு திருப்பியனுப்பப்பட்டிருந்த நோயாளி ஒருவரின் சிறுநீரகப் பையினுள் சத்திர சிகிச்சைக்கு பயன்படுத்தப்பட்டிருந்த கத்தரிக்கோல் ஒன்று இருக்கக் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று பேராதனை போதனா வைத்தியசாலையில் நிகழ்ந்துள்ளது.

இச் சம்பவத்தைப் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

சிறுநீரக கோளாறு காரணமாக கண்டி கட்டுகஸ்தோட்டையைச் சேர்ந்த திரு காமினி பெரேரா (வயது 48) என்பவர் கடந்த மாதம் 11ம் திகதி பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள் அவரின் சிறுநீரகத்தில் சத்திர சிகிச்சையை மேற்கொண்டு, இதர சிகிச்சைகளையும் முடித்து 24ம் திகதி வீட்டிற்கு அனுப்பியுள்ளனர்.

வீடு திரும்பிய திரு காமினி பெரேராவுக்கு தொடர்ந்தும் சிறு நீரக பகுதியில் வேதனை யேற்படவே, அவரின் உறவினர்கள் மீண்டும் அவரை மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்று வைத்திய சாலையில் அனுமதித்துள்ளனர்.

நோயின் தன்மையையும் நடந்த சிகிச்சை முறையையும் தெரிந்துகொண்ட மருத்துவர்கள் இவரின் சிறுநீரகப் பகுதியை எக்ஸ்ரே படம் பிடித்து சோதனையிட்டபோது திரு.காமினி பெரேராவின் சிறுநீரகப் பையில் சத்திரசிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் கத்திரிக்கோல் ஒன்று தரித்திருப்பதைக் கண்டுபிடித்துள்ளார்.

இக் கத்தரிக்கோல் ஏற்கனவே இவருக்கு மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சையின்போது பயன்படுத்தப்பட்ட கத்திரிக்கோல்களில் ஒன்று என்பதை வைத்திய வட்டாரங்கள் இப்போது உறுதிப்படுத்தியுள்ளதாக தெரிய வருகிறது. ■

## நாய் நடத்திய கொள்ளைகள் அமெரிக்காவில் நடந்துள்ள ஆச்சரியம்



ஹரி பிளவுண்ட்

### கிரைம் நியூஸ்

ஒரு நாய் 50,000 டொலர்வரை கொள்ளை அடித்திருக்கிறது. 6 மாதங்களில் இத்தொகையினை திருடிய இந்த நாயும் இதனை இத்தகைய கொள்ளைக்குப் பயன்படுத்திய நாய்ப் பயிற்சியாளனையும் பொலிசார் அண்மையில் கைது செய்தனர்.

கொள்ளையடிக்கப் பழக்கப்பட்ட நாயின் பெயர் சிலிக். இதனைப் பழக்கி பெரும் பணம் சம்பாதித்த பயிற்சியாளரின் பெயர் ஹரி பிளவுண்ட். இவருக்கு 57 வயதாகிறது.

அமெரிக்காவில் பொஸ்டன் நகரத் தெருக்களில் நூற்றுக்கணக்கான சிறு சிறு களவுகள் நடைபெற்று வந்தன. பொலிசாரிடம் முறைப்பாடுகள் கொடுக்கப்பட்டும் களவுகள் கண்டு பிடிக்கப்படவில்லை. இத்தகைய களவுகளை ஒரு நாயே செய்து வருகிறது என்பதனை பொலிசாரே நம்பமுடியாதிருந்தது. நாயினுடைய அடையாளத்தைக்கூட முறைப்பாட்டாளர்களால் தெரிவிக்க முடியாதிருந்தது. அவ்வளவு வேகத்தில் இக்களவுகளை இந்நாய் செய்து வந்திருக்கிறது. மக்கள் மிக நெருக்கமாக நடமாடும் சிறு சிறு வீதிகளிலேயே சிலிக் தன் விளையாட்டைக் காட்டுவதால் இதனைத் தடுக்கவோ பிடிக்கவோ, அதன் அடையாளங்களை நினைவு படுத்தவோ எவராலும் முடிவதில்லை என்பதனால் இரகசியப் பொலிசாரிடம் சிலிக் எனும் நாயையும் அதனை இத்தகைய பணிகளுக்கு ஏவுபவனையும் கண்டு பிடிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

நெருக்கடி மிகுந்த தெரு ஒன்றில் ஒரு பெண் பணப் பையுடன் சென்றால்போதும். அப்பெண்ணை பக்குவமாகப் பதுங்கித் தொடர்ந்து சென்று 'லபக்' என்று பணப் பையைப் பிடுங்கிக்கொண்டு சிலிக் மாயமாக மறைந்துவிடும். இரகசியப் பொலிசாரின் கண்களில் சிலிக் ஓரிரு தடவைகள் தென்பட்ட போதிலும் அதனைப் பிடிக்கவோ, அது எங்கிருந்து ஏவப்படுகிறது? எங்கே திரும்பிச் செல்கிறது? என்பதனைக் கண்டுபிடிக்கவோ முடியவில்லை.



சிலிக் கைது செய்யப்பட்ட பின்னர் பொலிசார் அதன் களவாடும் திறமையினைப் பரிசோதிப்பதற்காக நடத்திய பரீட்சையில் சிலிக் பையைத் திருடி இவ்வாறுதான் கவ்விக் கொண்டது.

பொலிசார் பல நாட்கள் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தனர். களவுகள் அடிக்கடி நடக்கும் ஒரு தெருவில் ஒரு பெண்ணை பணப் பையுடன் அனுப்பி வைத்தனர். சிலிக் பிடிபட இதுவே சந்தர்ப்பமாகிவிட்டது. கிலிக் தொடர்ந்து சென்று அப்பெண்ணிடமிருந்த பணப்பையை (பேர்சை) பிடுங்கிக்கொண்டு ஓடியது. அந்தப் பையினுள் பணத்துடன் எலத்திரோன் கருவி ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது. இது கொடுத்த சமிக்ஞைகளை பொலிசார் தங்களிடமிருந்த கருவியில் பெற்று தொடர்ந்தனர். இதன்படி பிளவுண்ட் என்பவரின் வீட்டை அடைந்தனர். நாயும் அதன் பயிற்சியாளரும் பிடிபட்டனர்.

பிளவுண்டின் வீட்டில் 374 பணப்பைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. அத்தனையும் சிலிக்கினால் களவாடப்பட்டவை என்பதை பிளவுண்ட் ஒப்புக்கொண்டார்.

'லஸ்ஸி' என்ற ஒரு நாய் தொடர்பான திரைப்படங்களை சிறு வயதில் பார்த்த பிளவுண்ட் நாய்களுக்குப் பயிற்சி கொடுக்கும் தொழிலையே பார்த்து வந்தார். ஆனால் இவர் செய்யாத குற்றத்திற்காக இவருடைய தொழிலிலிருந்தே இவரை அந்த நிறுவனத்தினர் விலக்கிவிட்டனர்.

இதன் பின்னரே பண வருவாய்க்காக மட்டுமல்லாமல் ஏற்பட்ட விரக்தியினாலும் இவர் நாயைத் திருட்டுத் தொழிலுக்குப் பழக்கியதாகக் கூறுகிறார்.

## சுவாரசிய சங்கதி
## ♥ காதல் செய்யும் நேரம் இது
### பொதுத் தொலைபேசி கூண்டில் இரு பறவைகள்

காதலுக்கு கண்ணில்லை. காதலிப்பவர்களுக்கும் கண்ணில்லை என்பது யாருக்குப் பொருந்துகிறதோ இல்லையோ அமெரிக்க சிக்காகோ நகரில் ஒரு ஜோடிக்கு பொருந்தியிருக்கிறது.

ஜேம்ஸ் ரீகனும், கதே ஹார்டிங்கும் கண்டனர்– காதல் கொண்டனர்.

ஆனால் எங்கே அந்த காதலைத் தொடர்ந்தனர் தெரியுமோ?

பகிரங்க தொலைபேசிக் கூண்டுக்குள்.

அதுவும் ஐந்து நிமிடம் பத்து நிமிடமல்ல – சுமார் 45 நிமிஷம்.

தொலைபேசி எடுக்க வந்தவர்கள் காத்திருந்தனர். கண்றாவி! ஜோடியோ தமது லீலைகளை இரசித்தும் மெய் மறந்தும் தொடர்ந்து கொண்டிருந்தது.

வெளியே விசயம் பொலிசுக்கு அறிவிக்கப்பட்டது.

என்னதான் காதல் சுதந்திரம் அமெரிக்காவில் இருந்தாலும் இப்படி பகிரங்க இடத்தில்– அதுவும் அடுத்தவர்களுக்கு இடைஞ்சலாக மன்மதலீலை செய்ய சட்டம் இடம் கொடுக்குமோ?

பொலிஸ் வந்துதான் ஜோடிகளை பிரித்துவிட்டது. பின்னர் பிடித்துக்கொண்டும் போய் எச்சரித்து விடுவித்தது.




தொலைபேசிக்காக காத்திருந்த ஒரு குறும்பர் தன்னிடமிருந்த கமராவால் தொலைபேசிக் கூண்டு சமாச்சாரத்தை சுட்டுத் தள்ளிவிட்டார். போட்டோக்களை சுடச்சுட பத்திரிகைகளுக்கும் அனுப்பி வைத்தார்.

பத்திரிகைகளில் படங்களைப் பார்த்த ஜேம்ஸ் ரீகனுக்கு வெட்கமாகிவிட்டது. உடனே அவர் சொன்னது இது:

"நான் இந்தளவுக்கு போயிருக்க மாட்டேன். அன்று கொஞ்சம் அதிகமாக மது அருந்திவிட்டேன். அவள் வேறு அன்று என்றுமில்லாத அழகாக தெரிந்து தொலைத்தாள்." உள்ளே மது போனால் சிலருக்கு ஒன்றுமே புரியாதோ? ♥



# கொலை விழும் நேரம்

## எழுதுவது ரசிகன்

அவன் நிலைக்கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்துக்கொண்டான்.

கறுப்புக் கண்ணாடி கண்களை மறைத்திருந்தது. கறுப்புச் சேர்ட்டும், கறுத்த ஜீன்சும் உடலை உள்வாங்கியிருந்தது.

அவனுக்கே தன் உருவத்தைப் பார்க்க சிரிப்பு வந்திருக்கவேண்டும். சிரித்துக்கொண்டான்.

இப்போது கறுத்த தொப்பியை தலையில் அணிந்து கொண்டான்.

வெளியே வானமும் கறுத்திருந்தது. இடைக்கிடையே எங்கோ இடிபட்டுக் கொண்டிருந்த ஓசையும் கேட்டது.

அவன் வானத்திற்கு நன்றி சொல்லிக்கொண்டான்.

"அநேகமாக நான் இரை தேடிப் புறப்படும் போதெல்லாம் வானம் இருட்டுப் போர்வைக்குள் பூமியை இழுத்துக் கொள்கிறது. நன்றி-வானமே. தாங்யூ" என்று மெல்ல முணுமுணுத்தான்.

வெளியே வந்து அறையை மூடி சாவியை எடுக்க முயன்று, எதையோ மறந்து விட்டோமே 'எதனை என்று யோசித்து......ஓ.... ஜெர்க்சின்.. மழை கோர்ட்.....'

உள்ளே சென்று மழை கோர்ட்- அதுவும் கறுப்பு நிறத்தில் எடுத்து அணிந்து கொண்டான். இடுப்பை தொட்டுப் பார்த்துக்கொண்டான். 3.8 ரிவோர்வர் பத்திரமாக இருந்தது.

அறை பூட்டி வெளியே வந்தான். தயாராக நின்ற 'ஹொண்டா' மோட்டார் சைக்கிள் அவனை வாங்கிக்கொண்டு கிளம்பியது. அவன் உதட்டில் இருந்து மெல்லியதான விசில் சத்தம் ஒன்றும் கிளம்பியது.

□□

காயத்திரி இந்திராவின் பதிலுக்காக ஆர்வமானாள்.

இந்திரா ஒரு பெருமூச்சு விட்டுக் கொள்ள மார்புகள் அசைந்தன.

"முக்கியமான ஆள் யார் என்று அறிவதற்கு முன் மனோகரால் எனக்கு ஏற்பட்ட முதல் அதிர்ச்சி சொல்கிறேன் கேள்."

என்றாள் இந்திரா.

□□

நேற்று மனோகரின் ரூமிலிருந்து திரும்பிவந்த இந்திரா அடித்துப் போட்டதுபோல படுக்கையில் விழுந்தாள். இரவு எதுவுமே சாப்பிடவில்லை. சாப்பிடப் பிடிக்கவில்லை. உடம்பெல்லாம் வலித்தது.

'யப்பாடி..... மிருக பலம்தான் மனோகருக்கு' என்று நினைத்தபடியே தூங்கிப் போனாள்.

இரவுச் சாப்பாடு அப்படியே கிடக்க, கச்சேரி முடித்து வந்த வினோ கவலைப்பட்டான். தூக்கத்தைக் கெடுக்கக் கூடாது என்று இந்திராவை எழுப்பாமல் விட்டான்.

காலையில் வழக்கமாக ஆறுமணிக்கு முன் எழுந்து, ரீயோடு வந்து 'குட் மோனிங்' சொல்லும் இந்திரா இன்று எட்டுமணியாகியும் எழுந்திருக்கவில்லை.

வினோவுக்கு ஏதோ உறுத்தலாய் பட்டது.

தோளில் தொட்டு உலுப்பி, "இந்திரா" என்றான். "என்ன?" என்றாள், பாதி விழிகள் மட்டுமே திறந்து பார்த்து.

"மணி எட்டு"

"அதற்கென்ன இப்போ" என்றவள், சட்டென்று நேற்று நடந்தது நினைவில் எழ வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்தாள்.

வினோவின் முகத்தை பார்க்கவே தயக்கமாக இருந்தது. குற்ற உணர்வு தடுத்தது.

"சொறி! வெரி வெரி சொறி!"

சொல்லிக்கொண்டே டவலை எடுத்துக் கொண்டு அவன் முகத்தைப் பார்க்காமல் பாத்ரூம் நோக்கி ஓடினாள்.

உள்ளே சில்லென்று குளிர்ந்த நீர் வெற்றுடம்பில் தழுவ புத்துணர்ச்சி வந்தது.

'என்ன இது?' இடது மார்பில் நகம் கீறிய தடம் பார்த்து வெட்கப் பட்டாள். அப்போது தெரியவில்லை. இப்போது தெரிகிறது. கொஞ்சம் வலிக்கவும் செய்கிறது. "ராஸ்கல்.... இனிய ராஸ்கல்" சத்தமில்லாமல் சொல்லிக் கொண்டாள். உடம்பு முழுக்க ஒரு தரம் பார்த்துக்கொண்டாள். 'நல்ல காலம் முகத்தில் ஏதும் அடையாளம் இல்லை. இருந்தால் தொலைந்தேன். அண்ணா பிய்த்துவிடுவான் முகத்தை' என்று நினைத்தாள்.

பூந்துவாயால் உடல் ஒற்றி, தலைமுடி துவட்டி, உடை அணிந்து வெளியே வர, வினோ சாப்பாட்டு மேசையில் அவளுக்காக காத்திருந்தான். ரீ ஆவி பறக்க ரெடியாக இருந்தது.

"நீயா ரீ போட்டாய்?" என்றாள். இயல்பாக பேசும் முயற்சியில்.

"ஏன் போட்டால் என்ன? இரவு ஏன் சாப்பிடாமல் தூங்கினாய்? பிடிக்கவில்லையா சாப்பாடு?"

"நோ....நோ.... நான் சி...சித்ரா வீட்டில் சாப்பிட்டுவிட்டுத்தான் வந்தேன் அண்ணா."

வினோ அதற்கு மேல் எதுவும் கேட்கவில்லை. வழக்கமான கேலிகள் இல்லாமல் அவள் மௌனமாய் இருந்தது மட்டும் ஆச்சரியமாகப் பட்டது வினோவுக்கு.

வினோ வெளியே போனபின் மனோகரின் இலக்கம் அழுத்தி போன் செய்தாள்.

"ஹாய் இந்துக் குட்டி. குட்மோனிங் இருக்கட்டும் நீ எப்படியிருக்கிறாய்?"

"போடா ராஸ்கல்."

"ஏன் பிடிக்கவில்லையா இந்திரா?"

"என்ன?"

"நேற்று... நேற்றையது!"

"....சீ...."

"வெட்கமாக்கும்.....?"

"உதைபடுவாய்"

## அங்கம் 36

> "ஆண்: கண்ணிலே நீர் எதற்கு?
> பெண்: காலமெல்லாம் அழுவதற்கு!
> ஆண்: நெஞ்சிலே நினைவெதற்கு?
> பெண்: வஞ்சகரை மறப்பதற்கு!"
> -கவியரசு கண்ணதாசன்-



"அங்கேயும் ஒரு முத்தம். உதைக்கும் காலுக்கு! உனக்கு ஒரு விசயம் தெரியுமா?"

"என்னது?"

"பெண்களின் பெருவிரவில்... சரி சரி பிறகு வா... அது இடையிலே ஒரு கரடி..... ஆ... எங்கே விட்டேன்... பெருவிரலும் முத்... யெஸ்! யார்? வருகிறேன் என்று சொல்லு போ..... மீண்டும் கரடி..."

இந்திரா சிரித்தாள். "பிஸியா?"

"யெஸ்..யெஸ்... எங்கே விட்டேன்...? பெருவிரலிலும் விஷயம் இருக்கிறதாம். அமெரிக்காவில் கண்டுபிடித்திருக்கிறார்கள். எவ்வளவு முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள் பார்"

"சீ.... உனக்கு எப்போதும் இதே பேச்சுத்தானா?"

"வேறென்ன பேசலாம் சொல்லு? ஐக்கிய நாடுகள் சபையில் உணவுப் பிரச்சனை விவாதித்திருக்கிறார்களாம். அது பற்றிப் பேசலாமா? அல்லது குவைத்தில் ஈராக்..."

"போதும் போதும் நான் பார்க்க வேண்டும்."

"ஐக்கிய நாடுகள் சபைக் கட்டிடத்தையா?"

"சே... உன்னை........"

"எப்போ? ஆ... குட் ஐடியா. இன்று மாலை மணி ஐந்து. அழகான இந்திரா இங்கே வருகிறாய்.என் பொஸ் உன்னைப் பார்க்கவேண்டும் என்றார்."

"ஏன்? நீ சொல்லிவிட்டாயா?"

"யா! முழுவதையும்"

"என்ன?"

"அதாவது நம் காதலை. விரைவில் தம்பதிகளாக வேண்டிய அவசரத்தை. உன் அண்ணாவிடம் பொஸ் மூலமே பேசலாம் பார். அதுதான் ஐயாவோட ஐடியா."

"சரி வருகிறேன். ஐந்து மணிக்கு. நீயும் இருக்கவேண்டும் சரிதானே?"

"உத்தரவு"

மாலையில் பூபால் அன்ட் பிரதர்ஸ் அலுவலகம் போனபோது வெளியே மனோகர் காத்திருந்தான். உள்ளே அழைத்துப் போனான். படி தடுக்கியது. விழ இருந்தவளை மனோ தாங்கிப் பிடித்துக் கொண்டான்.

உள்ளே போகும் போதே "பொஸ் வெளியே போயிருக்கிறார். இங்கே வர மாட்டார். நாம்தான் அவர் வீட்டுக்குப் போக வேண்டியிருக்கும். இப்போதல்ல. ஏழுமணிக்கு."

இந்திரா அதிர்ந்து,

"ஐயோ வேண்டாம் மனோ. அண்ணாவின் பார்வையே சரியில்லை. சந்தேகம் பூசிய பார்வை. இன்று நான் நேரத்தோடு போயேயாக வேண்டும். மனோ பிளீஸ்."

"ஐயாவோட ஐடியாவைக் கேள். சித்ராவுக்கு ஃபோன் பண்ணி அவளோடு நீ இருப்பதாக அண்ணா கேட்டால் சொல்விடச் சொல்லு. தீர்ந்தது பிரச்சனை."

இந்திரா தயங்கிவிட்டு, "சரி ஃபோன் எங்கே?" "வா" என்று தன் அலுவலக அறைக்குள் அழைத்துப்போய் சித்ராவின் வீட்டுக்கு எதிரில் உள்ள வீட்டில்தான் ஃபோன் உண்டு. அதன் இலக்கம் இந்திரா டயரி பார்த்துச்சொல்ல, மனோகர் டயல் செய்து கொடுத்தான்.

மறுமுனையில் சித்ராவின் எதிர்வீட்டுப் பெண் வர, சித்ராவைக் கேட்க, அவர்கள் அழைத்துவர மூன்று நிமிசம் கரைந்தது.

"என்னடி" என்றாள் சித்ரா.

இந்திராவின் குரல் புரிந்து, இந்திரா விசயம் சொல்ல,

"உன்னோடு பேசவேண்டும் என்று வினோ கேட்டால்?"

"போன் இருக்கும் வீட்டுக்காரர் ஒரு மாதிரி, வெளியாட்கள் வருவதை விரும்ப மாட்டார்கள் என்று சொல்லிவிடு. பிளீஸ்."

"உடம்பெல்லாம் மூளை. சரி... அப்படி என்ன வேலை? கவனமடி.. அவசரப் பட்டு..."

"சும்மாயிரடி, மனோகர் தன் முதலாளியை அறிமுகம் செய்கிறேன் நில் என்று... அப்படியே உன் வேலை விசயத்தையும் பேசலாமா என்று பார்க்கிறேன். ஓ.கே."

மனோகர் இந்திராவை காரில் அழைத்துப்போனான்.

கார் நகர் தாண்டிப் போக, இந்திரா சற்று கலவரமாகி,

"பொஸ் வீடு நகருக்கு வெளியேவா இருக்கிறது?"

ரைவிங் செய்துகொண்டிருந்த மனோகர் அவளைத் திரும்பிப் பார்த்துச் சிரித்து, தொடையில் கைபோட்டு,

"ஏன் பயமா? பயப்பிடாதே. நேற்றையது ஒரு யுகத்திற்குப் போதும். அதனால் அதற்குத்தான் என்று நினைக்காதே-என்ன?"

என்றான் தொடையில் கிள்ளிக்கொண்டு.

காரின் வேகத்தை தணித்துக் கொண்டே, ஹோர்ண் அழுத்தினான்.

பத்தடி உயர- அகல கேட் திறந்தது. திறந்தவன் வாட்ச்மேன். மனோகரைப் பார்த்து பரிச்சயமான புன்னகையையும், மனோகர் அருகில் இருந்த இந்திராவைப் பார்த்து பூனை எலியைப் பார்ப்பது போன்ற பார்வையையும் வீசினான். கார் உள்ளே வழுக்கிப் போக கேட் சாத்தினான்.

உள்ளே பங்களா மாதிரி வீடு. போட்டிக் கோவில் காரைச் செருகிவிட்டு மனோகர் இறங்க, இந்திராவும் இறங்கினாள்.

சுற்றிலும் ஆள் அரவமே இல்லாதது போல வெற்றிகரமான அமைதி பிரகடனமாகியிருந்தது.

அந்த அமைதி இந்திராவை அச்சுறுத்தியது. கண்ணைக் கட்டி காட்டுக்குள் விட்டதுபோலவும் இருந்தது.

முதல் தடவையாக இப்போது மனோகர் இந்திராவின் கண்களில் ஒரு வில்லன் போலத் தெரிந்தான்.

மனோகர் இந்திராவைப் பார்த்து சிரித்தான். ஒரு ராட்சதன் சிரிப்பது போல் பிரமை ஏற்பட்டது இந்திராவுக்கு.

'இது என்ன தேவையில்லாத சிந்தனை? மனோகர் யார்? என்னவன்- என் இனியவன், எனக்காக எதுவும் செய்யக் காத்திருப்பவன். அவனைப் போய்... வில்லன்.. ராட்சதன்... மனமே! உனக்கென்ன நடந்தது? மற....விலகு...'

"என்ன இந்திரா யோசனை வா டியர்."

என்றான். போனாள். மனோகர் கைவைத்துத்தள்ள கதவு திறந்து உள்ளே ஹோல் தெரிந்தது. விசாலமான ஹோல். பெரிய பெரிய சோபாக்கள். மேலிருந்து தொங்கும் பெரிய சரவிளக்குகள். பணக்காரத்தனம் நிரம்பி வழிந்தது. வெளிச்சம் அதிகமில்லை. ஜன்னல்கள் மூடப்பட்டு கிடப்பது திரைகளின் ஊடே தெரிந்தது. இந்திரா மீண்டும் பதட்டமானாள். தவறான இடம் இது என்று மனதுக்குள் சிகப்பு வெளிச்சம் எரிந்து எச்சரித்தது.

ஒரு கரம் அவள் மணிக்கட்டில் பற்றியது.

"ஆ...!" என்று குரல் எழ, அதிர்ந்து போய்ப் பார்க்க,

அது மனோகர்.

"ஏன் இந்திரா?"

"பயமாக இருக்கிறது மனோ" என்றாள் சற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு.

"நான் இருக்கப் பயமேன்? மேலும் நீ என்ன பிடிவாதக்கார முரட்டுப் பெண்ணா? இல்லையே"

என்றான். இந்திராவுக்கு அவன் பேச்சுப் புரியவில்லை.

ஏதோ கேட்க வாய்திறந்தவளை-

ஹோலின் இடது புறமாய் திறந்த கதவின் சத்தம் வாய் மூடவைத்தது.

கதவு விலக, காதோர முடி நரைக்க ஆரம்பித்திருந்த ஒரு ஆண் தலை நீட்டி என் பல்வரிசை படு ஆரோக்கியம் என்பதுபோல பளிச்சென்று இளித்தார்.

இந்திரா சிரிக்கலாமா கூடாதா என்று யோசிப்பதற்கிடையில், மனோகர்,

"பொஸ்"

என்றான் மிக மெல்லிய குரலில்.

இந்திரா வலுக்கட்டாயமாக புன்னகையை தருவித்துக்காட்ட, பொஸ் எனப்பட்ட ஹரிகரன் முகம் பிரகாசமாகி,

"வா மனோகர்... அது...."

"இந்திரா" என்று அறிமுகத்தோடு மனோகர் முடிக்க,

"ஓ... இந்திரா. இப்போதுதான் பார்த்தேன். வா இந்திரா."

என்றதில் 'இப்போதுதான் பார்த்தேன்' என்பதற்கு இந்திரா அர்த்தம் யோசித்துக் குழம்பினாள்.

இன்று எல்லாமே குழப்பம் போல, புதிர் போல, அச்சம் தருவன போல இருப்பது ஏன்? என்று நினைத்தும் கொண்டாள். நினைத்தபடியே மனோகர் பின் சென்றாள்.

அந்த அறை அத்தனை பெரிதும் இல்லாமல், சிறிதும் இல்லாமல் ஆனால் ஆடம்பரத்தில் சற்றும் குறைவில்லாமல்... அது ஏன்....... கட்டில்.. இரட்டைக் கட்டில் தவிர வேறு எதுவுமில்லாமல்...

இந்திரா சட்டென்று நின்றாள்.

இந்திராவுக்கு நொடியில் அபாயம் அல்லது விபரீதம் புரிந்து போனது...

அறைக்குள் இருந்த இன்னொரு கதவு சடாரெனத் திறக்க...

இந்திரா வீல்... என்று அலறினாள்.

□□

"என்னம்மா இந்திரா?"

என்று பதறிப்போனாள் காயத்திரி.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



* ஆர்.சண்முகம்
* 25
* 80, பிரதான வீதி, கேகாலை.
* பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி, கரம்.



* எம். ஹரின்
* 22
* 2, ஜனூன் வீட்டுத் திட்டம், பாத்திமா மாவத்தை, மாத்தறை.
* பத்திரிகை, ரீ.வி., நண்பர்கள் தொடர்பு.



* கே.லோகேஸ்வரி
* 18
* தெற்கிலுப்பைக் குளம், வவுனியா.
* கதைப்புத்தகம், பத்திரிகை, வானொலி, சினிமா.



* பாத்திமா ராசியா
* 20
* 212, கண்டி வீதி, கல்ஹின்னை.
* நண்பர்கள் தொடர்பு, தொலைக்காட்சி.



* வி. ராஜா
* 24
* AL-HUDA ENGINEERING P.O.BOX-17013 DOHA-QATAR.
* பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி.



* எம்.சல்மான்
* Ministry of Defence P.O.BOX- 58952 Riyadh 11515 K.S.A.
* வழமையானவை.

## வீர மக்கள் தின கவிதைப் போட்டி

'ஐக்கியமே பலம்' என்ற தலைப்பில் சுவிற்ஸர்லாந்திலுள்ள ஐக்கியத்தை வலியுறுத்துவோர் தினமுரசு மூலமாக நடாத்திய கவிதைப்போட்டி முடிவுகள்-

தமிழீழ மக்கள் விடுதலைக் கழக (PLOT) செயலதிபர் அமரர் க. உமாமகேஸ்வரனின் நினைவு தினத்தை முன்னிட்டு இப்போட்டி நடத்தப்பட்டது.

தலா ஐநூறு ரூபாயுடன் நினைவுப் பரிசுபெறும் பத்துப் பேரின் விபரமும், மற்றும் ஆறுதல் பரிசுபெறும் நூறு அதிஷ்டசாலிகளின் பெயர் விபரமும் தொடர்ந்து வரும் முரசுகளில் வெளிவரும்.

*முதல் மூன்று நினைவுப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் இவர்கள்தான்:*

**1. தந்தை செல்வா நினைவுப் பரிசு:-**

எம். ஜெயபாரதிதாசன்
10ம் குறிச்சி,
திருகோணமலை.

**2. அமரர் க. உமாமகேஸ்வரன் நினைவுப்பரிசு:-**

எஸ். சங்கரநாராயணன்
கொம்பனித்தெரு,
கொழும்பு-2.

**3. வெலிக்கடைச் சிறையில் உயிர் நீத்த தியாகிகள் நினைவுப் பரிசு:-**

ஈ. எல். மன்சூர்
மீராவோடை,
வாழைச்சேனை.

-அன்புடன்-
ஐக்கியத்தை விரும்புவோர் -சுவிஸ்-

# காயங்கள் ஆறவில்லை

சிறுகதை

சிலாபம் பொ.புஷ்பராஜு

அந்த யுவதியின் மரண [illegible] கையிலிருந்த பிளாஸ்டிக் போத்தலை [illegible] கோபத்தில் வீசினான். [illegible] அவனது மடியிலிருந்து [illegible]

அந்தக் கிராமமே துக்கத்தில் மூழ்கியிருந்தது.

மகிபாலவின் வீட்டுக்கு வந்திருந்த அந்த சிங்கள பேய்விரட்டும் மந்திரவாதி அன்று இரவு முழுவதும் 'தொயில' நடனம் ஆடினார். விடிய இன்னும் ஒருசில மணித்தியாலங்களே இருந்தது. பக்கத்து வீட்டு கோழிகள், கொக்கரக்கோ என கூவின. கோழி கூவியதும் மாமரத்திலிருந்த காக்காவும் கா... கா என கரையத் தொடங்கியது. கிணற்றடியில் கருங்கல்லுக்கு அடியிலிருந்த தவளைகளும் க்கூ, க்கூ என சத்தமிட்டன.

மகிபாலவின் உச்சந்தலையில் பாக்கு வெட்டியால் தேசிக்காய்களை மந்திரவாதி வெட்டி முடித்ததும், அவனது இடதுகை மணிக்கட்டில் வெள்ளை நூல் ஒன்றை கட்டி அவரது கிரியைகளை முடித்தார்.

மகிபால கிரியைகள் முடிந்ததும் சிரித்தான். ஓ வென கதறி அழுதான். மீண்டும் சிரித்தான். மா மரத்திலிருந்த காக்கைகளுக்கு உணவைப் போட்டவன், மீண்டும் அழுதான். சுமார் நூறுக்கும் மேற்பட்ட அந்த கிராமத்து மக்கள் மகிபாலவின் செயல்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். சூரியனும் வானிலிருந்து சிறிது சிறிதாக தன் ஒளியை கிராமத்து மக்கள்மீது வீசிக் கொண்டிருந்தது.

மகிபால சிலாபத்து நகரை ஒட்டிய எலிவெட்டிய என்ற சிங்கள கிராமத்தில் பிறந்தான். கிராமத்து பாடசாலையிலேயே ஆரம்ப படிப்பை மேற்கொண்டான்.

குச்சி வீட்டில் வாழ்வோரும் குடிசைப் பள்ளியில் படிப்பது அறிவுக்கும் திறமைக்கும் மதிப்பு தரும் என்ற நம்பிக்கையில்தான். அவனது திறமைக்கு கிராமத்து பாடசாலையில் நல்ல மதிப்பும் மரியாதையும் தரப்பட்டது. அவன் படிப்பில் திறமைசாலி. மகிபாலவின் தகப்பன் அவனது சின்ன வயதிலேயே இறந்து விட்டான்.

உயர் படிப்புக்காக கிராமப் பாடசாலையைவிட்டு மாதம்பை வித்தியாலயத்தில் சேர்ந்தான். உயர் வகுப்பில் இங்கும் தன் திறமையைக் காட்டினான்.

அரசாங்க பரீட்சையில் நல்ல சித்தி பெற்றான். தொடர்ந்து படிப்பை மேற்கொள்ள வசதி கிடைக்காமையினால் பல்வேறு தொழிலுக்கு விண்ணப்பித்தான். தொழில் கிடைக்கவில்லை. இறுதியில் இராணுவத்தில் சேர்ந்தான்.

அன்று கிளிநொச்சி நகருக்கும் அருகில் உள்ள காவல் அரணில் இராணுவக் குழுவில் மகிபாலவும் ஒருவனாகயிருந்தான். இந்தக் குழுவில் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் கடமையிலிருந்தனர்.

அன்று புதன்கிழமை. அமாவாசை தினத்திற்கு முதல் நாள். ஒரே இருள். கும்மிருட்டு. இரவு சுமார் இரண்டு மணியிருக்கும். காவல் அரணை சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட புலிகள் நாலா பகுதிகளிலும் இருந்து தாக்கத் தொடங்கினர். புலிகளின் படையில் பெண் புலிகளும் இருந்தனர்.

"ஐயோ அம்மே....... ஐயோ அம்மா....."

இப்படி சத்தங்கள் கேட்டன.

இந்த அவலச் சத்தங்களுக்கிடையே துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும், கைக் குண்டுகளும் சத்தங்களைப் பரிமாறிக் கொண்டன.

மகிபாலவின் வலது காலிலும் ஒரு துப்பாக்கி குண்டு பாய்ந்தது. நிலத்தில் விழுந்தான். வலி தாங்காது "ஐயோ அம்மே..... ஐயோ அம்மே......" என புலம்பிக்கொண்டே பூமியைத் தடவித் தடவி காவல் அரணுக்குள் நுழைய முற்பட்டபோது ஒரு பெண் புலி துப்பாக்கி வேட்டு பட்டு "ஐயோ அம்மா... ஐயோ அம்மா.... தண்......ணீர். தண்ணீ...ர்" மெல்லிய குரலில் புலம்பினாள்.

அவளது தொடையிலும் மார்பிலும் துப்பாக்கி குண்டு பாய்ந்து இரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது.

மகிபாலவுக்கு சிறிது தமிழ் தெரியும். தன் வேதனையையும் மனதில் இருத்திக் கொண்டே திரும்பிப் பார்த்தான். அவனது பக்கத்தில் இராணுவ உடையில் ஒரு பெண் புலி! ஆம் அவள் தமிழ் யுவதி.

"தங்கைச்சி கொஞ்சங் யிருங்... கோ.. தண்.. ணீ...ர் தாரங்"

அவள் வலி தாங்காது புலம்பிக் கொண்டேயிருந்தாள். மகிபால மெதுவாக அவளை இழுத்து தன் மடியில் இருத்தி, தன் இடுப்பில் இருந்த தண்ணீர் போத்தலை எடுத்து மூடியை கழற்றினான்.

பின், குற்றுயிராயிருந்த அவளின் வாயைத் தன் கையால் திறந்து தண்ணீரை ஊற்றினான். அவளும் மிக கஷ்டப்பட்டுக் குடித்தாள். அவள் அப்போது மகிபாலவின் கைகள் இரண்டையும் இறுகப் பற்றியவாறே "அண்ணா நீங்கள் நல்லா இருக்கணும். இந்த நேரத்திலும் தண்ணீர் கொடு... த்... தீங்... களே. நன்றி....... ந.....ன்றி."



டுமீல்... டுமீல்.. டுமீல் மூன்று துப்பாக்கி குண்டுகள் மீண்டும் அவளை பதம் பார்த்தன. மகிபாலவின் மடியிலேயே துடிதுடித்து இறந்தாள்.

மகிபாலவின் கண்கள் சிவப்பு நிறமாகியது. அவளை வெடி வைத்த சிப்பாயை முறைத்து பார்த்துவிட்டு சிரித்தான்.

இப்போது அவனது சிரிப்பில் தெரிவது [illegible] விட்டு அவனது கண் இமைகளை மூடினான். [illegible] வீரர்கள் அவனது செயலைப் பார்த்து முறைத்தனர். மகிபால அவர்களை பார்த்து சிரித்தான்.

இப்போது அவனது சிரிப்பில் ஒரு [illegible] தெரிந்துகொண்டிருந்தது. ஆம் இப்போது மகிபால ஒரு [illegible].

# உயிரே உனக்காக

சேத்தூர் எஸ்.பகீரதி

அந்த அழகான பூங்காவில் தங்கள் பொழுதை உல்லாசமாகக் கழிப்பதற்கு வந்த அனைவரையும் சுபா வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தாள். எதிரே மனோ அமர்ந்திருந்தான். கலகலவென்ற சிரிப்பு சுபா-மனோவை மட்டுமல்ல அங்கிருந்த அனைவரையும் திரும்பி பார்க்க வைத்தது. அந்தக் காதல் ஜோடிகளில் அவன் ஏதோ ஜோக் சொல்ல அவள் சலங்கைகள் அதிர்வதைப் போல சிரிக்க அவனும் சேர்ந்து சிரித்தான். திடீரென அங்கு நிலவிய நிசப்தம் உணர்ந்தவர்களாக இருவரும் சுற்றுமுற்றும் பார்த்தனர். தங்களையே பார்த்துக்கொண்டிருப்பதை உணர்ந்தவள் முகம் மெல்லச் சிவக்க அவனுக்குப் பின்னே முகத்தைத் மறைத்துக் கொண்டாள்.

"பார்த்தீங்களா மனோ 'லவ் பேர்ட்ஸ்' மாதிரி எவ்வளவு சந்தோஷமா அவங்க இருக்கிறாங்கன்னு! ஏன் எங்களாலையும் அவங்க மாதிரி இருக்க முடியுதில்லை?" அந்த ஜோடியை பார்த்தவாறே சுபா கேட்டாள். தனது கரங்களுக்குள் இருந்த சுபாவின் கரங்களை வருடியபடி மனோ மென்மையாகப் புன்னகைத்தான். திடீரென மனோவைக் குறுகுறுப்பாகப் பார்த்தவள் "மனோ என்ன நீங்க உண்மையிலேயே லவ் பண்றீங்களா?" கேட்ட சுபாவின் குரலில் மட்டுமல்ல உள்ளத்திலும் குழந்தைத்தனமே இருந்தது.

அவளையே பார்த்துக்கொண்டிருந்த மனோ புருவத்தை வளைத்து "என்னடா இது? இவ்வளவு பேசிப் பழகி மனசால நெருக்கமாகிவிட்ட பிறகும்....." கேட்டான். "ம்... சொல்லுங்க" அவள் சிணுங்கினாள். "யெஸ் ஐ லவ் யூ சுபா. உன்ன என் உயிரிலும் மேலாக நேசிக்கிறன்." சொன்ன மனோவைப் பார்த்து "உயிரினும் மேலான்னா எந்தளவுக்கு நேசிக்கிறீங்க?" இடைமறித்து சுபா கேட்டாள். "அதோ அந்தக் கடலை விட இந்தப் பூமியைவிட அந்த வானத்தைவிட என்னோட அன்பு பெரிசு" மனோ கூற சுபா நெகிழ்ந்தாள்.

"மனோ விதி வசத்தால நான் உங்களுக்குக் கிடைக்காம விட்டா என்ன செய்வீங்க?" திடுதிப்பென சுபா கேட்க, "விளையாட்டாகவும் அப்படி சொல்லாத சுபா." மனோவின் குரல் கரகரத்தது.

"ஐயோ இல்லம்மா நான் செத்துட்டேன்னா என்ன பண்ணுவீங்க.." முடிக்கும் முன்பே சுபாவின் வாயை கரத்தால் மனோ மூடினான்.

"அப்புறம் நான் வாழ்வேன்னு நினைக்கிறியா சுபா? என்னோட வாழ்க்கைக்கும் ஒரு அர்த்தம் இருக்குன்னு நான் உணர்ந்ததே உன்னைக் கண்ட பிறகுதானே? ஏன் இப்படியெல்லாம் பேசுறே?" மனோ கேட்டவாறே தன் கரத்தில் இருந்த அழகிய ஒற்றை சிவப்பு ரோஜாவை சுபாவின் கூந்தலுக்குள் செருகினான். சுபாவின் கண்கள் பனித்தன. மனோவின் கரங்களை இறுகப் பற்றி "நாங்க சாகக் கூடாது மனோ. ஆயிரம் வருஷம் நான் உங்க கூடவே வாழணும். கடவுளைத் தவிர எந்த சக்தியாலையும் எங்களைப் பிரிக்கவே முடியாது. நான் சாகும்போதுகூட நீங்க என் பக்கத்திலேயே இருக்கணும் மனோ." சுபா விம்மலூடே சொன்னாள்.

திடீரென இரண்டு முரட்டுக் கரங்கள் சுபாவை பற்றி இழுத்தன. அது தனது அண்ணன் ஜெகன் என்பதை அவள் உணரும் முன்னரே சுபாவின் மென்மையான கன்னத்தை ஜெகனின் முரட்டுக் கரம் பதம் பார்த்தது.

மனோ 'ஜெகன்' என்று ஆவேசமாகக் கத்தினான். குரூரமாய் கண்களில் வெறித்தனம் தெரிய ஜெகன் மனோவை நெருங்கினான். "ஏண்டா பொறுக்கி ராஸ்கல் உனக்கு எத்தனை தடவை சொல்றதுடா சுபாவைப் பார்க்காதே பேசாதேன்னு! உன்கிட்ட பணம்தான் இல்ல மானம், மரியாதை கூடவா இல்ல?" கேட்டவாறே ஜெகன் மனோவின் ஷேர்ட் காலரை அள்ளிப் பிடித்து உலுப்பினான்.

ஜெகனின் கரத்தைப் படார் எனத் தட்டிவிட்ட மனோ அவனுக்கு அடிப்பதற்குக் கையை ஓங்கவே "மனோ... ப்ளீஸ் மனோ எனக்காக வேண்டி அண்ணாவை விடுங்க" அவள் கெஞ்ச மனோ பொங்கிய ஆத்திரத்தை



அடக்கிக் கொண்டான். சுபா "மனோ" என மனோவை நோக்கி வர ஜெகன் சுபாவை தரதரவென இழுத்துக்கொண்டு காரில் ஏற்றினான்.

"அண்ணா என்ன விடு நான் மனோகூடக் கொஞ்சம் பேசணும்" சுபா கெஞ்சினாள். "சுபா" என உறுமி ஜெகன் அவளைச் சுட்டெரித்து விடுபவன்போல பார்த்தான். கரங்களை நீட்டி சுபா "மனோ மனோ" என அழைத்தாள். திகைத்த மனோ விழிகளில் நீர் நிறைய கார் மறையும்வரை காரையே பார்த்துக்கொண்டிருந்தான். அவனது இதயம் வலித்தது. சிறிது நேரம் பிரமை பிடித்தவன்போல் நின்ற மனோ கால்போன திசையில் நடந்தான்.

சுபாவை ஹோலினுள் தள்ளிய ஜெகன் "ஏண்டி கழுதை! அப்பா அம்மா இல்லாத குறை தெரியாம எப்படியெல்லாம் உன்னை வளர்த்தேன் தெரியுமா? அந்த அனாதைப் பையன்கூட பேசாதேன்னு எத்தனை தடவை உனக்குச் சொல்லியிருப்பன்? போன மாசம் அவனோட மூக்கு உடையும்வரை அடிச்ச அடி அவனுக்கு மறந்திட்டுது. உனக்கு அடுத்த வாரம் கல்யாணம். தகுதி தராதரம் கெட்ட பயல்கிட்ட உனக்கு என்னடி பேச்சு?" ஆவேசமாய் கத்தினான். "சும்மா நிறுத்து அண்ணா. அவர் பணத்தால குறைஞ்சவர்தான். ஆனா நல்லா படிச்சவர்-பண்பானவர்-மனிதாபிமானம் நிறைஞ்சவர். நாகரிகமாகப் பழகுறவர். உன்ன மாதிரி அவர் மிருகமல்ல. அவர் ஒரு [illegible]. சுபா முடிக்குமுன்னரே ஜெகனின் [illegible] சுபாவின் சிவந்த [illegible] என்று சிவந்து. அவளை [illegible] வண்ணம் பதம் பார்த்தன.

□□

திடீரென ஏதோ நினைவுக்கு வந்த ஜெகன், சுபா இருந்த அறையைத் திறந்ததும் அதிர்ந்தான்.

சுபாவின் கண்கள் [illegible] வாயால் நுரை தள்ள கட்டிலில் சரிந்திருந்தாள். கையில் இருந்த விஷ [illegible] நழுவியிருந்தது.

நடந்தது என்னவென்று அனுமானிக்கும் முன்னரே ஜெகன் 'நோ' என அலறினான். துடித்தான். தலையில் அடித்து 'சுபா சுபா' எனக் கதறினான். அவனது உள்ளத்திலும் சகோதர பாசம் உயிர் பெற்றது.

சுபா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டாள். மனோ துடிதுடித்து வைத்தியசாலையை வந்தடைந்தான். மனோவின் உடலெல்லாம் ஒரே இரத்தக் காயம். நிற்பதற்கு திராணியற்றவனாய் தள்ளாடினான் மனோ. மனோவைக் கண்ட ஜெகன் ஓடி வந்து மனோவின் கரங்களைப் பற்றினான். தனது கரத்தைவிடுவித்த மனோ எரிமலையாய் வெடித்தான். 'இப்போ சந்தோஷம்தானே?" மனோ கேட்க ஜெகன் அழுதான். "என்ன மன்னிச்சிடு மனோ."

டாக்டர் வெளியில் வர இருவரும் ஓடினர். அவர் புன்னகைத்தபடியே "ஒரு ஐந்து நிமிஷம் லேட்டாயிருந்தா ஆபத்து. ஷீ இஸ் ஓல் ரைட்" டாக்டர் சொல்லிவிட்டு சொன்றார்.

சுபா மெல்லக் கண்களைத் திறந்தாள். ஆதரவோடு அவள் கூந்தலை வருடிய ஜெகன் சுபாவினதும் மனோவினதும் கரத்தை இணைத்து வைத்துவிட்டு புன்னகைத்தான்.

மனோ கண்களைச் சிமிட்டி சுபாவைப் பார்த்துப் புன்னகைத்தான். அவளும் முகம் நிறைய சந்தோஷத்துடன் மென்மையாகப் புன்னகைத்தாள். "காதல் சாவதில்லை" ●

# அழகான ஒரு சோடிக் கண்கள்......!

குட்டிக்கதை

-கிண்ணியா அமீரலி-

தொடர்ந்து நடந்திருந்தால் நான் ரசனை இல்லாதவன் என்று அவள் கருதியிருப்பாள்.

ஆடாமல் அசையாமல் அப்படியே நின்றுவிட்டேன். என் கம்ப விழிகளுக்குள் அவள் சீதையாகத் தெரிந்தாள்.

'மீனம்மா....மீனம்மா...கண்கள் மீனம்மா'

பருவ தோஷம்- அடக்க முடியவில்லை. பாடினேன். 'புருவம் வில்லாக...பார்வை ஒரு கணையாக' அவள் நிலவு முகம் சூரியனாகியது.

'மன்னிக்க வேண்டுகிறேன்!'....மீண்டும் பரிகாசமாகப் பாடி சைக்கிளை மிக வேகமாக மிதித்தேன்.

இந்தக் கண்ணழகி-எங்கள் கிராமத்துக் கிழடுகளுக்கும்கூட கனவுக் குஷ்பு என்றால் பாருங்களேன். உங்கள் மனக் கண்ணில் இவளது மொனாலிசாப் புன்னகை மெல்லிய தாய் மின்னி மறைவதை அவள் 'தோணி'யில் ஏறி-அக்கரை அடைவதை அக்கறையோடு இக்கரையில் நின்று இரசித்தேன்.

❤

திருகோணமலையிலிருந்து-எங்கள் கிராமத்துக் குழந்தைகளின் அறிவுக் கண்களைத் திறக்கவரும் இந்த விழியழகி...

நாணச் சிட்டு!
நடக்குந் தென்றல்!
ஆம்.....!
அவள் ஓர்-
ஆசிரிய தேவதை!

மேலதிகச் சந்தோஷங்களுடன்... இந்த அதிக பட்ச அழகியைத் தரிசித்தால்தான் அன்றாடம்-நாள்- ஆரோக்யமானதாக அமையும் என்பது எங்கள் ஊர்சன விமர்சனம்.

'மீனா? நின் விழி மீனா?
தேனா? நின்மொழி தேனா?' (கவிதை இரவல்)

திரும்பினாள்.

கயல் விழிகள் புயல் விழிகளாகின.

வேகமாக நடந்து பாடசாலை வளவுக்குள் நுழைந்தாள்.



'பாருல காண்டவர்கள்
பைத்திய மான தெல்லாம்
கார்குழல் மாத ரால்தான்
கவிஞன் யான் எந்த மட்டும்?
காரிகை கண்ணெறிந்தால்
கல்லறை தேவையில்லை!'

கண்களால் கவிதை பாடும் அந்த மௌனோவியத்தின் இன்பக் கனவுகளோடு வீடு திரும்பினேன்.

அன்று மாலை-

அந்த உயர்திணைக் குயில் ஒயிலாக நடந்து வரும் ஒழுங்கை மடிப்பின் ஓரத்தில் நின்று கொண்டிருந்தேன்.

அவள் பள்ளிக்கூடம் விட்டு வந்து கொண்டிருந்தாள்.

'கன்னித் தமிழோ?
கம்பன் கவியோ?' தொடங்கி,

அந்த விழியழகி என்னருகில் நெருங்க-'விழிகள் தங்கத் தாரகை' எனப் பாடி முடித்தேன்.

அவளும் எத்தனை நாளைக்குத்தான் பொறுப்பாள்?

பல்லைக் கடித்தாள்.

குனிந்தாள்.

'அடி செருப்பால...' காறித் துப்பினாள்.

நான் பாய்ந்தேறி மிதித்த மிதியில்-வேகமாக வந்த மோட்டார் சைக்கிளுடன் என் சைக்கிள் மோதி...

❤

ஆஸ்பத்திரியிலிருந்து ஒப்ரேஷன் முடிந்து ஊருக்கு வந்திருந்தேன்.

'ஞானமொழி பேசு மெழிற் சீனவிழிக் கன்னி'

அவள்தான்..அந்த ஆசிரிய தேவதை- அவளுடைய அழகான சோடிக் கண்கள்.. இப்பொழுது...

சைக்கிள் விபத்தில் விழிகளை இழந்த எனக்காக.. அனுதாபப்பட்டு அழுது கொண்டிருந்தன....

(யாவும் கற்பனை)

# கூடு விட்டு ஆவி போனால்...

**அவளுக்கு உடல் முழுக்க திடீரென்று மின்சாரம் பாய்ந்த அதிர்ச்சி. மனதைத் திடப்படுத்திக்கொண்டு தொட்டுப்பார்த்தாள்.**

**ஹரீரா அனஸ்**

இருள் கொஞ்சம் கொஞ்சமாக பூமியை ஆக்கிரமிக்கத் தொடங்கியது. வயலுக்குப் போன கணவனை ஆசையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் பாத்தும்மா.

என்ன வாளிப்பான உடம்பு. ஆங்காங்கு அங்கங்கள் செதுக்கி வைத்தது போன்ற சீர்மை. உறவின் பூரிப்பில் இன்னும் அவள் நினைவை விட்டு நீங்காத ஓவியமாய் நின்றான் அவன். கொடுப்புக்குள் சிரித்துக்கொண்டு ஓடிப்போய் வீட்டுக்குள் இருந்த சுவர் மணிக்கூண்டில் மணி பார்த்தாள். நேரம் ஐந்துமணி நாற்பத்தைந்து நிமிடம். இப்பொழுது வயலில் இருந்து அரைவாசித் தூரம்மட்டில் வந்திருப்பார் என் கணவர். அவளின் மனது அறிவித்தது. வீட்டுக்குள் போய் தன் கணவனுக்குப் பிடித்தமான சிவப்புநிற வொயில் சாறி கட்டிக் கொண்டாள்.

அடுப்பு பற்ற வைத்து கேற்றிலை எடுத்து எரியும் அடுப்பில் வைத்தாள். வாய்சிவக்க வெற்றிலை போட்டுக் குதப்பினாள். மார்புக் கச்சையை இறுக்கி முந்தானையை அலட்சியமாக்கினாள்.

ஆ....அதோ... கணவன் வந்துவிட்டார். என்ன ஆசை; என்ன ஆவல்.

'என் கண்ணாளன் வந்து என்னை....' மனதினில் எண்ணிக்கொண்டு அங்கலாய்த்தாள். இரவு மட்டும்தான் அவன் அவளோடு படுத்திருப்பது, பொழுது காலிக்கும் போது வீட்டைவிட்டு தனது வயலுக்கு மண் வெட்டியோடு போனால் மாலை ஐந்து மணிக்கும் மேலாய்த்தான் வீட்டுக்கு வருவான். இது இன்று நேற்றல்ல, இன்றைக்கு ஒருவருஷமாக இப்படித்தான். பாத்தும்மா கரீமைக் கலியாணம் முடித்து ஒன்றே கால் வருஷமாகிறது. கெக்கிராவையில் குளத்திற்கு... அக்கரையில் ஒரு பாய்ச்சல் நிலக் காணியை வாங்கியதோடு அவனின் தின வேலைகள் இப்படித்தான் அமைந்தது. நல்ல பிரயாசைக்காரன். வெய்யில் மழை என்று பாராமல் மண்ணில் பொன் விளைவிக்கும் கைதேர்ந்த ஒரு நல்ல விவசாயி.

கரீம் பாத்தும்மாவை ஆசையோடு பார்த்தான். மனதினில் ஆசை கொழுந்து ஆர்ப்பரித்துக் கெம்பியது. வெற்றிலைச் சிவப்பில் அவள் உதடுகள் என்ன கவர்ச்சியாய் இருந்தன. தன் கணவனின் கிறக்கத்தினை அவள் ஒரு நொடியில் உணர்ந்தாள். அவனின் கைகள் வந்து கட்டிக்கொள்ளட்டுமே என்று பொறுமை காத்தாள்.

கரீம் கிணற்றடிக்குப்போய் மண் நிறைந்த மண்வெட்டியை தண்ணீரில் கழுவினான். தன் உடலையும் குளிர்ந்த பச்சைத் தண்ணீரில் அலம்பினான். கணவன் கிணற்றடியால்வர துவாய் கொடுத்து தலை துவட்டினாள் பாத்தும்மா. "தலை நிறைய வியர்வை இல்லையா?" "ஓமப்பா.." அவள் மார்பினால் அவனின் முதுகினில் ஸ்பரிஸம் செய்தாள். ஒருயிர் ஈருடலாய் உணர்வினைப் பகிர்ந்து கொண்டார்கள். சூடான தேனீர் அவனுக்கு இன்னும் இதமாக இருந்தது. தன் அன்பு மனைவியின் ஆதுரமிகுந்த அரவணைப்பில் தான் பாக்கியவான் என எண்ணிக் கொண்டான்.

அழகான இளங் குடும்பம். என்ன அன்பு; என்ன பாசம். அவர்கள் காதலித்துக் கலியாணம் செய்தவர்களில்லை. ஆனால் காதலித்தவர்களிலும் எத்தனை மடங்கு பரிவு-புரிந்துணர்வு. எல்லோரும் பொறாமைப்பட்டார்கள். இப்படியும் ஒரு அன்பா? அன்னியோன்யமா?

கரீம் மாலை ஆறு மணி வானொலிச் செய்தி கேட்டான். என்ன சந்தோஷம்? "இனி எங்கடை நாட்டிலை ஒரு சுபீட்சம் வரும்போல இருக்கு பாத்தும்மா!"

அவளும் ஆவலாய் வந்து என்ன என்று கேட்டாள். "இந்த இனப்பிரச்சனை தீரப் போகுதாமே? இனியென்ன கொஞ்சம் கொஞ்சமாய் சாமான்களின்டை விலையையும் குறைச்சு அநியாயச் செலவுகளையும் சமாளிச்சா நாடு நல்லா வரும்தானே?"

"ஓம்....ஓம்... அப்பிடி எண்டா சரிதான்" பாத்தும்மா கணவனோடு சேர்ந்துகொண்டாள். கரீம் நாலு விஷயம் தெரிந்தவன்.

அன்று வியாழக்கிழமை காலையில் கடைக்குப்போய் சாமான்களோடு சேர்த்து பாத்தும்மா வாங்கி வந்த 'தினமுரசை'ப் புரட்டினான். "இராணுவ வீரனும்-அவனது காதலியும்" என்ன அருமையான சிறுகதை எத்தனை தத்ரூபம். இதுவெல்லாம் நம் நாட்டின் உண்மைக் கருவூலங்கள்தானே? நிஜம்தானே? இப்படி மட்டும் ஒவ்வொரு யுத்த முனைக்காரரும் எண்ணினால் இளைஞர்கள் மடிவார்களா? பாவம் எங்கள்



நாட்டின் இளைஞர்கள், சிந்தனை ஓட்டத்தை பாத்தும்மாவின் அழைப்பு இடைநிறுத்தஞ் செய்தது.

"சரி வாங்கோ...சாப்பிடுவம்."

சாப்பாட்டு விரிப்பில் அமர்ந்தான். பாத்தும்மாவின் கையில் இருந்த வளையல்கள் அசைந்து ஓசையெழுப்பின. அவள் அங்கும் இங்கும் அசைந்து உணவு பரிமாறும். அழகையே அவதானித்துக்கொண்டிருந்தான். இருவரும் ஒரே பீங்கானில் சோறு போட்டுச் சாப்பிட்டார்கள். இஸ்லாமிய வழக்கமும் அப்படித்தான். மனங்கள் ஒன்றுபட, கணவன் மனைவியிடையே ஒற்றுமை வளர ஒன்றாகத் தொழுவது, ஒன்றாகச் சேர்ந்து உணவு உண்பது இவைகள் பெரும் அனுகூலங்களாகின்றன.

"ச்...சா.... என்ன அருமையான கறி." முருங்கைக்காயில் ஒரு உறைப்புப் போட்டு பிரட்டல், 'கும்புளா' மீனை என்ன உருசியாக ஆணம் வைத்துச் சமைத்திருக்கிறாள். "பாத்தும்மா உங்கடை கை பட்டால் மண்ணும் கரும்பாயிடும் போங்க." கணவனின் மன தார்ந்த பாராட்டுதல்கள் அவளின் கன்னங்களைச் செந்நிறமாக்கியது. அவள் வெட்கப் படும்போதும் கொள்ளை அழகுதான். கரீம் அதனையும் இரசித்தான்.

சாப்பிட்டுவிட்டு முஸ்லிம் நிகழ்ச்சி கேட்டார்கள். பின்னர் 'ஒளு' எடுத்துக் கொண்டு வந்து இருவருமாகச் சேர்ந்து இறைவனைத் தொழுது துஆ.... இறைஞ்சினார்கள். மார்க்க விடயத்திலும் கட்டுப்பாடான ஒழுக்கமாக வாழ்ந்து வரும் சந்தோஷமான சின்னஞ்சிறிய குடும்பம் அது.

படுக்கை தட்டி கட்டிலை ஒழுங்குபடுத்தினாள் பாத்தும்மா. இனியென்ன ஒரு நிமிடமேனும் அவனைப் பிரிந்திருப்பது அவளால் பொறுக்க முடியாதது. பகல் முழுக்க அவன் இல்லாமல் அவள் வாடுவது போதாதா? வெற்றுடல் மேனியனாய் சாரம் உடுத்திய அவனழகை, அவனின் நெஞ்சு உரோம ஸ்பரிஸத்தில் கண்மூடி இரசிப்ப தென்றால் அவளுக்கு எவ்வளவு இன்பம். எவ்வளவு ஆசை?

'பாத்தும்மா...என்ன தூக்கமா?"

"இல்லை."

"ஏதாவது பேசுவமா?"

"ம்"

"நாங்கள் கலியாணம் செய்து எத்தினை வருஷமாச்சு?"

"ஒண்ணேகால்" அரைக்கண் மூடி அவள் ஒவ்வொரு சொற்களாய் உதிர்த்துக் கொண்டிருந்தாள்.

"அப்போ, எனக்கு எப்ப ஒரு மகனைத் தரப் போகிறாய் கொஞ்சி விளையாடுறதுக்கு...?"

இன்று முழுக்கச் சொல்ல வேண்டுமென்றிருந்ததை இப்போது சொல்லி விட்டாள்,

"நான் இப்ப தலை முழுகாம இருக்கேன்."

"ஏய் எத்தினை நாளா?"

"இப்ப ஒரு ஆறு நாள்தான் அதுதான் இன்னும் ஒரு நாள் பொறுத்து சொல்லலாம் எண்டிருந்தேன்."

சந்தோஷ மிகுதியால் அப்படியே அவளை இறுக அணைத்தான். உணர்வுகளின் தூண்டுதலில் ஒரு மயக்க நாடகம் உன்னிப்பாய் அரங்கேறியது.

அவனை இறுக தன்னோடு சேர்த்து அணைத்துப் பிடித்தபடி முழுத் திருப்தியோடு சுகமாக கண்ணயர்ந்து போனாள் பாத்தும்மா.

□□□

நேரம் இரவு 12 மணி. நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்தது. எல்லோரும் தத்தமது வீடுகளை இறுக மூடிக்கொண்டு தூங்கிக்கொண்டிருந்தனர். மின்சாரமில்லாத பகுதி அது.

ஆங்காங்கே சில வீடுகளில் விடி விளக்கு எரிந்துகொண்டிருந்தது. மணிக்கூட்டின் ஓசை பாத்தும்மாவை அரட்டியது. அந்த அறையில் கரீமும் பாத்தும்மாவும் மட்டுமே படுத்திருந்தார்கள். அறையின் ஒரு ஓரத்தில் சிமினி லாம்பு ஒன்று அரை வெளிச்சத்தில் தொங்கிக்கொண்டிருந்தது. அரண்டு கண் விழித்த பாத்தும்மா கணவனைக் கட்டிக்கொண்டிருந்த கையை 'டக்'கென்று எடுத்தாள். அவளுக்கு உடல் முழுக்க திடீரென மின்சாரம் பாய்ந்த அதிர்ச்சி. மனதைத் திடப்படுத்திக்கொண்டு நன்றாகத் தொட்டுப்பார்த்தாள்.

## சிறுகதை

அவனின் உடல் ஐஸ் கட்டியாய் குளிர்ந்தது. கட்டிலில் இருந்து அலறியடித்துக் கொண்டு கீழே பாய்ந்தாள். 'இறைவா!' அவளுக்குப் பயத்தில் தலையே வெடித்து விடும்போல இருந்தது. உடலெல்லாம் வெலவெலத்து நடுங்கியது.

"எவ்வளவு நேரம் பிரேதத்தைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டு கிடந்தேனோ!" எண்ணிப் பார்க்கக்கூட அவள் அச்சப்பட்டாள். முழி வெளிப்பட அவன் பிரேதமாகக் கிடந்தான்.

அறையில் தொங்கும் அரிக்கன் லாம்பை எடுக்கப் பயந்தவளாய் வீட்டின் முற்றத்துக்கு வந்து ஒப்பாரி வைத்து அழுதாள். ஊரடங்குச் சட்டம். யாரும் ஏனென்று கேட்கப் பயப்பட்டார்கள். பாதை தாண்டிவர அஞ்சினார்கள். கொஞ்சம் தூரத்தில் இருக்கும் சலீம் நானா அழுகைச் சத்தம் கேட்டு அவசரமாய் பாதை கடந்து பாத்தும்மா வீட்டிற்கு வந்தார். வந்தவர் விஷயமறிந்து ஒப்பாரி வைக்கும் பாத்தும்மாவைச் சமாதானப்படுத்தினார். வீட்டுக்குள் போய்ப் பார்த்தார். கரீம் மையமாகக் கிடந்தான்.

"இப்ப ஒண்ணுமே செய்யேலாது சுபஹுலை பாப்பம். கொஞ்சம் அமைதியா இரு பாத்தும்மா"

நிலமையைச் சொன்னார் சலீம் நானா.

"என்னாலை முடியாது எனக்குப் பயமாய் இரிக்கு."

"அப்ப என்ன செய்யச் சொல்லுறாய் பாத்தும்மா?"

"மையித்தை வீட்டுக்கை வையாதேங்கோ! ஐயோ! ஏண்ட அல்லாஹ்! எனக்கு பயமாய் இரிக்கு!"

"மையித்தை எடுத்துக்கொண்டுபோய் மாட்டுக் கொட்டிலிலை வையுங்கோ!"

வீட்டிலிருந்து ஒரு நூறு அடி தூரமிருக்கும் மாட்டுக் காலையைக் காட்டி அழுதாள் பாத்தும்மா."

உலகமே இவ்வளவுதானா?

கொண்டையை இறுக்கிக் கட்டி முந்தானையைத் தளர்த்தி வெற்றிலையைக் குதப்பி இன்று மாலை கணவனுக்கென்று கைங்கரியம் செய்த பாத்தும்மா சொல்கிறாள்-

"மையித்தைக் கொண்டுபோய் மாட்டுக் கொட்டிலில் வையுங்கோ."

பகல் முழுக்க கணவனின் பிரிவு தாளாமல் எப்போது மாலை வரும்- அவனது மடியில் சாயலாம் என்று விரக தாபத்துடன் ஆசையோடு இருந்த பாத்தும்மா சொல் கிறாள்-

"மையித்தைக் கொண்டுபோய் மாட்டுக் கொட்டிலில் வையுங்கோ."

அவனே உயிர். அவனின்றேல் நானில்லை என்று அவன் மார்பில் முகம் புதைத்து இன்றிரவு "முழுகாமல் இருக்கிறேனே" என்று கிறக்கத்தில் சொன்ன பாத்தும்மா சொல்கிறாள்-

"மையித்தைக்கொண்டு போய் மாட்டுக் கொட்டிலில் வையுங்கோ"

அன்பு-பாசம்-பற்று-பரிவு- காதல் எண்ணிட முடியாத எல்லாமே மானிட வாழ்வின் அர்த்தமற்றதான ஏமாற்றங்களா? கானல் நீரான கசப்புக்களா?

மானிடனும் பொய். அவன் வாழும் சூழலின் அந்தரங்களும் பொய்யே.

கூடு விட்டு ஆவி போனால்....

# யார்?

**என். உதயகுமார்**

வெங்கடேஷால் முடியவில்லை...

வேலையில் முழுமனதோடு ஈடுபட அவனால் இயலாமலிருந்தது...

'சிந்தியா..சிந்தியா ஏன் இப்படிச் செய்கின்றாள்...?'

'சிந்தியாவா இப்படி நடந்து கொள்



கின்றாள்' என்று வெங்கடேஷால் நம்ப முடியவில்லை.

'என்ன குறைவைத்துவிட்டேன் அவளுக்கு..? அவள் கேட்டதையெல்லாம் முகம் சுளிக்காமல் வாங்கிக்கொடுக்க வில்லையா..? அல்லது சினிமா, பீச் என்றுதான் கூட்டிப்போகவில்லையா..? எல்லாம் செய்தும் இப்படிச் செய்ய அவளால் எப்படி முடிந்தது..? அந்தக் குரலுக்குச் சொந்தக்காரன் நிச்சயம் ஒரு ஆணாகத்தான் இருக்க வேண்டும். அந்தக் குரல் ஒரு வயதானவரதோ அல்லது சிறு பிள்ளையின் குரலாயோ இருக்கவே முடியாது.'

வெங்கடேஷிற்கு இன்னும் அவனது குரல் காதில் கேட்டுக்கொண்டேயிருந்தது.

"உன் வீட்டுக்காரர் எங்களுடைய இந்த உறவை அறிந்துகொண்டால் என்ன நடக்குமோ என்றுதான் பயமாயிருக்கு சிந்தியா." உரிமையுடன் அவளைப் பெயர் சொல்லி அழைத்த அந்தக் குரலைக் கேட்டதும் வேலைவிட்டு வந்த வெங்கடேஷை வாசலிலேயே நிற்க வைத்தது.

"நீங்க ஒன்றும் பயப்பிடாதீங்க. வெங்கட்டிடம் இருந்து இதை மறைப்பது என்னுடைய பொறுப்பு." இது சிந்தியாவின் குரல்.

அவளது வார்த்தைகள் வெங்கடேஷை நிலைகுலைய வைத்தன. 'எனக்குத் தெரியாமல் சிந்தியாவுக்கு அவனுடன் அப்படியென்ன இரகசியம்?' உள்ளே செல்ல நினைத்த அவன் மேலும் என்னதான் அவர்கள் பேசிக்கொள்கிறார்கள் என்பதை அறிய வாசலிலேயே நின்றுகொண்டான்.

"சரி... வெங்கட் வாற நேரமாகிறது. நீங்கள் போவதுதான் நல்லது. முன் வழியால் போகவேண்டாம் பின் வழியால் போங்கள்..'

அதன் பிறகு பின் கதவு திறபடும் சத்தம் மட்டும் கேட்டது.

வெங்கடேஷ் எதுவும் அறியாதவன்போல் கதவைத் தட்டினான். கதவைத் திறந்த சிந்தியாவின் முகத்தில் முத்து முத்தாய் மழைத்துளிகள்போல் வியர்வைத் துளிகள். 'தவறு ஒன்றுமே இல்லாவிட்டால் ஏன் அப்படி அவள் பதற்றமாய் நடந்து கொள்ள வேண்டும்? அவள் முகத்தில் பயத்தின் சாயல் தெரியவேண்டும்....? இரண்டு நாட்களுக்கு முன் என்னிடம் காசு வாங்கியது கூட இவனுக்குக் கொடுக்கத்தானோ...?

'அப்படியென்றால் எத்தனை நாட்களாய் இந்தத் தவறு நடக்கிறது...? விடக்கூடாது இனியும் இந்தத் தவறு நீடிக்க அனுமதிக்கக்கூடாது. கையும் மெய்யுமாய் அவர்களை இன்று பிடித்துவிட வேண்டும் எனக்குத் துரோகம் செய்ய உன்னால் எப்படி முடிந்ததென்று அவள் முகத்திலடித்தாற்போல் இரண்டு கேள்விகள் கேட்கவேண்டும்....

'என்னுடைய சிந்தியாவை என்னிடமிருந்து பிரித்த அந்தக் கயவனின் கழுத்தைப் பிடித்து....."

வெங்கடேஷிற்கு நினைக்கின்றபோதே கைகள் கோபத்தால் நடுங்கியது. மேலும் ஆபிஸில் இருக்க முடியாத வெங்கடேஷ் நேரத்தோடு வீட்டுக்குப் புறப்பட்டான்.

அவன் நினைத்தது போலவே இன்றும் அதே ஆண் குரல்...

"இன்னும் எத்தனை நாளைக்குத்தான் நானும் உன் வீட்டுக்காரருக்குத் தெரியாமல் வந்துபோய்க் கொண்டிருப்பது சிந்தியா?"

"அதுதான் எனக்கும் தெரியவில்லை. நேற்றுக்கூட என்னுடைய போக்கில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றத்தை அவர் கவனிக்க ஆரம்பித்துவிட்டார் போலிருந்தது. விரைவில் இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டும்... இனியும் உன்னைப் பிரிந்து என்னால் இருக்க முடியாது.."

வெங்கடேஷால் அதற்கு மேலும் பொறுமையாய் இருக்க முடியவில்லை. கதவை உதைத்துத் தள்ளிக்கொண்டு உள்ளே போனான்.

வெங்கடேஷின் திடீர் வரவு அவர்கள் இருவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்க வேண்டும். இருவர் முகத்திலும் ஈயாட வில்லை.

"இப்பவே நான் ஒரு முடிவு கட்டுறன் சிந்தியா..

இந்தத் துரோகியை இந்த நிமிஷமே நான்.." ஆக்ரோஷத்துடன் கூறியபடி வெங்கடேஷ் பாய்ந்து அவன் சேட் காலரில் பிடித்து இறுக்கிக்கொண்டான். வெங்கடேஷின் இந்தச் செய்கையை சற்றும் எதிர்பாராத சிந்தியா,

"தயவு செய்து அவரை விட்டிடுங்க வெங்கட் விட்டிடுங்க" என்று மன்றாடினாள்.

"ஓஹோ உன் கள்ளக் காதலனுக்காக பரிந்து பேசுகிறாயா?"

வெங்கடேஷின் இந்த வார்த்தைகளைக் கேட்ட சிந்தியா..

"ஐயோ கடவுளே என்ன வார்த்தை சொல்லிட்டிங்க..?" என்று தலையிலடித்துக் கொண்டாள்.

"இவரா என் காதலன் என் கூடப் பிறந்த சகோதரனா என் கள்ளக் காதலன்? கடவுளே இப்படி என்னைச் சந்தேகிக்க உங்களால் எப்படி முடிந்தது வெங்கட்."

"என்னது கூடப்பிறந்தவரா?" அதிர்ச்சியுற்றவனாய் கேட்டான் வெங்கடேஷ்.

"ஓம் என்னுடைய அண்ணன் சிவராமன் தான் இவர்."

"அப்படியொன்றால் திருமணத்தின் போது நீ ஒருத்தி மட்டும் தங்களுக்கு பிள்ளை என்று உன் பெற்றோர் கூறியது..?" அவனது பிடியை தளர்த்தியபடியே கேட்டான்.

"அதை நான் சொல்றன் வெங்கடேஷ்.

"சின்ன வயசிலேயே நான் வீட்டவர்களுடன் கோபித்துக்கொண்டு வீட்டை விட்டு ஓடிப்போய்விட்டேன். அந்த அவமானத்தில் அவர்கள் சிந்தியா மட்டும் தான் தங்களுக்கு ஒரே மகள் என்று உங்களிடம் பொய் சொல்லியிருக்கிறார்கள். எதேச்சையாக ஒருநாள் உங்களுடன் சிந்தியாவைப் பார்த்ததும் அடையாளம் தெரிந்துகொண்டு நீங்கள் இல்லாத சமயம் பார்த்து வந்து என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு..."

சிவராமன் கூறிக்கொண்டு போகையில், அவசரப்பட்டு தன் அன்பு மனைவியை சந்தேகப்பட்டுவிட்டதை எண்ணி வெட்கித் தலைகுனிந்து நின்றான் வெங்கடேஷ்.

# இலக்கிய நயம்



தருவது ரசிகன்

# பொருள் முடிய நூ விலகும்

திரைகடல் ஓடித் தேடிய திரவியம் சேர்த்துத் தந்த செல்வச் செழிப்பு அவன் உடல் மினுமினுப்பில் தெரிந்தது.

பருவமோ வாலிபம். உருவமோ கம்பீரம். செல்வச் செருக்கும், உடலிலே தினவும் கொண்டு கடற்கரை மணலிலே உலாவியவன் விழிகள் ஓரிடத்தில் பட்டபோது வேறிடம் நகராமல் நின்றுவிட்டன.

நீராடி முடித்து, கார் கூந்தல் தென்றலின் கரம் பட்டு அலைபோல அசைந்துகொள்ள, சதிராடும் விழிகள் எதிர்படும் காளைகளின் இதயங்களை புரட்டிவிட, இருப்பதோ கையளவு இதுதானோ மெல்லிடை என்பதின் மெய்யளவு என்றெண்ணவைக்கும் கனவிடை துவண்டசைய, மாராப்பு மறைவினிலே முயலிரண்டை மறைத் தெடுத்து மயிலிணையாள் செல்கிறாளோ என்று காண்போர் விழி மயங்கி வினாதொடுக்க, அந்த வினாக்குறிகளை மேலும் வளைப்பதாய் அவள் நடக்கும் போதினிலே இரு முயல்கள் கிடந்தசைய, துயில் மறைவில் இருந்தபடி தோகை யவளை தாங்கிநிற்கும் வாழைத்தொடை யிரண்டின் வளமை வாலிபர் மனதில் ஊகங்கள் தோற்றுவிக்க, செம்பஞ்சுக் குழம்பிலே அடிக்கடி தோய்த்தெடுத்து வணிகன்தான்.

ஆனால், எதிர்வந்த வனிதையாள், இனிய எழில், கள்வடியும் பருவ உடல் உருவத்தாள் மீது விழி பட்டவுடன் விலைகேட்கவா நினைத்தான்? இல்லை தன் நிலை கெட்டான்.

என் கண்காணும் இவள் சிலையோ-சித்திரமோ. உயிர் பெண்தான் என்பது நிச்சயமோ? ஊனாய் தேன் கொடுத்து, சந்தனமும், ஜவ்வாதும், பொன்னும், முத்தும், பூவும் மற்றும் பூவுலக இனிமைகள் அத்தனையும் சேர்த்து குழைத்தெடுத்து உருவாய் அமைத்துவிட்ட உலவும் மாயக்காரிகையோ? கார்வண்ணனைக் கண்டபின்னாலே இதயம்



சிவந்துவிட்ட பாதங்கள் மணல்மீது நோகாமல் பட்டதனால், நடந்த தடம் தெரியாமல், எதிரேவரும் வணிகன் அவன் எண்ணத்தை கடும்பிடி யாய் கவர்ந்தெடுத்த படி நிலவொத்த வடிவழகி, இடியின்றிப் பெய்யும் மழை போல, மௌனமாய் அசைந்துவரும் பாங்கினிலே, வணிகன் மனம் முற்றாக நனைந்துவிடும் வண்ண மாக அழகு மழை பொழிந்தாள்.

வைரமோ-வைடூரியமோ, முத்தோ-பவழமோ எப்படித்தான் ஜொலித்திட்டாலும், விழியைப் பறித்திட்டாலும் தரம் அறிந்து விலை என்ன என்று கேட்டு, சொன்னவிலை கொடுக்காமல் சொல்லாடி பேரம் பேசி, பிடிப்பில்லாதது போல் நடித்து விலை படிந்துவரும்வரை விட்டுப்பிடித்து பொருள்வாங்கிவரும் இருக்குமோ பத்திரமாய்? வேண்டும் எனக்கிந்த எழில், சிங்கார வண்ணமயில்! வேண்டும்-வேண்டும் சத்தியமாய்!!

நினைத்தபடி, விழியசைக்கும்படி மனது சொன்ன கட்டளையை மறந்தபடி அவன் நின்ற கோலத்தின் குறிப்பறிந்து, பொறி விழிக்காரியவள் வைத்தாள் குறி.

அவள் வைத்த குறியில் உருகிய நெய்யாய் மாறியது அவனது மெய்.

இதழ் திறந்து பேசவில்லைத்தான். நயனவிழிப் பாஷைபோதும்தான்.

இன்பக் கேணியில் வீழ்ந்தான் காளை. நயனவிழியால் அவன் இதயத்தைக் கௌவிக்கொண்டு சிலம்பொலிக்க, பின்னழகு இரு குடமென அசைய அவனுக்குள் ஆசை சங்கொலிக்க அவள் நடந்து போக, இரு புரவியிழுத்துச் செல்ல உருண்டோடும் வண்டிபோல அவன் போனான் அவள் பின்னால்.

பின்னெழில்கள் அசைய நடந்த தையல், தரித்து நின்றாள் ஒரு குடிலின் முன்னால்.

சங்குக் கழுத்தசைத்து, புருவ வில்லில் விழி அம்பு தொடுத்து, காளையவளை நோக்கி தையல் அவள் இதழ்குவித்து செய்திட்ட சைகை ஒன்று போதும் காளை வணிகனவன் தன் சொத்தனைத்தும் அவள் காலடியில் கொட்டுவதற்கு!

சித்தம் தடுமாறி, அறிவு மொத்தமும் மன்மதன் வசமாகி, சுற்றம் வெறுப்பினும் சுந்தரியிவளே இனி என் சொத்துக்கதிபதி என்று மனம் ஒப்பி நின்றான் காளை.

இதழ்மீது நுனிநாவால் வருடித்தான் பின்னர் ஈரம்பட்ட வார்த்தைகளை தருவித்தாள்.

"வாருங்களேன் உள்ளே"

கொஞ்சும் கிளிக்குரலோ, கோல இதழ் மொழியோ, நானிலம் எங்கும்யான் சுற்றிவந்த போதும்செவியறியா இனிமையிந்த குரலடியோ என்றெண்ணிக் கொண்டே,

"வரத்தானே வந்தேன். உன் அழைப்புத் தான் என் செவிக்கு செந்தேன்."

என்றான். உயிர் நழுவும் ஒரு புன்னகையை உதிர்த்துவிட்டு அவள் போனாள் உள்ளே. அவனும் போனான் பின்னே.

பிறகென்ன பேசினார்கள். பேச்சினூடே அவன் சொத்தின் மதிப்பறிந்தாள் மதியுள்ள மோகவிழியாள்.

"நூலும் மணியும் போல, பூவும் வாசமும் போல, நிலவும் அழகும் போல, வானும் வாமுலகும் போல இணைந்தே நாம் இருப்போம் கேள்."

என்றுரைத்தாள் வாயிதழ் பானம் அவ்ன் பருகக் கொடுத்தபடி.

மத மார்பில் சந்தனமும், இதழூறும் மதுரசமும் இது போதும் எந்தனுக்கு என்று சொல்லி அவன் வந்தான் அவள் நாடி தினம் தோறும்!

புரியாத இன்பக் கதை, தெரியாத இனிய கலை அத்தனையும் அவள் விரல் நுனியில் இருந்தமையால், தேனூறும் பலாச்சுளையாக அவன் மாறி தேடிவந்த செல்வமத்தனையும் கொட்டி விட்டான். அவளோ குவித்து வைத்தாள்.

திரட்டிவைத்த சொத்து அள்ள அள்ளக் குறையாத அமுத சுரபியல்ல. உழைத்தால்தான் மீண்டும் வரும். அவன் உழைப்போ இப்போது வேறு விதம். எப்படிவரும் சொத்து? களஞ்சியமோ காலி.

வெறுங்கையுடனே அன்று வந்தான் இப்போது சொத்தில்லாத அந்தப் பாவி.

குடில் உள்ளே இரு குரல்கள். தயங்கிநின்று செவி எறிந்தான்)

ஒரு குரல் அவன் செவியறிந்த குரல். மறுகுரலோ புதிய குரல். இன்னொருவன் குரல்.

திகைத்துப்போனான். உள்ளே அவள் நகைப்பது செவியில் தேளாகக் கொட்டி வதைத்தது.

செந்தேன் என்று வியந்த குரல் உள்ளே வேறு எவனுடனோ சரசம் புரியும் நிலை அறிந்தான். அறிவின்றிப் போனோமே இவள் குணமறிய என்று சோகத்தில் நனைந்தான்.

பொறுக்கவில்லை மனம். குடில் கதவு தட்ட, உள்ளே இரு உடல் அசைந்த சத்தம். பின் திறந்த கதவு வழியே துயில் கலைந்திருந்த அவள் தோற்றம்.

"எடி ... பாவி இது என்ன?"

என்றான்.

"உஷ் பாவியல்ல. நான் பரத்தை. காலி மடி உந்தனது. இனி உன்னால் கூலி தர முடியாது எந்தனுக்கு"

"பணம்தானோ பெரிதுனக்கு?"

"மனம்தான் பெரிதென்று எனக்குப்பட்டால் நான் பொதுமகளாய், பொன்னுக்கும் பொரு ளுக்கும் தேகம்தரும் விலைமகளாய் ஏன் மாறிப்போக வேண்டும்?"

அலட்சியமாய் அவள் கேட்க, பைத்தியமாய் போனான் காளை.

"துரோகியடி நீ எனக்கு. நின்றெரியும் விளக்கின் ஒளி நெய் முடிய தான் அழியும். கையில் உள்ள பொன் முடிய உன் போன்ற பொது மகளிர் அன்பழியும் அறிந்தேனடி. செந்தேளே! சிற்றின்ப வலை விரிக்கும் கொடும் பேயே வேண்டுமடி இது எனக்கு"

அவள் நகைத்தாள். நாகம்ஒன்று மூச்சுவிடும் ஓசைபோல அவன் உணர்ந் தான். வந்த வழி திரும்பி நொந்த மனம் துணையாக நடந்தான்.

இதனைத்தான்- விலைமகளிர் உறவு தொடராது என்ற நிலையைத்தான் குன்றிலிட்ட விளக்காக நாலடியார் என்னும் கடைச்சங்க நூலில் ஒரு வெண்பா விளக்குகிறது.

**"விளக்கொளியும் வேசையர் நட்பும் இரண்டும் துளக்கற நாடின் வேறல்ல-விளக்கொளியும் நெய்யற்ற கண்ணே அறுமே அவர் அன்பும் கையற்ற கண்ணே அறும்.**

அதிகாரம்-38, வெண்பா-371.

திருவள்ளுவரும் இதைத்தான் தன் குறளில் சொல்லுகிறார்.

**அன்பின் விழையார் பொருள் விழையும் ஆய் தொடியார்**
**இன் சொல் இழுக்குத் தரும்"**

அதிகாரம்-92, குறள்-911.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-72

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | ■ | 2 | 3 |
| 4 | | ■ | 5 | | | |
| | ■ | 6 | | ■ | | |
| 7 | 8 | | ■ | 9 | ■ | |
| | | ■ | 10 | | | |
| ■ | 11 | | | | ■ | ■ |
| 12 | | | | ■ | 13 | |

### இடமிருந்து வலம்

1. அரச சபைகளில் இவருக்கும் பொற்கிழி வழங்கப்படும்.
4. இது உண்ணாமையைத் திருக் குறள் வலியுறுத்துகிறது.
5. இதன் அழகிற்கு அகம் அழகாக இருப்பதும் முக்கியம் என்றும் கூறுகிறார்கள்.
6. தலைமுடியில் இதுவாழும்.
7. பிரபலமான இளவரசி.
10. இதனைச் சாதகமாக மாற்றுவதற்கு புத்திசாலிகள் முயல்வர்.
11. இவை இரண்டை சமீபத்தில் புலிகள் தாக்கி இருந்தார்கள்.
12. இவர் அம்பிகாபதிக்குத் தந்தை.
13. இதுவும் ஒரு பானம்தான்.

### மேலிருந்து கீழ்

1. நம்மவர்களால் வெளிநாடுகளில் அடிக்கடி கோரப்படுவது.
2. பலசாலிக்கு உதாரணமாகச் சொல்ல லாம்.
3. பகட்டிற்கு ஒத்த கருத்தாக அமைவது.
8. இரத்தலும் ஒன்றுதல் இதுவும் ஒன்றுதான்.
9. வாழ்க்கையில் இதுவும் ஒரு நிகழ்வு.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 29.10.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-72
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-70க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 வா | ன | 2 வி | ல் | ■ | 3 நா | 4 சி |
| ர | ■ | ல் | ■ | 5 கோ | டா | ரி |
| ம் | 6 எ | லு | ம் | பு | ■ | அ |
| ■ | 7 து | ப் | பு | ர | வு | ■ |
| 8 தொ | ■ | 9 பா | ர | ம் | ■ | 10 து |
| ப் | ■ | ட் | ■ | ■ | 11 ம | கி |
| 12 பி | ட் | டு | ■ | 13 அ | ணி | ல் |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.70இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. எஸ்.செல்வநாதன் கொழும்பு-14.
2. திருமதி.பர்ஸானா பாகிம் வாழைச்சேனை.
3. கே.அம்பிகா மூதூர்.
4. நளீர் முகம்மட் கம்பளை.
5. திருமதி.ஆர்.நிர்மலாதேவி நுவரெலியா.
6. செல்வி.நஸ்ரின் ஸதார் பேராதெனிய.
7. ஏ.மாஹிர் வவுனியா.
8. செல்வி. தயாநிதி அப்புத்தளை.
9. எம்.கீர்த்திகா உக்குவளை.
10. டி.லக்ஷ்மி கண்டி.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

காதல் மணவறையில் முடிவது நல்லதா? கல்லறையில் முடிவுது நல்லதா?

எச்.எம்.மஸ்னவி-புத்தளம்.

மணவறையில் முடிந்தால் அது கல்யாணம். கல்லறையில் முடிந்தால் அது காவியம்.

□□

கண்டவுடன் காதல்- விளக்கம் கூறமுடியுமா?

குலே.கேதீஸ்-ஹட்டன்.

ரொம்ப ரொம்ப கஷ்டம். ஏன் என்றால் அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் என்ற காதல் சம்பவம் இடம்பெறும் இராமாயணம் நான் படிக்கவில்லை.

□□

இந்தி நடிகை மாதுரி டிக்ஷித் தமிழ் படங்களில் நடித்திருக்கிறாரா? அவை எவை?

பெயர்-முகவரி-எவையும காணப்படவில்லை.

முகவரியோ பெயரோ இல்லாத உங்கள் தபாலட்டைபோலவே தமிழ்ப் படங்களில் நடித்தவர்கள் பட்டியலில் அவர் பெயர், விபரம் கிடையாது.

□□

பிரதமர் சந்திரிக்காவிடம் உங்களை கவர்ந்த சிறப்பம்சம் எது?

ஜனனி மதுரலிங்கம்-கொட்டாஞ்சேனை.

ஐஸ் வைக்கும் போட்டியில் என்னையும் இழுத்துவிடப்பார்க்கிறீர்கள். சிந்தியாவா கொக்கா? ஹி...ஹி...ஹி........

□□

நான் பெண்களை நம்புவது இல்லை. நீங்கள் எப்படி?

பி.பிரபாகரன்-மாத்தளை.

இந்தப் பெயரில் இருந்து இப்படி ஒரு கேள்வி கேட்கலாமா நீங்கள்? அவர் நம்பித்தானே அனுப்பிக்கொண்டிருக்கிறார்.

□□

மறைந்த பிரபல நகைச்சுவை நடிகர் தங்கவேலு பற்றிக் கூறுங்களேன்?

கே.லிங்கேஸ்வரன்-பெரியநிலாவணை-01.

'நீங்கள் எந்த மன்னார் அன்ட் கம்பனியைச் சொல்லுகிறீர்கள்?' அது போதும் இப்போது சிரிக்க.

**ஜனாதிபதியின் எதிர்காலத்திட்டம் என்ன?**



பிரதமர்-பிரபா பேச்சு நடக்குமா?

சா.விநோதன்-குருநாகல்.

விரைவில் சந்திப்பேன் என்று சொல்லியுள்ளார் பிரதமர். விரைவில் என்பது ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பானதாக இருக்காது.

□□

காமினி அதிகாரத்தைப் பிடிப்பாரா?

ஏ.நளாமினி-மாத்தளை.

......பார்தான்-ஆனால் தற்போதல்ல.

□□

வடக்கே-அதாவது புலிகளின் ஆதிக்கம் உள்ள இடங்களில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று நம்பலாமா?

சே.ரங்கநாதன்-கொழும்பு-8.

.....லாம்தான். ஆனால் தமிழீழ காவல் துறையை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டுமே?

□□

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, திருமதி சந்திரிக்கா குமாரதுங்க இருவரையும் வேறுபடுத்தும் ஒரு அம்சம் என்ன?

மா.மொஹம்ட்-புத்தளம்.

முன்னவரால் பிரதமராக மட்டுமே இருக்க முடிந்தது. (தீர்க்கதரிசன வேறுபாடாக்கும் இது)

□□

ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் எதிர்காலத்திட்டம் என்னவாக இருக்கும்?

ஆர்.உதயகுமார்-கண்டி.

அட்டகாசமான ஓய்வு. உங்கள் கேள்வியின் பயனாக சமீபகாலமாக பத்திரிகைகளில் காணமுடியாமல் போன அவர் படம் பிரசுரமாகிறது.

□□

புதைகுழிகள் தோண்டப்படுவது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

வி.ஜமீல்-மன்னார்.

அரசியல்!

□□

அடுத்த ஆண்டிலும் அமரர் பிரேமதாசாவின் நினைவு தினம் கொண்டாடப் படுமா?

ஏ.எல்.முகமட் சதாத்-மண்முனை.

.........படவேண்டும் என்ற நிலையினை ஐ.தே.கட்சி பட்டறிந்து கொண்டுள்ளது.

□□

ஹீரோ படம் எப்படி?

செ.யோகேஸ்-நீர்கொழும்பு.

'கல்நாயக்' பார்த்துவிட்டு பார்க்கும் போது சுள் என்றும் இல்லை. சுறுசுறுவும் இதில் இல்லை.

இவ்வாரம் (23.10.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

# மகாபாரதம்

அங்கம் 51

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

**காலத்தின் குரல்:** தன் தவறை மறைப்பதற்கு தலைவிதியைக் கேடையமாய் தயங்காமல் தாங்கி நிற்கும் விந்தையானவன் மனிதன். தனக்குத் தோதானவற்றைத் தயக்கமின்றிக் கேட்பான். தனக்காகாதத்தனையும் தெய்வத்தின் செயலென்று தப்பித்துக் கொள்ளுகிறான். தன் செயல்களத்தனைக்கும் தலைவிதியைத் தானிழுத்தால் தீமைக்கும் நன்மைக்கும் பேதமேதும் காணலாமோ? நாச இருள் நரகிற்கும் தூய சொர்க்க வாழ்வுக்கும் சொற்பேதம் தானுண்டோ? தன்னலப் பேராசையினால் திருதராட்டிரன் தரும நெறிகளையே துறந்து விட்டான்.வேத முதல் ஆய்ந்தறிந்த வேத வியாசர் உரையும் வேதனையைத் தரவில்லை வேந்தனவன் வேட்கையதால்.

-காட்சி தொடக்கம்-

திருதராட்டிரர் அரண்மனை- வேத வியாச மாமுனிவர் வந்துள்ளார்.

**திருத:** தங்கள் பாத நிழலிலெந்தன் தலை வைக்கும் பெரும் பேறு பெற்றமையால் பெருமை பெற்றேன்.

**வியாச:** வார்த்தை ஜாலத்தால் என்னை வஞ்சிக்க எண்ணாதே! அரியணையில் நீயிருக்க அன்புத் தம்பி பிள்ளைகளை அவமானம் அணைத்ததன்றோ? அரசுரிமை அத்தனையும் அபகரிக்கப் பட்டதுவும் அநீதி விளைந்ததுவும் உன் கண்முன் தானன்றோ? இத்தனை கொடுமைக்கும் நீதானே தனிப் பொறுப்பு!

**திருத:** அவ்வாறு கூறி எனை அவதிக்குள்ளாக்காதீர்!

**வியாச:** உண்மையைத்தான் உரைக்கின்றேன். பதின்மூன்று ஆண்டுகள் பறந்தோடிப் போனபின்னர் என்ன செய்யப் போகின்றீர்? பாண்டவர்கள் பட்ட துயர் பதின்மூன்று ஆண்டுகளில் மறந்து போகும் நிலையிலில்லை.

**திருத:** துரியோதனன் எதையும் கேட்டு நடப்பதில்லை!

**வியா:** குடிமகன் ஒருவன் குற்றமிழைத்து விட்டால் தண்டனை வழங்காமல் விட்டு விடுவீரோ!அரச நீதி முன்னால் அப்பனென்றும் மகனென்றும் பேதமேதும் கிடையாது. அரச செங்கோல் உமது கையில்! கவுரவரின் மூத்தவரே கங்கா புத்திரராவார். அரசியலதன் மீதும் அரியணையின் மீதும் ஆதிக்கம் செலுத்துதற்கு துரியனுக்கு உரிமையில்லை. புரியவைப்பதுன் கடமை. பாண்டவர்தனை மீண்டும் பதியினுக்கே அழைத்து வந்து அமைதிக்கு அடிகோலும். அடி பணிய மறுத்தால் மகனென்றும் பாராமல் தண்டிப்பது உந்தன் தலையாய கடமை! எச்சரிக்கை இதனை ஏற்க மறுத்தால் இந்த நாடும் நலமிழந்து நாசமாவது திண்ணம்!

-காட்சி மாற்றம்-

துரியோதனன் அரண்மனைக்கு சகுனி வருகிறான்.

**துரி:** அஞ்ஞாத வாசமதில் பாண்டவர் இருக்கையில் என் ஒற்றர்களின்மூலம் அடையாளம் கண்டிடுவேன். அதுவே எனது அரும் திட்டம் மாமா! (சகுனி பெருமூச்செறிகிறான்.)

**கர்ண:** ஆழ்ந்த பெருமூச்சின் அர்த்தம் என்ன மாமா!

**சகுனி:** மன்னவரின் நிம்மதியை மாய்த்து விட்டார் வியாச முனி!

**துரி:** போதனை செய்வதன்றி வேறறிய முடியாத வேத முனிவர்களை விரட்டி விட வேண்டும்!

**சகுனி:** முட்டாள் தனமாக வார்த்தைகளை வீசாதே! போதிப்பது அவர் வேலை! அதன்படி தான் நாம் நடக்கும் கட்டாயம் ஏதுமில்லை! கண்டிப்பும் கிடையாது.

**துரி:** அப்பாவிடம் என்ன அவர் உரைத்துப் போனாராம்..?

**சகுனி:** உண்மைதனை உரைத்தால் உன் கதத்தினால் அந்த வியாச முனிவரையே தாக்கிடவே முயல்வாய்! சுருக்கமாய்ச் சொல்லுகிறேன்- வியாச முனிவரும் அந்தப் பாண்டவரின் சார்பாளர்! பாண்டவரை அழைத்து பகை மறக்க வகை செய்தால் பேரழிவு வாராமல் தடுத்திடலாம் என்றுந்தன் தந்தையிடம் கூறியதால் தடுமாறி நிற்கின்றார்!

**கர்ண:** யாருக்குப் பேரழிவு?

**சகுனி:** துரியனுக்கும் நமக்கும் அரிய திருநாடாம் அஸ்தினாபுரிக்கும் அழி வென்றுரைத்துள்ளார்! அதனாலுன் அப்பன் ஆடிப்போயுள்ளார்.

**கர்ண:** அருமை நண்பா துரியோதனா! வியாசர் கூறியவற்றால் விசனப்பட வேண்டாம். வீரத்தின் இருப்பிடம் நீ! வீண் கலக்கம் விட்டுவிடு! வியாச முனி போட்ட கணக்கில் பிசகுண்டு. பேரழிவு எமக்கில்லை! பாண்டவரே பொலிவிழந்தார். பாஞ்சாலி உன் மதிப்பை உணராது இழிவு செய்த மாய மாளிகை எங்கே? இந்திரப் பிரஸ்தம் என்று இறுமாப்புடன் திகழ்ந்த எழில் மாளிகை எங்கே? மாமன்னன் தானென்று மமதையுடன் தருமன் தலையிருந்த மகுட மெங்கே? வில்லுக்கு விஜயன் என்ற விழுப்பேரைத் தோற்றுவித்த காண்டீப வில்லெங்கே? பீமசேனன் வீர மெங்கே? புகெழங்கே... பெருமை எங்கே? பேரழிவு உனக்கில்லை அன்னவர்க்கே அத்தனையும். கானகத்திலே அலையும் குறவர் அவர் நினைவை கணக்கி லெடுக்காதே! நல்ல காற்று வேண்டுமா? உனக்கு நான் அளித்திடுவேன். தீயினை அழைத்தே உன் ஏவலினை ஏற்றொழுக கூவி அழைத்திடவா? என் அம்புகளை ஏவி இயற்கையினை அடிமை கொள் வேன். இத்தனையும் உன் அன்புச் சொத்துக்கு ஈடாக்கும் சித்தமுடன் நானுந்தன் சேவைக்கு அர்ப்பணிப்பேன்!

**சகுனி:** வாய்ப்பந்தல் வீச்செதற்கு? அங்கத்துக் கதிபதியே! அத்தனையும் விட்டுவிட்டு ஆரணியம் செல்லுங்கள். உண்பதற்கு நல்ல உணவு கிடையாமல் உறங்குதற்கும் உரிய உறைவிடமதும் இன்றி அலைந்து திரிகின்ற அவர்களுக்கு அண்மை சென்று சிந்தையைக் குழப்புங்கள்! சினம் கொள்ள வைத்து சீண்டி விட்டே இருங்கள். தன்மானந்தனை இழந்து தவிக்கட்டும் அவர்கள்.

**துரி:** பிதாமகரை நினைத்தால்..!

**சகுனி:** கங்கை மைந்தரைப் பற்றி கவலை கொள்ள வேண்டாம் நீ! அஸ்தினாபுரி அரியணையின் காலில் அகப்பட்டு அடங்கிவிடும் அவர் சீற்றம்!

-காட்சி மாற்றம்-

பீஷ்மரின் அரண்மனை- கிருபாச்சாரியார் வருகை.

**பீஷ்ம:** வாருங்கள் குலகுருவே! வணக்கத்தை ஏற்றிடுங்கள். அர்த்த ராத்திரி வேளையிலே வரவுக்கு அவசரமேன்?

**கிருபா:** அஸ்தினாபுர நாட்டின் ஆணைக்குட்பட்டு உயிருக்கும் மேலாக நேசிப்போர் என்றுமினி நிம்மதிதன்னுடனே உறங்கத்தான் வழியுண்டோ? ஆட்சிக்குக் கட்டுண்டு சிறைப்பட்டு விட்டோம் நாம். எதிர்காலம் என்றும் இருள் சூழ்ந்தே இருப்பதனால் அச்சமது மேலிட்டு அவதியுறுகின்றோம்!

**பீஷ்ம:** அச்சம் எதற்காக அறியலாமோ குருவே?

**கிருபா:** துரோணருக்கும் துன்பம். தூய நெறியாளர் தங்களுக்கும் பெருந்துயரம்! துரியோதனன் அவனின் விபரீதப் போக்குகளால் நாம் அனைவருமே இன்று நலமிழந்தோராகிவிட்டோம். பாண்டவரின் பதவிகளைப் பறித்துவிட்ட போதும் அவன் பேராசை விடவில்லை. கானகத்துக்கே ஏகி கெடுதிகளை ஏவி கேவலப்படுத்தவும் துணிந்துவிட்டான் அப்பாவி!

**பீஷ்ம:** என்ன நடந்துளது? விபரமாகக் கூறுங்கள்!

**கிருபா:** வேட்டைக்குச் சென்றுவர வீணான திட்டமிட்டு பாண்டவரின் நிலையருகே பாடி அமைத்துள்ளான். பாண்டவரை எப்படியும் பலவகையிலே மடக்கி வம்புச் சண்டைக்கிழுக்க வழிவகைகள் செய்துள்ளான். மூத்தவன் தருமனும் மூன்றாமவன் பார்த்தனும் பொறுமையினைக் கடைப்பிடிப்பர். பீமனைப் பற்றித்தான் விசனப்படுகின்றேன். இழிவு படுத்துவதை இம்மியேனும் சகியான். விபரீத விளைவுகள் நேர்ந்தாலும் நேரலாம்!

-காட்சி மாற்றம்-

கானகம்-பாண்டவர்கள் பல்வேறு பணிகளில் ஈடுபட்டுள்ளனர். அர்ச்சுனன் வாளினைத் தீட்டிக்கொண்டிருக்கும் போது விறகு சுமந்தவண்ணம் பீமன் கோபமாக வருகிறான்.

**அர்ச்:** பீமண்ணா! தங்கள் முகம் விறைத்துப் போய் தோன்றுவதேன்?

**பீமன்:** சூதாட்ட மண்டபத்தில் அண்ணனின் ஆணையினை அன்றே நான் மீறி அவன் துரியோதனன் தொடையை துண்டாடி விட்டிருந்தால் தொடர்ந்து வரும் துன்பம் அன்றே தொலைந்திருக்கும்.

**அர்ச்:** அப்போ அவர்கள் வந்திருப்பதை நீயும் அறிந்து வந்து விட்டீரோ?

**பீமன்:** கொட்டமடிக்கும் அந்தக் கூட்டத்தை நான் கண்டேன். கெட்ட வாடை தனைப் பிரப்பி கேடு செய்ய முனைகின்றார். மா பெரிய விருந்து வைத்து எம்மை மயக்கிவிட முனைகின்றார். வனவாசத்தின் போதும் எமை அமைதிகொள்ள விடமாட்டார்.

**யுதிஷ்:** அருமைத் தம்பிக்கு அவர்கள்மீது பொறாமை அதிகரித்துவிட்டதுவோ?

**அர்ச்:** பொறாமை இல்லை அண்ணா! பெரியப்பா பிள்ளைகள்தான்! ஆனால், துரியோதனனின் செயல்கள் தூய்மையானவையல்ல. பதின்மூன்று ஆண்டுகள் பறந்தபின்னர் எங்கள் பங்கினைப் பகிர்ந்தளிக்க பருவகாலம் வரும் என்ற உண்மைதனை எண்ணிடவும் ஏனோ மறந்துவிட்டான்.

**யுதிஷ்:** பதட்டமேனோ தம்பி? பதின்மூன்று ஆண்டுகளும் கடந்த பின்னே எமது உடமைகளை தம்பி உவந்தே எமக்களிப்பான்.

**பீமன்:** துரியோதனன் தன்னை இன்னும் தப்புக் கணக்கிடவே துணிந்திடவும் வேண்டாம். எமக்குரிய உணவுதனை அவன் வாயிலிட்டி டுவான். அபகரித்தத்தனையும் அமர் புரிந்தே பெறவேண்டும். பெரு மரத்தைப் பிடுங்கி அவர் பாடி வீட்டினிலே எறிந்து பதைபதைக்கச் செய்திடுவேன்!

**யுதிஷ்:** காலத்தை மரமாகக் கணித்துவிடலாகாது. காத்திருப்போம் காலம் கனிந்து வரும்- கவலை விடு.

-காட்சி மாற்றம்-

துரியோதனனின் பாடி.

**கர்ண:** நண்பா துரியோதனா! அந்த நாடோடிகள் இப்போ என்ன பணி புரிவார்கள்?

**துச்சா:** அர்ச்சுனன் அடர் வனத்தில் அலைந்து கொண்டே இருப்பான்!

**துரி:** பீமன் புற்கட்டினைச் சுமப்பான்!

**கர்ண:** தர்மராஜன் யுதிஷ்டிரன் தனிமையிலிருந்த வண்ணம் கவலைதனை அணைத்திருப்பான்.

**துச்:** தீயில் அவதரித்த திரௌபதியாள் இப்போ தீ மூட்ட முடியாமல் திணறிக் கொண்டே இருப்பாள்!

**துரி:** துச்சாதனா தம்பி! உணவின் எச்சமெல்லாம் என்ன செய்தாய்? மிச்சப் பருக்கையெல்லாம் பாண்டவரின் பாடியிலே கொண்டுபோடச் சொன்னேனே?

**துச்:** பொறுத்திருங்கள் அண்ணா! நமது நாய்கள் உண்டு முடியட்டும் பார்க்கலாம்!

-காட்சி மாற்றம்-

கானகத்தில் கந்தர்வ இளவரசி விறகு சுமந்து வருவதைக் கண்ட துரியோதனன் அவளை தன்னுடன் தன் பாடிக்கு வருமாறு அழைக்கிறான். அவள் கோபத்துடன் கந்தர்வர்களிடம் சென்று முறையிடுகிறாள்.

□□□

கந்தர்வ இளவரசன் அவர்கள் குலத் தலைவருடன் உரையாடிக்கொண்டிருக்கையில் இளவரசி அழுதுகொண்டே வருகிறாள். துரியோதனன் தன்னை கெட்ட நோக்குடன் அழைத்ததைச் சொல்லி அழுகிறாள்.

□□□

துரியோதனன் விடுதி- விருந்துண்டபின்னர் ஆடிப்பாடி அனைவரும் மகிழ்ந்திருக்கும் வேளையில் கந்தர்வரின் படைகள் சுற்றி வளைத்துத் தாக்குகின்றனர். கவுரவ வீரர்கள் பலர் கொல்லப்படுகின்றனர். துரியோதனன் கைது செய்யப்படுகின்றான். கர்ணனும் துச்சாதனனும் தப்பிச் செல்கின்றனர். பலர் பாண்டவர்களை நாடிச் செல்கின்றனர். கர்ணன் மதுமயக்கம் தெளிய தன் முகத்தில் தண்ணீர் அள்ளித் தெளிக்கிறான்.

-காட்சி மாற்றம்-

பாண்டவர்களின் பாடி- துரியோதனனின் மெய்க் காவலன் வருகிறான்.

**மெ.கா:** வணக்கம் மகாராஜா! இளவரசர் துரியரை கர்தர்வப் படைகள் கைது செய்து சென்றுள்ளார். காப்பாற்ற வேண்டியது தங்கள் உயர் கடமை!

**யுதிஷ்:** என்ன? அஸ்தினாபுரி எல்லைக்குள் அத்தனையும் நடந்தனவா? அர்ச்சுனா! அருமை தம்பி பீமா! உடனடியாகச் சென்று உதவி புரிந்திடுங்கள்.

**பீமன்:** எனக்கு வேறு வேலை உண்டு!

**அர்ச்:** துரியனுக்கு நாமேன் துணை போக வேண்டும்? கந்தர்வரைப் பகைக்க காரணங்கள் யாதுமுண்டோ?

**யுதிஷ்:** அவர்களுடன் அமர் புரிய அனுப்பவில்லை இப்போது. தம்பி துரியனுக்கு துன்பம் வந்ததனால் துணைபுரியத்தான் சொன்னேன்.

**பீமன்:** துரியனவன் தம்பி என்று தானுரைக்கத் துணிந்தீர்கள்! சொந்தம் என்று பார்த்தானா சூதாடும் மேடைதனில்? சொத்தெல்லாம் தான் எடுத்தான்.. திரௌபதியாளின் மானம் துச்சமெனத்தான் மதித்தான். அண்ணன் தம்பி என்ற அவன் உறவு ஆகாதே!

**யுதிஷ்:** துன்பம் வரும்போது துயர்துடைக்கத் துணிவதுதான் தூய்மையான பண்பு. தம்பிக்கு உதவாது தவித்திடவே விட்டு விட்டால் பெரியப்பா, பெரியம்மா முகம் பார்க்க முடிந்திடுமா? நமக்கிடையில் வேற்றுமைகள் நம்மோடு இருக்கட்டும். வேறொருவர் தீங்கிழைக்க விட்டுவிடலாகாது. நானே போகின்றேன் உங்கள் பணி பாருங்கள்!

□□□

கர்ணன் மது மயக்கம் தெளிந்து வில்லம்புடன் விரைகின்றான்.

□□□

கந்தர்வரின் விடுதி.

**கந்.தலைவன்:** பெருமை மிகு நாட்டின் பேரரசுக்குரியவன் நீ! பெண்ணை இழிவாக்கி பெரும் பழிதனைப் புரிந்தாய்! மனித சமூகத்தின் மாண்பினையே சிதைத்துவிட்டாய். துரியோதனா! அன்று நீ திரௌபதிக்கே துயரிழைத்தாய்! இங்குள்ள பெண்களெல்லாம் இழி பொருளாய் எண்ணாதே!

**துரி:** உம்..!

**கந்.தலை:** பாண்டவர்கள் வீரத்தில், விவேகத்தில் சிறந்தவர்கள். பீஷ்மரும் துரோணரும் கிருபரும் அப்படியே! அவமதிப்பை அவர்கள் அர்ப்பமாக எண்ணிடலாம். ஆத்ம சுத்தி படைத்த அமரர் நிகரானவர்கள்... நாங்களோ சாமானியர். எங்களால் அவமதிப்பை ஏற்க முடியாது. நீ புரிந்த குற்றமதை மறுத்துரைக்க விருப்பமுண்டா?

**துரி:** அடங்கியிருங்களடா அர்ப்பர்களே இப்போது! தனித்துவிட்டேன் என்று தாவிக் குதிக்க வேண்டாம். அங்க தேச மன்னன் உம்மை அடக்கி வைக்க வந்திடுவான்!

**கந்.தலை:** நீ தனித்துவிடவில்லை என்று தெரியும் துரியோதனரே! குற்றம் புரிந்தவன் நீ! தண்டனைக்குத் தயாராகும். உம்மைத் தண்டித்தால் உன் நாட்டுப் படை எம்மை உருத் தெரியா தாக்கிவிடும். அதையும் நாம் நன்கறிவோம். எமக்கு மானம்தான் பெரிது! அம்மானந்தனைக் காக்க சாவினும் தயங்கோம்!

**துரி:** வீண் வார்த்தை வீசாமல் தீர்ப்பதனைக் கூறிடுங்கள்!

**கந்.தலை:** தீர்மானங்கள் எதையும் நினைத்தளவில் மாற்றும் திருதராட்டிரரல்ல இங்கு தென்படும் கந்தர்வர். நீர் புரிந்த குற்றத்தின் நேர்மை வழித் தீர்ப்பு உன் மரணம் தானன்றி வேறு வழியேதுமில்லை.

இப்பொழுது காவலன் பீமனையும் அர்ச்சுனனையும் அழைத்து வருகிறான்.

**கந்.தலை:** குந்தியின் புதல்வர்களே! இங்கு வரக் காரணமேன்?

**பீமன்:** துரியனுக்கு மன்னிப்பு தான் கோரி வந்தோம் நாம்.

**கந்.இள:** என் தங்கைதனை அவமதித்தான்! அவனை மன்னிக்கும் வேண்டுகோள் விடுக்கின்றீர்! அவமானப் புண் என்றும் ஆறப்போவதில்லை அன்றோ?

**அர்ச்:** உன் தங்கை என்றால் அவள் என் தங்கை போலாவாள். இவன் செய்த தவறுக்கு என் கரத்தைத் தறித்திடுங்கள். என் பார்வைதனைப் போக்கி கண் குருடனாக்கிடுங்கள். துரியன் செய்த தவறை மன்னிக்கக் கோருகிறேன்.

**பீமன்:** மன்னிப்புக் கோருகின்றோம். மறுத்தீர்களானால் நாம் போர்க்களத்தே சந்திக்க போவதுதான் திண்ணம். மாமன்னர் ஆணை இது! மாறு என்ன கூறுகின்றீர்?

**கந்.தலை:** யாருக்கு மன்னிப்பு யாசிக்க வந்தீர்கள்? பாஞ்சாலி தன் துயிலை பறித்திட்ட பாவி இவன். படு பாதகம் புரிந்த படு பாவி இவனுக்கு மன்னிப்புக் கோருகின்றீர்- விந்தையிலும் விந்தையன்றோ?

**காந்.இள:** சாவைக் கண்டு நாங்கள் சரணடையப் போவதில்லை. குந்தி மைந்தா பீமா! குலக்கொடியாம் உங்கள் பாஞ்சாலி துயிலுரிந்த பாதகனை மன்னிக்க உங்களுக்குப் பொறுமை உண்டு. என் தங்கை மானத்தை மதியாது அழித்தொழிக்க முயன்றிட்ட மூர்க்கன் இவன். அண்ணன் என்ற நிலையில் நான் பொறுத்திருக்க முடியாது.

**பீமன்:** கேட்டாயா துரியா..? பாரத வம்சத்தின் வழித்தோன்றல்கள் என்ற பெருமைக்கே பேரிழுக்கை தேடிவிட்டாய் நீ இன்று! ஐயா பெரியவரே! வயதில் முதிர்ந்தவர் நீர்! இந்தக் கொடியவனை பழி தீர்க்கும் சபதம் நாமே முடித்திடத் திட சித்தம் கொண்டுள்ளோம். உங்களது தீர்ப்பால் துரியன் உயிர் துறந்துவிட்டால் எங்களது சபதம் எங்ஙனம் நிறைவேறும்?

**கந்.தலை:** உண்மைதான் பகன்றீர்! கொடியவன் இவனின் கட்டுகளை அவிழ்த்து விட்டு விடுதலை அளித்திடுங்கள்.

துரியோதனன் விடுவிக்கப்பட்ட வேளை கர்ணனும் துச்சாதனனும் கந்தர்வருடன் பொருத வருகின்றனர்.

-காட்சி மாற்றம்-

அஸ்தினாபுரி- துரியோதனனின் மாளிகை- மெய்க் காவலன் வருகிறான்.

**துரி:** என் உயிரைக் காப்பதற்கு பாண்டவரிடம் போனாய்? மாறாத அவமானம் நேர்வதற்கு வித்திட்டாய்! கழுத்தை உடைத்தே உன் உயிரைப் பறித்திருப்பேன்! வீரனல்லவா நீ! உன்னை விண்ணுலகம் அனுப்ப வீர வழி தானுண்டு. நீ விரும்பும் ஆயுதத்தைத் தேர்ந்தே எடுத்துக்கொள். திடமுடனே போராடி உன் முடிவைத் தேடிக் கொள்.

மெய் காப்பாளன் வாளைத் தேர்ந்தெடுக்கிறான். துரியோதனனுக்கும் அந்த வீரனுக்கும் நடக்கும் வாட் போரின் முடிவில் வீரன் மடிகிறான். அந்த வீரனைக் கொன்ற வாளை எடுத்துத் தன் வயிற்றைக் குத்தி தற்கொலை செய்ய துரியோதனன் முயலுகையில் கர்ணன் பிரவேசித்துத் தடுக்கிறான்.

**கர்ண:** நண்பா உனக்கென்ன நடந்து விட்டது இப்போது?

**துரி:** என்னைத் தடுக்காதே! கோழை ஒருவன் என் மானத்தை விற்றுவிட்டான். இத்தனைக்கும் மேலும் இத்தரையில் நான் வாழ்தல் ஏற்புடையதல்ல. என்னைக் காப்பாற்றுதற்கு வந்தவர்கள் யாரென்று பார்த்தாயா நீ அன்று? பீமனும் அர்ச்சுனனும் விரைந்தோடி வந்தார்கள். வீணன் ஒருவன் என் உயிரைக் காப்பதற்கு என் விரோதிகளை அழைத்து வந்தான். போதும் இந்த அவமானம்..! போதும் இந்த வாழ்க்கை!

**கர்ண:** பீமனும் அர்ச்சுனனும் விடுவிக்க வந்ததனை அவமானம் என்று எண்ணுவது ஆகாது. உறவு முறை என்பதனால் உற்ற கடமை என்றே எண்ணி அவர் வந்துள்ளார்.

**துரி:** கடமை..!

**கர்ண:** கடமையது தானன்றி வேறில்லை அவர் வேலை! முடி மன்னர் உயிர் காத்தல் குடிமக்கள் கடமையன்றோ? அவமானம் ஆங்கே எழுவதற்கு வழியேது..? தன்னைத்தான் கொலை செய்தல் கோழைகளின் வேலை. மாபெரிய வீரன் நீ மறந்திடலாகாது இதனை. பாண்டவருடன் பொருதும் பொழுதொன்று தான்புலரும். பழி தீர்க்க அந்நாளை வரவேற்கக் காத்திருப்போம். வில்லுக்கு விஜயன் என்று துரோணர் துணிந்திருந்தார். உள்ளபடி உலகினிலே உயர்ந்த வீரன் நானென்று உணர்த்திடுவேன் பார் அன்று!

-காட்சி மாற்றம்-

திருதராட்டிரர் அரண்மனைக்கு துரோணரும் பீஷ்மரும் வருகின்றனர்.

**திருத:** அமருங்கள்! பிதாமகரும் ஆச்சாரியப் பெருமகனும் வருவதனால் பொருள் பொதிந்த விடயமொன்று பேசிடத்தானோ என்று சிறியவனம் கருதுகிறேன்!

**பீஷ்ம:** கடுமையான விடயம்தான்! கந்தர்வர் தம்மால் கலக்கமொன்று கண்டுள்ளோம். அஸ்தினாபுரி அரசின் அரியணையில் நாளை அமரவுள்ள இளவரசன் கர்தர்வக் காவலரால் கைது செய்யப் பட்டானாம்!

**துரி:** (வந்துகொண்டே) படுத்திருக்கும் சிங்கத்தை பதுங்கிப் பிடித்தாலும் சிங்கத்தின் சீர்மை சீரழியப் போவதில்லை! தாத்தா!

**பீஷ்ம:** பெரியவர்கள் முன்னால் மரியாதை கொடுப்பதற்கு கற்றுக்கொள் மகனே!

**துரி:** மன்னிக்க வேண்டுகிறேன். யாவர்க்கும் வணக்கம்!

**திருத:** நல்லவேளை தேடி நீ வந்தாய் மகனே! உன்னைப் பற்றித்தான் உன் தாத்தா உரைக்கின்றார்!

**பீஷ்ம:** பேரனின் கதை பேச நானிங்கு வரவில்லை. அஸ்தினாபுரியதற்கும் அதன் அரியணையதற்கும் அபகீர்த்தி தடுப்பதற்கே இங்கோடி வந்துள்ளேன்.

**துரி:** தகவல் அறிந்துதான் நானோடி வந்துள்ளேன். என் அருகில் யார் இருப்பார் எதிரணியை எவர் சார்வார் என்பதெல்லாம் நான் அறிவேன்!

**துரோ:** நாட்டின் இளவரசன் கந்தர்வரின் கூண்டில் கைதியாக நிற்பது வரவேற்கும் விடயமல்ல. அங்க தேசத்துக்கதிபன் அன்பன் இடர் களையாமல் அகன்றோடிப் போனானாம்...!

**கர்ண:** சுட்டெரிக்கும் சூரியனைச் சாட்சிக் கிழுக்கின்றேன். அரண்மனை ஈதன்றி, ஆச்சாரியார் நீரன்றி வேறொருவன் இந்த விபரீதப் பேச்சுதிர்த்தால்.... வீழ்த்தியிருப்பேன் அவனை!

**துரோ:** வரம்பு கடந்திங்கு வார்த்தைகளை வீசாதே! உன் வினாக்களுக்கு என் பாணங்கள் பதிலுறுக்கும்.

**பீஷ்ம:** கோபம் தணியுங்கள் ஆச்சாரிய தேவா! அங்கத்துக்கதிபனே! ஒன்றை அறிந்து கொள்! துரியனவன் கைதான வேளையிலே அங்கு துச்சாதனன் இல்லை; உற்ற நண்பன் உயிர் காக்க உன்னை அங்கு காணவில்லை. வரலாறு கூறும் வகையான குற்றமிது. பீமனும் அர்ச்சுனனும் விரைந்து வந்தே காத்தார்கள். அவர்கள் வராவிட்டால் அஸ்தினாபுரி அரசின் இளவரசர் இருக்கை இங்கே இடருற்றுப் போயிருக்கும். துரியோதனா மகனே! மறந்துவிடு பழங்கதையை. பாண்டவரை அழைத்து வந்து பகை தீர வழிதேடு. அங்க ராஜன் வீரன்தான். ஆனாலும் அர்ச்சுனனின் அம்புகளை எதிர்கொள்ள அஸ்தினாபுரி நாட்டின் அரும்பலம் போதாது.

**கர்ண:** அஸ்தினாபுரிக்கும் துரோணரின் சீடனவன் அர்ச்சுனன் வீசும் அம்புகளுக்கும் இடையே இந்த கர்ணனவன் நின்று கவசமாகக் காப்பேன்!

**துரோ:** அர்ச்சுனனின் அம்பின் அரிய உருசி கண்டதுண்டோ?

**கர்ண:** ஆச்சாரியார் தாங்கள்! வீண் புகழ்ச்சி வீசுவது முறையல்ல தங்களுக்கு! விரும்பினால் கூறுங்கள்! வகை வகையாய் மணி முடிகள் மன்னவரின் காலடியில் வரிசையதாய்க் குவிப்பேன். தெய்வீக சக்தியுள்ள அம்பெதுவும் அற்றவன் யான். வீரமதைக் காட்டும் திறமை மிகு போர் புரிவேன்!

பின்னணிப் பாடல்:

- பொறாமைத் தீயது பற்றி எரிந்திடில் பெரு மழையதுவும் அணைக்காதே
- பீஷ்மரும் துரோணரும் வேறு வேறாயினும் பேரறிவதனை பிரித்தெறிவாரோ?...

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

அருள் ஜுவலர்ஸ்



4
3
6
3
3
1

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


தருவது வீடியோ டெ

# நிழலில் பிரமிக்க வைக்கும் கலைஞர்கள் நிஜத்தில் சோகம்!



தினமுரசு வாரமலர்


Kala



JEWELLERY

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

4
3
3
6
8
6


திரையில் அதிரடி சண்டைக் காட்சிகளையும், அதி தீர சாகசங்களையும் கண்டு சிலிர்த்துப் போகிறோம். பொழுதும் சுவாரசியமாகப் போகிறது.

ஆனால், சண்டைக் காட்சிகளில் ஈடுபடும் நடிகர்களின் வாழ்வில் சோகங்கள் நிறைந்தும் பின்னால் இருப்பது தெரிவதில்லை.

படத்தில் காலை உயரத்தூக்கி 'கிக்' பண்ணும் போஸில் இருப்பவர் வால்ட்டர். 50க்கு மேற்பட்ட ஹொலிவூட் படங்களில் நடித்த ஸ்டண்ட் நடிகர். படப்பிடிப்பின்போது விபத்தில் சிக்கி நடமாட முடியாத நிலையில் படுக்கையில் வீழ்ந்தார்.

இனி நடமாட முடியாது என்று மருத்துவர்கள் கைவிரித்தனர். ஆனால் வால்ட்டரின் மனஉறுதி அதைக் கேட்கவில்லை- எழுந்தார். மெல்ல மெல்ல நடந்தார். பயிற்சிகள் செய்தார். பாரம் தூக்கினார். முயற்சி பலன் தந்தது. மீண்டும் ஸ்டண்ட் நடிகராகி திரையில் தோன்றிவருகிறார்.

உயரமான கட்டடத்திலிருந்து பாய்தல், எரியும் தீப்பிழம்பில் பாய்தல் என்பதெல்லாம் இவருக்கு அத்துப்படி.

இப் போதும் கதாநாயகன் அல்ல- நிஜ வீரர் இவர்.



## சந்தையில் புதுசு



கனக்டிகட் மாநில நியூ பிரிட்டன் பொலிசார் தங்களுடைய குற்றத் தடுப்புப் பணிகளுக்கு உதவுவதற்கு புதிய வாகனம் ஒன்றினை தயாரித்துள்ளனர்.

மூன்று சக்கரங்களைக் கொண்ட மோட்டார் வண்டி இதுவாகும். மத்திய கனக்டிகட் மாநில பல்கலைக்கழக-சூரிய சக்தி ஆராய்ச்சிப் பிரிவினர் இதனை வடிவமைத்துள்ளனர். சாதாரண மோட்டார்

இயந்திரத்துக்குப் பதிலாக இதில் 12 வோல்ற் வலுவுள்ள சூரிய சக்தியைச் சேமித்துவைத் திருக்கும் மின்கலம் பொருத்தப்பட்டுள்ளது. குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க இந்த முச்சக்கர மோட்டார் சைக்கிளை பொலிசார் பயன்படுத்துகின்றனர்.

செலவு குறைவு.
பயன் அதிகம்.





## கையோங்கும் போரும் கையேந்தும் வாழ்க்கையும்

மத்திய அமெரிக்க நாடான ஹெயிட்டியில் சர்வாதிகார ஆட்சியின் இரும்புக்கரங்கள் நீண்டபோது சாதாரண மக்கள் இழப்பதற்கு எதுவுமற்றவர்களாகினர்.

அகதிகளாக அமெரிக்கா நோக்கி ஓடினர். இப்போது அமெரிக்கா தலையிட்டு ஹெயிட்டியில் அமைதியை நிலைநாட்ட முயற்சி நடக்கிறது. ஒடுக்குமுறையும், போரும் மக்களின் வாழ்வை மோதி மிதித்து நாசம் செய்து விடுகின்றன. உலகெங்கும் இதே கதைதான்.

போர் என்றால் மனிதாபிமானத்தின் அகராதியில் சோகம் என்றுதான் அர்த்தம்.

படத்தில் இருப்பது ஹெயிட்டியில் பட்டினியால் கையேந்தும் மக்கள். கீழே மக்கள் விரோத ஹெயிட்டி பொலிஸ் ஆயுதங்களோடு!






## இப்படியும் புதுமை

பிறந்த நாளுக்கு மகிழ்வோடு கேட்டி வெட்டும் கேக்கிலும் இந்த பெண் செய்துள்ளாள் ஒரு புதுமை. பிறக்கும்போது ஆடையின்றித்தானே பிறந்தோம். என்றாலும் நாகரிகம் கருதி சிறியதான ஆடையுடன் சாய்ந் திருக்கும் இரு ஆண்களின் உருவத்தை அமைத்து அலங்காரமாய் கேக் தயாரித்துவிட்டார். அவளோ இவளை கேக் இவளை தயாரிப்போ புதுமை. ஆக மொத்தம் இவளை இவ்வோ புதுமை அடி தூள்.

## ஹீரோவின் காதல்

'ரம்போ' திரைப்படத்தின் மூலமாக வெற்றிவேகமாக பிரபலத்தின் உச்சிக்கு சென்றவர் சில்வெஸ்ரர் ஸ்ரெலோன். அதன்பின்னர் ஹொலிவூட் சினிமாவில் புகழ்கொடிதான்.

திரையில் எதிரிகளை கதிகலங்க வைக்கும் சில்வெஸ்ரர் ஸ்ரெலோனின் மனதை கலக்கியிருப்பவள் ஆன்டிரியா வெய்சர். மொடல் அழகி. கட்டான உடல். சில்வெஸ்ரர் மயங்கியது வியப்பல்ல.

ஏற்கனவே இரு பெண்கள் சில்வெஸ்ரர் வாழ்வில் குறுக்கிட்டனர். ஒருத்தி அவர் மனைவி ஜெனிபர். இன்னொருத்தி ஜெனிஸ் டிக்கின்சன். இருவரோடுமே சில்வெஸ்ரருக்கு ஒத்துப்போக வில்லை. இப்போது கிடைத்திருக்கும் புதிய காதலி அவருக்கு ஈடுகொடுக்கிறார். உடற்பயிற்சியில், பொது நிகழ்ச்சியில் என்று இருவருமே ஒன்றாகவே காணப்படுகிறார்கள்.

சில்வெஸ்ரர் ஸ்ரெலோனுக்கு வயது 48. காதலி ஆன்டிரியாவுக்கு வயது 22. காதலுக்கு பிரதானம் வயசல்லவே. மனசுதானே! ஜமாய்க்கட்டும்!!